بسم الله الرحمن الرحيم

زنا کے اسباب (ٹمل)

# விபச்சாரத்தின் வித்துக்கள்


உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்.:.பிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**



**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | விபச்சாரத்தின் வித்துக்கள் |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 141 |
| விலை | : | ரூ.45.00 |
| முதல் பதிப்பு | : | ஜுலை - 2026<br>ஸஃபர் - 1448 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 14 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல்: 89256 11688

# பொருளடக்கம்

1. மதிப்புரை!........................................................8
2. வாழ்த்துரை!.......................................................11
3. விபச்சாரத்தின் வித்துக்கள்...........................................13
4. மஹ்ரம் அல்லாதவரைப் பார்த்தல்.....................................15
5. மஹ்ரமல்லாத மற்றவர்களுடன் பேசுதல்..............................18
6. பேச்சுக்களால் பேச்சு வளரும்.........................................19
7. குரலின் மாயாஜாலம்...................................................20
8. தொலைபேசியா அல்லது நரக பேசியா.................................23
9. அரட்டையடிப்பதா அல்லது ஏமாற்றுவதா!..........................24
10. பயிற்சி மையமா? அல்லது மன அழுத்த மையமா?.............24
11. பணிபுரியும் பெண்கள்.................................................26
12. ஹஜ்ரத் உமர் ﵁ அவர்களின் நடைமுறை...........................27
13. மஹ்ரமல்லாதவருடன் தனியாக அமர்ந்திருப்பது..................28
14. ஹஸன் பஸரி ﵀ மற்றும் ராபியா பஸரிய்யா ﵀ அவர்கள்.......28
15. பர்ச்சீசா துறவியின் பரிதாபமான முடிவு............................29
16. சஜாஹி மற்றும் பொய்யனான முசைலிமாவும்.....................46
17. மஹ்ரமல்லாதவருடன் மறைமுகமான பழக்கம்.....................56
18. முதல் படி (Use the girl).............................................63

19. இரண்டாம் படி (Abuse the girl)....................................64

20. மூன்றாம் படி (confuse the girl)..................................64

21. நான்காம் படி (Refuse the girl)....................................64

22. விளைவுகள்..........................................................................67

23. அறிவுரை..............................................................................68

24. மஹ்ரம் அல்லாதவருடன் தனியாகப் பயணம் செய்தல்......71

25. பாட்டுப் பாடுவது விபச்சாரத்தை நோக்கிய ஒரு படியாகும்......78

26. இசை மற்றும் பாடலினால் ஏற்படும் தீய விளைவுகள்....81

27. சைத்தானின் ஆழ்ந்த சதித்திட்டங்கள்..........................92

28. உணரமுடியாத இரகசியத் தகவல்கள்...........................92

29. புலன்சார் தகவல்.............................................................93

30. புலன்சாரா தகவல்..........................................................93

31. விளம்பரமா அல்லது வேட்டையா.....................................95

32. சைத்தானின் பொறி..........................................................95

33. பின்னணிச் செய்தி...........................................................97

34. இசைத் துறை..................................................................100

35. ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மை.........................................100

36. திரைப்படங்களும் நாடகங்களும்...................................102

37. நாடகம்...........................................................................102

38. திரில்லர் ஆக்ஷன்..........................................................102

39. காமெடி....................................................................103

40. கார்ட்டூன்................................................................103

41. அறிவியல் புனைக்கதைகள்........................................103

42. காதல்......................................................................104

43. இணையத்திற்குள்ளா? (அ) இரும்பு வளையத்திற்குள்ளா?......108

44. வீடியோ கேம்கள்......................................................111

45. நாவல்களும் கதைகளும்............................................113

46. குடும்பக் கட்டுப்பாடு.....................................................114

47. ஷரியத் சட்டங்களுக்கு எதிரான விரோதப் போக்கு............115

48. கலாச்சார விளைவுகள்...............................................116

49. விபச்சாரத்தை ஊக்குவித்தல்......................................117

50. பொருளாதாரத் தாக்கம்..............................................118

51. மனித ஆரோக்கியத்தில் ஏற்படும் தாக்கம்.......................119

52. பாவத்தின் பாதைகளை அடைத்த பாச நபியின் ஷரீஅத்.......120

53. பெண்ணின் பெயர்.....................................................120

54. பெண்களின் குரல்.....................................................120

55. பெண்ணின் குரலில் கொஞ்சிக் குலாவும் தோரணை இருக்கக்கூடாது.....................................................121

56. பெண்ணுக்கு ஸலாம் கூறுதல்.....................................122

57. பெண் பயன்படுத்திய மீதத் தண்ணீர்..............................123

58. பெண்ணின் உடைகள்....................................................123

59. பெண்ணின் கூந்தல்...................................................123

60. பெண்கள் மறைவான ஆபரணங்களைக் காட்டக்கூடாது......123

61. பெண்கள் பர்தா அணியாமல் வெளியே செல்லக்கூடாது.....125

62. பெண்கள் அலங்கரித்துக் கொண்டு வெளியே செல்லக்கூடாது.......................................................125

63. பெண்கள் நறுமணம் பூசிக்கொண்டு வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது.......................................................125

64. பெண்களின் நடை பாதை.............................................126

65. பெண்கள் மஹ்ரமல்லாத ஆண்களுடன் கைகுலுக்கக் கூடாது................................................................127

66. பெண்கள் மஹ்ரமல்லாத ஆணுக்குக் கடிதம் எழுதக் கூடாது................................................................128

67. ஆண்கள் மற்றவர்களின் வீடுகளுக்குள் எட்டிப் பார்க்கக் கூடாது................................................................128

68. ஆண்கள் தங்கள் தாய்மார்களிடமும் அனுமதி கேட்க வேண்டும்...............................................................130

69. ஹஜ்ரத் உமர் ﵁ அவர்களின் பேணுதல்........................131

70. மக்கள் நடமாடும் தெருக்களில் ஆண்கள் அமரக் கூடாது.....131

71. ஆணின் முன்பாக மற்றொரு பெண்ணை வர்ணித்தல்.............132

72. கணவன் தன் மனைவியின் இரகசியத்தை வெளிப் படுத்தக்கூடாது.......................................................132

73. ஆணும் பெண்ணும் இச்சையைத்தூண்டும் ஆபாசப் பேச்சுக்களைத் தவிர்த்தல்........................................133

74. இரு ஆண்களோ இரு பெண்களோ ஒன்றாக உறங்கக்கூடாது.....................................................133

75. படுக்கைகளைப் பிரித்தல்...........................................134

76. திருமணத்தில் தேவையற்ற தாமதம்..........................135

77. தாமதமே தவறுக்குக் காரணம்.................................136

78. மானிடர்க்கு ஆகாப் பால் மாக்களுக்கே உணவாகும்...........138

79. மாண்பானவர்களும் மனிதர்கள் தானே!.......................138

## மதிப்புரை!

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

அல்லாஹ் மனித சமுதாயத்தைப் படைத்து, அவர்கள் பூமியில் அமைதியாகவும், கண்ணியமாகவும் வாழ்வதற்கேற்ற உன்னதமான வாழ்க்கை நெறியை இஸ்லாத்தின் மூலம் வழங்கியுள்ளான்.

மனிதனின் உடலும், உள்ளமும் தூய்மையாகப் பேணப்பட வேண்டும் என்பதில் இஸ்லாம் மிகக் கடுமையான வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ளது. ஒழுக்கம் என்பது ஒரு தனிமனிதனின் அழகு மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த சமுதாயத்தின் அஸ்திவாரம் ஆகும்.

இன்றைய நவீன உலகில், நாகரிகம் என்ற போர்வையிலும், தாராளமயம் என்ற பெயரிலும் ஒழுக்கக்கேடுகள் மிக வேகமாக பரவி வருகின்றன. ஒரு சமுதாயத்தை ஆன்மீக ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சீரழிக்கும் மிக கொடிய பாவங்களில் ஒன்றாக விபச்சாரம் திகழ்கிறது.

இஸ்லாம் விபச்சாரத்தை வெறும் பாவமாக மட்டும் பார்க்கவில்லை; மாறாக, “நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கிறது” என்று எச்சரிப்பதன் மூலம், அதை நோக்கி இட்டுச்செல்லும் அனைத்து வாசல்களையும் அடைக்க உத்தரவிடுகிறது.

“**விபச்சாரத்தின் வித்துக்கள்**” என்ற இந்த நூல், விபச்சாரம் என்ற பெருங்குற்றத்தை சமுதாயம் எப்படி அணுகுகிறது என்பதை விட, அது எப்படி ஒரு மனிதனின் வாழ்வில்

முளைவிடுகிறது என்பதை மிக ஆழமாக ஆராய்கிறது.

- கண்களின் பார்வை,
- கட்டுப்பாடற்ற இச்சைகள்,
- திரைப்படங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தவறான தாக்கம்,
- பெற்றோரின் கவனக்குறைவு,
- இறை அச்சம் (தக்வா) இல்லாமை

போன்ற "வித்துக்கள்" எவ்வாறு ஒரு மனிதனை விபச்சாரம் என்ற பாதாளத்தில் தள்ளுகின்றன என்பதை குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் இந்த மொழி பெயர்ப்பு நூல் மிகத் தெளிவாக விளக்குகிறது.

தீமையைத் தடுப்பதை விட, தீமைக்கான காரணிகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிவதே புத்திசாலித்தனம். அந்த வகையில், விபச்சாரம் என்ற தீமைக்கு வித்திடும் காரணிகளை அடையாளம் கண்டு, அவற்றிலிருந்து நம் இளைஞர்களையும், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் எவ்வாறு பாதுகாப்பது என்பதற்கான அரிய வழிகாட்டுதல் களை இப்புத்தகம் தாங்கி நிற்கிறது.

இளைய தலைமுறையினரும், பெற்றோர்களும் அவசியமாகப் படிக்க வேண்டிய ஒரு விழிப்புணர்வுப் பெட்டகம் இது.

இந்த உர்து உரையை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பு செய்த நற்முயற்சியை எல்லாம் வல்ல அல்லாஹ் அங்கீகரித்து, இதற்குரிய நற்கூலியை இம்மையிலும் மறுமையிலும் வழங்கியருள்வானாக. ஆமீன்.

மௌலானா **முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**
(தாமத் பரக்காத்துஹூ)

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں۔ چنانچہ ارشاد باری تعالی ہے۔ "وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ" (اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف مما لک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیءٍ

# வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும். அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பகீர் துல்ஃபிகார் அஹ்மது நக்ஷபந்தி [ரஹ்]**

# விபச்சாரத்தின் வித்துக்கள்

மனித இனம் நிலைத்திருப்பதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே பாலியல் ஈர்ப்பையும், இனக்கவர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளான். உண்மையில் மனித உடலில் இந்தத் தேவை மேலோங்கும் போது, மற்ற எல்லாத் தேவைகளும் ஒடுக்கப்பட்டு விடும்.

அப்போது மனதில் ஒரு வித குழப்பமும், மறைவிடங்களில் கிளர்ச்சியும் ஏற்பட ஆரம்பிக்கும். பிறகு தூக்கம் கெட்டுவிடும். சில வினாடிகள் கூட திக்ரு செய்வதற்கும், வணங்குவதற்கும் மனம் விரும்பாது. என்ன நடந்தாலும் சரி எப்படியாவது அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவனுடைய மனம் விரும்பும். இது போன்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாலும், புத்தி குழப்பமடைந்து நல்லது கெட்டதற்கும் இடையிலான வேறுபாடு மறைந்து விடும்.

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوَاتِ مِنَ النِّسَاءِ

**இதையே அல்லாஹ் குர்ஆனில் "பெண்கள் போன்ற விரும்பத்தக்க விஷயங்களின் மீதான அன்பு மனிதர்களுக்கு அலங்கரித்துக் காட்டப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளான்.**

ஒரு ஆணுடைய சிந்தனையில் பாலியல் வேட்கை உச்சத்தைத் தொட்டிருக்கும் சூழலில் ஒரு பெண் தன்னோடு உடலுறவு கொள்ள அவனுக்கு இலேசான வாய்ப்பளித்தாலும் தவறு நிகழ்வதென்பது உறுதியானதாகும். அப்போது அவன் தன்னைக் கட்டுப்படுத்தி அத்தவறிலிருந்து விலகியிருப்பதென்பது நபிமார்களின் தன்மையை ஒத்த காரியமாகும்.

அவ்வாறே ஒரு ஆணும் ஒரு பெண்ணை ஆசையூட்டி மயக்க நினைத்தால் அவளும் அப்பாவித்தனமாக அவனுடைய வலையில் சிக்கிக்கொள்வாள் என்பதும் வெளிப்படையானதே.

ஒரு ஆண் ஒட்டகம் இனச்சேர்க்கைக்காக கத்தும்போது, பெண் ஒட்டகம் தன்னிலை மறப்பதும், ஒரு ஆண் ஆடு காம வேட்கையால் கத்தும்போது பெண் ஆடு மயங்குவதும், ஆண் புறா ஒரு வித ஓசை எழுப்பும் போது பெண் புறா குதூகலிப்பதும், சேவல் தன் துணையோடு அணைய அழைக்கும் போது கோழி குணிந்து அமர்வதும், அதேபோல், ஒரு ஆணுடைய அன்பு மற்றும் ஆசை வார்த்தைகளால் பெண் அடிபணிவதும் அனுதினமும் நாம் காணக்கூடிய இயற்பியல் விதிமுறைக்கு ஒத்த நிகழ்வுகளாகும்.

ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் விலகி இருக்க வேண்டும் என்பதே பொதுவான நியதியாகும். ஆனால் அவர்களில் உடலுறவு கொள்ள அனுமதிக் கப்பட்டவர்கள் மட்டுமே தங்களுக்குள் நெருக்கமாக இருப்பது கூடும்.

இந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே ஷரியத் திருமணத்தைக் கட்டளையிட்டுள்ளதுடன், விபச்சாரத்தை விலக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَ لَا تَقْرَبُوْا الزِّنَا

**விபச்சாரத்தின் அருகில் கூட செல்லாதீர்கள்.**

விபச்சாரம் என்பது மிகவும் கடுமையான குற்றம்

என்பதையும், அதன் அருகில் செல்வது கூட தடை செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த வசனம் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. இதை இன்னும் வேறுவிதமாக சொல்வதென்றால் விபச்சாரத்திற்கு வழிவகுக்கும் ஒவ்வொரு செயலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்று சொல்லலாம்.

பின்வரும் தலைப்புக்களில் இவ்வாறான காரணங்களைப் பற்றியே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 1] மஹ்ரம் அல்லாதவரைப் பார்த்தல்.

மஹ்ரம் அல்லாதவரைப் பார்ப்பதிலிருந்தே விபச்சாரம் என்பது தொடங்கிவிடுகிறது. அதனால்தான் இஸ்லாமிய ஷரீஅத் சட்டமானது பெண்களை வீட்டிலேயே இருக்குமாறு கட்டளையிட்டுள்ளது. ஏதேனும் மார்க்க அடிப்படையிலான தேவையை முன்னிட்டு அவர்கள் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தால், அவர்கள் முழுமையான முக்காடு அணிந்த நிலையில் வெளியே செல்லுமாறு கட்டளையிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் பார்க்கக்கூடாது மேலும் அதனால் அவர்களின் உள்ளங்களில் விபச்சார எண்ணம் எழக்கூடாது என்பதற்காக இரு சாராரும் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டுள்ளனர்.

பர்தா அணிவதில் அலட்சியமும், கவனக்குறைவும் இருக்கும் பட்சத்தில் மஹ்ரம் அல்லாத ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் பார்க்கும் போது, அவர்களின் உள்ளங்களில் காம உணர்வு தாமாக விழித்தெழும். அத்துடன் நஃப்சும், ஷைத்தானும் குதிரை சுமந்து சென்ற

கடிதம் போல காரியத்தை இலகுவாக்கி, அவர்களை விபச்சாரம் செய்யத் தூண்டிவிடுவார்கள்.

இன்னும் மஹ்ரமல்லாத ஒரு அந்நியருடன் பழகுவதில் வெளிப்படையான பல தடைகள் உள்ளன. ஆனால், திருமணம் முடிக்க அனுமதியுள்ள ஒரு நெருங்கிய உறவினருடன் பழகுவதில் பல சுலபங்கள் உள்ளன. அதனால்தான் ஹதீஸில்,

اَلْحَمُوْ الْمَوْتُ

**“மச்சான் என்பவன் மரணம் போன்றவன்” என்று கூறப்பட்டுள்ளது.**

எனவே தான் இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் மச்சான்கள் மற்றும் கொழுந்தன்கள் போன்ற உறவினர்களுக்கு முன்னால் பர்தாவைப் பேண வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. பொதுவாக சிற்றன்னை, மாமன் வழி, குப்பி மற்றும் சிச்சா வழியாகவே உறவுகளின் தொடர்ச்சி நீள்கிறது. இவை நான்குமே மிக முக்கிய உறவுகளாகும். அவை மிகவும் நுட்பமானவை மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானவையும் கூட.

இவ்வழியாக வரும் உறவுக்கார ஆண்களை பொதுவாக பெண்கள் சகோதரர்கள் என்றே அழைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அதன் வழியாகவே ஆபத்தும் நுழைந்து கொள்கிறது. இதையே “மனைவியின் சகோதரி பாதி மனைவி போன்றவள்” என்று வழமையில் கூறப்படுகிறது. அவளை சமாளிப்பதே உண்மையான சாமர்த்தியம் ஆகும்.

ஒரு பெண்ணின் பலவீனம் என்னவென்றால், ஒருவரின் ஆளுமை மற்றும் மென்மையான பேச்சு, இன்னும்

நற்குணத்தால் ஈர்க்கப்பட்டால் அவள் அந்த அந்த நபரிடம் மென்மையாகி, நெருங்கிப் பழக ஆரம்பித்துவிடுவாள்.

ஒரு பஞ்சாபி கவிஞர்,

"பெண் ஒருவரிடம் கருணை காட்ட ஆரம்பித்தால்

பாத்திரத்தை விற்றாவது பசியைப் போக்குவாள்" என்று கூறியுள்ளார்.

இதைத் தான் தமிழில் "தன் ஊண் கெடுத்துப் பிறர் ஊண் வளர்த்தல்" என்று கூறுவார்கள். இவ்வாறு தான் விரும்பிய நபருக்காக தன்னையே தாரை வார்த்து தரக்கூடியவளாக அவள் மாறிவிடுவாள்.

எனவே மஹ்ரம் அல்லாத எவரையும் பார்க்காமல், மேலும் எவருக்கும் தன்னைக் காட்டாமல் இருப்பதில் தான் ஒரு பெண்ணிற்கு நிரந்தர பாதுகாப்பு உள்ளது. அவ்வாறே எந்த ஒரு அந்நியப் பெண்ணையும் பார்க்காமல் தன் பார்வையைத் தாழ்த்திக்கொள்வதில் தான் ஒரு ஆணிற்கு பாதுகாப்புள்ளது. அவளுடைய சோதனையில் வீழ்ந்து, மறுமை நாளில் நரகத்தில் முகம் குப்புறத் தள்ளப்படாமல் இருப்பதற்கு இதுவே உகந்ததாகும்.

மஹ்ரமல்லாத நபரைப் பார்ப்பது தடைசெய்யப் பட்டுள்ளதைப் போலவே, அவருடைய புகைப்படத்தைப் பார்ப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறே செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படும் திரைப்படப் பக்கங்களை அல்லது சாலையோர விளம்பரப் பதாகைகளைப் பார்ப்பதும் கூடாததே.

"பட்டத்தின் நூலைத் தளர்த்திக் கொண்டே இருந்தால், அது எங்காவது சிக்கியே தீரும்" என்பது யதார்த்தமானதாகும்.

ஆகையால், விபச்சாரத்தை விட்டு விலகியிருக்க விரும்பும் ஒருவர், மஹ்ரம் அல்லாதவரை பார்ப்பதை விட்டு முடிந்தவரை தவிர்ந்திருக்க வேண்டும்.

"வேலை தொடங்கவே இல்லை என்றால், அது முடியவும் போவதில்லை."

## 2] மஹ்ரமல்லாத மற்றவர்களுடன் பேசுதல்

மஹ்ரமல்லாதவர்களுடன் பேசுவதும் விபச்சாரத்திற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

அதனால்தான், பெண்கள் எப்போதாவது மஹ்ரமல்லாத ஒரு ஆணுடன் பேச நேர்ந்தால், தங்கள் குரலை மென்மையாகவும், இளகியதாகவும் ஆக்கிக்கொள்ளக் கூடாது என்றும், கொஞ்சும் தோரணையிலோ அல்லது வார்த்தைகளை அலங்கரித்தோ பேசக்கூடாது என்றும் திருக்குர்ஆன் தடை செய்துள்ளது.

فَلَا تَخْضَعْنَّ بِالْقَوْلِ فَيَطْمَعُ الَّذِي فِي قَلْبِهِ مَرَضٌ وَ قُلْنَ قَوْلًا مَعْرُوْفًا

**"மேலும், குழைந்து பேசாதீர்கள்; ஏனெனில், எவருடைய இதயத்தில் நோய் உள்ளதோ, அவர் ஆசைப்படத் தொடங்குவார். நீங்கள் நியாயமானதையே பேச வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.**

ஒரு பெண் பர்தாவினால் தன்னை முழுமையாக மறைத்துக் கொண்டு அந்நிய ஆணிடம் பேசினாலும், அவள் தன் குரலை இனிமையாகவும், கவர்ச்சியாகவும் ஆக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக, தன் குரலை சற்று கடினமானதாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆண்களின் ஆசையைத் தூண்டக்கூடிய விதத்தில் நீட்டி முழங்கி கவர்ச்சியாக பேசுவதைத் தவிர்ப்பது கட்டாயமாகும்.

மஹ்ரமல்லாத ஒரு ஆணுடன் பேசும்போது காமத்துடனும், பகட்டான நடத்தையுடனும் பேசக்கூடாது. மாறாக, தெளிவாகவும், வெளிப்படையாகவும், இன்னும் சுருக்கமாக பேச இருக்க வேண்டும். இரண்டு வாக்கியங்களில் சொல்ல வேண்டியதை, ஒரே வாக்கியத்தில் சொல்வது சிறந்தது. ஏனெனில் அடுத்தடுத்து பேச்சை வளர்த்துவதற்கு துணிவு பிறக்கக் கூடாது என்பது முக்கியமானதாகும்.

## பேச்சுக்களால் பேச்சு வளரும்

பொதுவாக மஹ்ரமல்லாத ஒரு ஆணும், பெண்ணும் தயக்கமின்றிப் பேசப் பழகும்போது, விஷயம் ஒரு படி மேலே செல்கிறது. அதாவது, ஒருவரையொருவர் காண்பதற்கு உள்ளம் ஆசைப்படும். இதற்கான ஆதாரம் திருக்குர்ஆனிலேயே காணப்படுகிறது.

பூமி படைக்கப்பட்டதிலிருந்து இவ்வுலகிற்கு சுமார் 1,24,000 நபிமார்கள் வந்து சென்றிருந்தாலும் அவர்களில் எவரும் இவ்வுலகிலேயே அல்லாஹ்வைக் காண வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை.

ஆனால் ஹஜ்ரத் மூஸா عليه السلام அவர்கள் மட்டுமே,

رَبِّ اَرِنِيْ اُنْظُرْ اِلَيْكَ

**“என் இறைவா, உனது முகத்தை எனக்குக் காட்டுவாயாக” என்று கேட்டார்கள்.**

ஏனெனில் ஹஜ்ரத் மூஸா عليه السلام அவர்கள் அல்லாஹ்வுடன் உரையாடுவதற்காக தூர் மலையை நோக்கி அவ்வப்போது செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வுடன் தொடர்ந்து பேசி வந்த காரணத்தால், அவர்களுடைய உள்ளத்தில் உண்மையான நேசரைக் காண வேண்டும்

என்ற விருப்பம் வளர்ந்தது என்று விரிவுரையாளர்கள் எழுதியுள்ளனர். தொடர் உரையாடல்களால் பேச்சு அதிகரிக்கும் என்பதை இது நிரூபிக்கிறது.

ஆரம்பமாக தொடர்பு என்பது வார்த்தையில் தொடங்கி பிறகு நேருக்கு நேர் சந்திப்பில் வளர்ந்து இறுதியாக கூடலில் முடிவடைந்து விடும்.

**“நீ தெய்வமுமல்ல, என் அன்பு மலக்குகளின் அன்பைப் போன்றது மல்ல.”**

**“நாம் இருவரும் மனிதர்கள் தான் என்றிருக்க நமக்குள் ஏன் இத்தனை திரைகள்.”**

திரைகள் அகற்றப்படும்போது, ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் தருணம் ஏற்பட்டு, அதன் விளைவாக அவமானமும் இழிவும் மட்டுமே மிஞ்சி இருக்கும் அவலம் உருவாகிவிடும்.

## குரலின் மாயாஜாலம்

ஒரு பெண்ணின் குரல் என்பது பர்தாவின் வரையறைக்குள் வரக்கூடியது அல்ல. எனவே அவள் அவசியமான தருணங்களில் மஹ்ரமல்லாத ஒரு ஆணுடன் பேசுவதோ அல்லது தொலைபேசியில் பிறருடைய குரலைக் கேட்பதோ தடுக்கப்பட்டதல்ல.

ஆனால் அவளுடைய குரலில் ஒரு வகையான ஈர்ப்பு உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதனால்தான் சட்ட வல்லுநர்கள் பாங்கு சொல்வதற்கு பெண்களுக்கு அனுமதி வழங்கவில்லை. ஏனெனில் இனிமையான குரலில் சொல்லப்படும் பாங்கின் மூலம் குழப்பம் ஏற்படுவதற்கான அபாயமுள்ளது. இதற்குச்

சான்றாக ஒரு வானொலியில் செய்தி அறிவிப்பாளராக இருப்பவருக்குப் பார்க்காத பல மறைவான காதலர்கள் இருப்பதைக் கூறலாம். இது குரலும் பிறரை ஈர்க்கவல்லது என்பதற்கு போதுமான சாட்சியாகும்.

அதனால்தான் மஹ்ரமல்லாத ஒருவருடன் பேசும்போது பொருத்தமான தொனியில் பேச வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் குடும்ப நிர்பந்த சூழலால் வியாபாரம் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் பெண்கள் பெரும் ஆபத்தில் உள்ளனர்.

கடைக்காரர்கள், தையல்காரர்கள், நகை வியாபாரிகள், சாயமிடுபவர்கள், தள்ளுவண்டி கடைக்காரர், மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் போன்ற அனைவர்களிடமும் மிகவும் கவனமாகப் பேச வேண்டும்.

பெரும்பாலும் ஆண்கள் ஒரு பெண்ணை காதல் எனும் மாய வலையில் சிக்க வைக்க எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு பெண் சிறிதளவு தளர்வைக் காட்டினாலும், விஷயம் எல்லை மீறிப் போய்விடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஒரு கடை வைத்துள்ள படிப்பறிவில்லாத வாலிபனிடம் கல்லூரிப் பெண்கள் வந்து, “நீ என்ன செய்ய வேண்டுமோ விரைவாகச் செய்து கொள். நாங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்” என்று கூறுவார்களாம். ஆகவே, அவன் பொருட்களைக் காட்டுவது போல் பாசாங்கு செய்து, அவர்களைக் கடையில் ஒரு மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்று ஹராமான செயல்களைச் செய்து வந்ததாகக் கூறினான்.

பெண்கள் பெரும்பாலும் துணி தைக்கக் கொடுக்க

தையல்காரரிடம் செல்லும் போது தைப்பதற்கு அளவுத்துணிகளையேக் கொடுக்க வேண்டும். புதிய ஸ்டைலில் கச்சிதமான அளவில் ஆடைகளைத் தைத்துத் தருவதாக பாசாங்கு செய்து,அவர்களுடன் வெளிப்படையாகப் பேசுவதற்கு அந்த தையல்காரனுக்கு வாய்ப்பை உருவாக்கி தந்து விடக்கூடாது. பல நேரங்களில், புதிய ஆடைகள் தைக்கின்ற சாக்கில் அவர்கள் அணிந்திருக்கும் பழைய ஆடைகளைக் கழற்றும் வேலை நடப்பதைக் கேள்விப்படுகிறோம்.

நகை வியாபாரிகளின் வேலையே அலங்காரத்துடன் தொடர்புடையது. எனவே மோதிரங்களையும், வளையல் களையும் வாங்கக்கூடிய பெண்கள் சில சமயம் அவர்களிடமே அவற்றை அணிவித்துவிடக் கூறுகின்றனர். இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

**கைகளுடன் கைகளை கொடுத்துவிட்ட பிறகு, மீதம் என்ன இருக்கப் போகிறது?**

**என் இலக்குகள் எளிதாகிவிட்டன, இலையுதிர் கால நாட்களும் கூட மாறிவிட்டன.**

**உன் கை என் கைக்குள் வந்த போது, விளக்குகளால் பாதைகள் பிரகாசித்தன.**

மருத்துவரிடம் சென்றால் நோய் தொடர்பான நிலைமைகளை கூற வேண்டும். எனவே நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உடலுக்கு சிகிச்சை தேடிப் போய் உள நோயை வாங்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. மருத்துவர்களில் பலர் பெண் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப் போய் காதல் எனும் நோயில் சிக்கிக் கொள்கிறார்கள்.

## (தொலைபேசியா அல்லது நரக பேசியா)

## Cell Phone அல்லது hell phone

இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, செல்போன் பயன்பாடு சர்வ சாதாரணமாகி விட்டது. அனைத்து செல்போன் நிறுவனங்களும் இஷா முதல் ஃபஜ்ர் வரை இலவச அழைப்பு வசதிகளை விசேஷமாக வழங்குகின்றன. எனவே இந்த நேரம் தான் தீய, மற்றும் காமப் பேச்சுக்களின் தருணமாகும். இதன் மூலம் இளம் பையன்களும், பெண்களும் தங்கள் அறைகளில் தனியாக அமர்ந்து, மணிக்கணக்கில் செல்போன்களில் பேசிக் கொள்கிறார்கள்.

உடன் பிறந்தவர்களும், பெற்றோரும் அருகில் இருந்தாலும், படுக்கையில் இருந்தபடியே குறுஞ்செய்திகள் மூலம் உரையாடல் தொடர்கிறது. இந்த அடிப்படையில், இந்த செல்போன்கள் ஹெல்போன்களாகவே மாறிவிடுகின்றன.

சில நேரங்களில் செல்போனை ஒலிக்க வைப்பதற்குப் பதிலாக அதிர்வு நிலையில் (vibration) வைத்து விடுகின்றனர். இதனால், மணி சப்தமும் கேட்காது. ஆனால் போன் அதிர்ந்தவுடன், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளமும் சேர்ந்தே அதிரத் தொடங்கிவிடும்.

செல்போன்கள் எத்தனையோ அப்பாவிப் பெண்களின் மானத்தைக் குழி தோண்டி புதைத்துவிட்டன. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களால் செல்போன் வாங்க முடியாவிட்டால், தறிகெட்ட இளைஞர்கள் தாங்களாகவே போன்களை வாங்கி அவர்களுக்கு பரிசாகக் கொடுக்கிறார்கள். கட்டணத்தைப் பற்றிய அச்சமும் இல்லை. கடினமான மணியோசை பற்றிய பயமும் இல்லை. இது நரகத்திற்குச்

செல்வதற்கான உறுதியான வழி இல்லையென்றால், வேறு என்னவாக இருக்க முடியும்?

## அரட்டையடிப்பதா அல்லது ஏமாற்றுவதா!

சேட்டிங் என்பது கணினியின் மூலம் ஒருவருக்கொருவர் செய்திகளை அனுப்பிக் கொள்ளும் செயலுக்குக் கூறப்படும். இதற்கு நெருக்கமான ஆங்கில வார்த்தையான சீட்டிங் என்பது ஏமாற்றுவதற்குச் சொல்லப்படும். இப்போதெல்லாம், இளைஞர்கள் ஒருவருக்கொருவர் சேட்டிங் செய்யவில்லை. மாறாக அவர்கள் ஒருவரையொருவர் சீட்டிங் தான் செய்து கொள்கின்றனர்.

ஒரு இளம் கல்லூரி மாணவி, என்னிடம் வந்து "நான் என் வாழ்க்கையின் நடந்த ஒரு முக்கிய பிரச்சினையை என் பெற்றோரிடம் கூற முடியாது. ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஒரு மாமா எனக்கு இருக்கிறார். அவர் என்னை விட இரண்டு மடங்கு வயது மூத்தவர். நான் அவருடன் கணினியில் சேட்டிங் செய்யலாமா? என்று ஒரு அறிஞரிடம் கேட்டாள். இது மார்க்கத்தில் தடைசெய்யப்பட்ட காரியம் என்று அவளிடம் கூறப்பட்டது.

ஆனால் அவள் அதை விட்டும் தவிர்ந்து கொள்ளவில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு அவர்கள் இருவரும் ஒரு மானக்கேடான் செயலைச் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## பயிற்சி மையமா? அல்லது மன அழுத்த மையமா?

சிலர் தங்கள் இளம் பெண்களை ஒரு ஆண் ஆசிரியரிடம் டியூஷன் படிக்க அனுப்புகிறார்கள். அல்லது, அவர்களை டியூஷன் நடத்துவதற்கு தங்களுடைய வீடுகளுக்கு

வரவழைக்கிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், ஏற்படும் விளைவுகள் மிக மோசமானவையாகும்.

ஷரியத்தின் கட்டளைகளைப் புறக்கணிப்பது என்பது எப்போதும் மோசமான விளைவுகளுக்கே வழிவகுக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இதன் மூலம் ஒரு மாணவிக்கு ஆண் ஆசிரியருடன் அமர்ந்து பேச வாய்ப்பு கிடைக்கும்போது, புத்தகங்களைப் படிப்பதோடு ஒருவருக்கொருவரின் குணாதிசயங்களைப் பற்றி அறிந்துகொள்ளுமாறு ஷைத்தான் அவர்களுக்கு அறிவுறுத்துகிறான்.

தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய பேச்சுக்கள் தொடங்கும் போது, ஹராமின் (விபச்சாரத்தின்) கதவுகள் திறக்கப்படுகின்றன. டியூஷனில் தொடங்கிய பழக்கம் இறுதியாக டென்ஷனில் முடிவடைந்து விடும்.

பொதுவாக பெண்களிடம் பேசும்போது ஆண்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். அல்லாமா ஜஸரி ﵀ அவர்கள் எழுதியுள்ளார்கள்.

نَهَي رَسُوْلُ اللّٰهِ صلي الله عليه و سلم اَنْ يَخْضَعَ الرَّجْلُ بِغَيْرِ اِمْرَاَةٍ اَنْ يَّلِيْنَ لَهَا بِالْقَوْلِ بِمَا يَطْعَمَهَا مِنْهُ

**“தன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணின் முன்னிலையிலும் ஆண்கள் மெதுவாகப் பேசுவதை நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தடை செய்தார்கள்.**

**ஏனெனில் அதனால் அவளுக்கு அந்த ஆணின் மீது ஆர்வம் ஏற்பட வாய்ப்பு உண்டு.**

## பணிபுரியும் பெண்கள்

சில பெண்கள் குடும்பத்தின் நெருக்கடி சூழ்நிலையை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு, அலுவலகங்கள் அல்லது தொழிற்சாலைகளில் ஆண்களுடன் சரிசமமாக வேலை செய்கிறார்கள். இப்பெண்களைப் பாவத்தில் சிக்க வைப்பது ஷைத்தானுக்கு மிக இலகுவான காரியமாகும். பெரும்பாலான நேரங்களில், அவர்களுடன் பணிபுரியும் நிறுவனங்களின் முதலாளிகளே அவர்களுடன் பாவச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அவ்வாறில்லையானால், உடன் பணிபுரியும் ஆண்களில் எவராவது அவர்களுடன் தவறு செய்வதற்கான வாய்ப்பை தேடிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறாக அவர்கள் பாவத்தில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையை உடன் உள்ள ஆண்களே உருவாக்குவார்கள்.

“நீ வேலையைச் சரியாகச் செய்யவில்லை, எனவே உனக்கு விடுப்பு கொடுத்து அனுப்பி விடுவேன்” என்று கண்டிப்பதை போன்று அவர்களில் ஒருவர் நடந்து கொள்வார். அதனால் அவள் பயந்து பதற்றமடைவாள். மற்றொருவரோ “நான் உனக்கு உதவுவேன், எதுவும் நடக்க விடமாட்டேன்” என்று காப்பாற்றுபவரைப் போன்று மாறிவிடுவார்.

இறுதியாக அவள் காப்பாற்ற வந்தவரின் வலையில் சிக்கியிருப்பது சிறிது காலத்திற்குப் பிறகே தெரிய வரும். பெரும்பாலும் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் இது போன்ற விரும்பத்தகாத சம்பவங்களை கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ சந்தித்திக்கிறார்கள். ஐந்து விரல்களும் சமமாக இருப்பதில்லை என்பது எல்லோரும் அறிந்ததே.

பணிபுரியும் பெண்களில் குறைவாகப் பேசக்கூடியவர்கள் பெரும்பாலும் எந்த ஆணையும் நம்பமாட்டார்கள். தங்கள் வாழ்க்கையைப் பற்றிய திட்டங்களை யாரிடனும் பரிமாறிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் தங்கள் வேலையில் மட்டுமே கவனம் செலுத்துவார்கள். ஒரு ஆண் அவளிடம் சுதந்திரமாகப் பேச ஆரம்பித்தால், உடனே அவள் அவனைத் திட்ட ஆரம்பித்து விடுவாள்.

அதனால் அவள் தன்னுடைய அலுவலகத்தில் கோபக்காறி என்று அறியப்பட்டாலும் சரி, இதனால் குறைந்தபட்சம் அவள் தன் மானத்தைக் கட்டாயம் காப்பாற்றிக் கொள்வாள் என்பது தெளிவானது.

## ஹஜ்ரத் உமர் ﷺ அவர்களின் நடைமுறை.

உமர் ﷺ அவர்கள் கலீஃஃபாக ஆட்சி செய்த காலத்தில், ஒரு நபர் ஓர் இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அவ்வழியில் ஒரு ஆணும், பெண்ணும் மறைந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களைப் பற்றி விசாரித்ததில், அவர்கள் இரத்தபந்த சொந்தமற்றவர்கள் என்பது தெரியவந்தது.

உடனே அந்த நபர் பேசிக் கொண்டிருந்த ஆணின் தலையில் ஓங்கி பலமாக அடித்து விட்டார். அதனால் அவரது மண்டை உடைந்து விட்டது. இந்த விஷயம் ஹஜ்ரத் உமர் ﷺ அவர்களின் கவனத்திற்கு வந்த போது, தலையைப் பிளந்த நபரை அவர்கள் தண்டிக்கவில்லை.

அல்லாமா இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் “இவ்வாறே மிகுந்த கண்டிப்புடன் தீமை மற்றும் பாவத்தை வேரோடு களைய முயல வேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் அதிலிருந்து படிப்பினை பெறுவார்கள்” என்று எழுதியுள்ளார்கள்.

## 3] மஹ்ரமல்லாதவருடன் தனியாக அமர்ந்திருப்பது

ஒரு பெண் மஹ்ரமல்லாத ஆணுடன் தனியாக அமர்ந்திருப்பது மிகவும் ஆபத்தானதாகும். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَا يَخْلُوَنَّ رَجُلٌ بِامْرَاَةٍ اِلَّا كَانَ ثَالِثُهُمَا الشَّيْطَانُ

**“ஒரு ஆண் ஒரு பெண்ணைத் தனியாகச் சந்தித்தால் அங்கே மூன்றாவது நபராக சைத்தான் வந்தே தீருவான்.”**

அத்தகைய சூழ்நிலையில், ஷைத்தான் அவர்கள் இருவரின் உள்ளங்களிலும் ஆசை உணர்வுகளைத் தூண்டி, பாவம் செய்ய உசுப்பேற்றுவான். அதில் அவன் வெற்றி பெறவில்லை என்றால், குறைந்த பட்சம் அவர்கள் மீது அபாண்டம் கூறுவதற்கு மூன்றாவது நபரைத் தயார்ப்படுத்துவான்.

## ஹஸன் பஸரி ﵀ மற்றும் ராபியா பஸரிய்யா ﵀

“ஹஸன் பஸ்ரி ﵀ அவர்கள் ஆசிரியராகவும், ராபியா பஸரிய்யா ﵀ அவர்கள் மாணவியாகவும் இருந்து, இருவரும் தனிமையில் குர்ஆனைக் கற்பித்துக் கொண்டிருந்தாலும், சைத்தான் அவர்களில் ஒருவர் மற்றவரின் மீது நேசம் கொள்ள வைக்க முயற்சிப்பான்” என்று ஆன்மீக மகான்கள் எழுதியுள்ளனர்.

ஹஜ்ரத் உமர் ؓ அவர்கள் “இரண்டு மக்கிய எலும்புகள் அருகருகே வைக்கப்பட்டால், அவையும் ஒன்று சேர முயற்சிக்கும். அதாவது ஒரு வயதான ஆணும் ஒரு வயதான பெண்ணும் தனிமையில் அருகருகே இருந்தால் அவர்களும் கூட விபச்சாரம் செய்ய வாய்ப்பு உண்டு” என்று கூறுவார்கள்.

## பர்சீசா துறவியின் பரிதாபமான முடிவு

சைத்தானின் தந்திரமான சூழ்ச்சிகளைப் பற்றி ஹதீஸில் ஒரு விசித்திரமான சம்பவம் கூறப்பட்டுள்ளது.

இப்னு ஆமிர் அவர்கள் உபைது இப்னு யஸாரிடமிருந்து நபி ﷺ அவர்களுடன் தொடர்பு படுத்தி இந்தச் சம்பவத்தை அறிவித்துள்ளார்கள். மேலும் இந்தச் சம்பவம் தல்பீஸ் இப்லீஸ் என்ற புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது.

பனு இஸ்ரவேலர்களில் பர்சீசா என்ற ஒரு துறவி இருந்தார். அவரைப் போன்ற ஒரு வணக்கசாலி அக்காலத்தில் அறியப்படவில்லை. அவர் ஒரு வழிபாட்டுத் தளத்தை அமைத்திருந்தார். அதிலே அவர் இரவும் பகலுமாக வணக்கத்தில் ஈடுபட்டிருப்பார். அவருக்கு மக்கள் மீது எந்த ஆர்வமும், எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. எனவே அவர் யாரையும் சந்திக்கவும் மாட்டார். யாருடனும் கலந்துறவாடவும் மாட்டார்.

சைத்தான் அவரை வழிகெடுக்க முடிவு செய்தான். அவர் எப்போதும் தன்னுடைய அறையை விட்டு வெளியே வரமாட்டார். அவர் தன்னுடைய வாழ்வின் ஒரு வினாடி நேரத்தை கூட வீணாக்காமல் வழிபாட்டில் கவனம் செலுத்தக்கூடியவராக இருந்தார். சில சமயங்களில் அவர் சோர்வாக இருக்கும்போது பகலில் சிறிது நேரம் ஜன்னலுக்கு வெளியே பார்ப்பதை சைத்தான் கண்டான்.

பர்சீசாவின் ஜெப மண்டபத்தைச் சுற்றி வயல்களும் தோட்டங்களுமே இருந்தன. அதைத் தவிர வேறு எந்தக் குடியிருப்பும் அருகில் இருக்கவில்லை. அவர் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஜன்னலுக்கு வெளியே பார்ப்பதை சபிக்கப்பட்ட துரோகியான சைத்தான்

கண்டபோது, அந்த ஜன்னலுக்கு முன்னால் தொழுக்கூடிய ஒரு மனிதனின் உருவத்தில் வந்து நின்று கொண்டான்.

ஆகவே, பர்சீசா ஜன்னலுக்கு வெளியே ஒரு நபர் நிற்பதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். பிறகு அவர் மீண்டும் பகலின் பிற்பகுதியில் வெளியே பார்த்தபோது, அதே நபர் தொழுகையில் குணிந்த நிலையில் இருப்பதைக் கண்டார். பின்னர் மூன்றாவது முறையாக, அவர் சிரம் தாழ்த்திய நிலையில் இருப்பதைக் கண்டார். இது பல நாட்கள் தொடர்ந்தது.

இரவு பகலாக இவ்வளவு அதிக வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் இவர் ஒரு பெரிய மகானாகவே இருப்பார் என்ற எண்ணம் பர்சீசாவுடைய உள்ளத்தில் இலேசாக ஏற்படத் தொடங்கியது. பல மாதங்களாக அவன் இதே முறையில் நின்று, குனிந்து, சிரம் தாழ்த்தி வந்தான். ஒரு கட்டத்தில் பர்சீசா தனக்குள், "இவர் யார் என்று நான் இவரிடமே விசாரித்தறிய வேண்டும்" என்ற எண்ணம் தோன்றியது.

இந்த எண்ணம் பர்சீசாவின் உள்ளத்தில் தோன்றியபோது, அவன் ஜன்னலுக்கு மிக அருகில் தொழுகை விரிப்பை விரிக்கத் தொடங்கினான். தொழுகை விரிப்பு ஜன்னலுக்கு அருகாமையில் விரிக்கப்பட்ட போது, பர்சீசா வெளியே பார்த்து அவனிடம் "நீ யார்?" என்று கேட்டார். அதற்கு அவன், "நீ இதைக் கேட்டு என்ன செய்யப்போகிறீர்கள்?" என்றான். நான் என்னுடைய வேலையில் மும்முரமாக இருக்கிறேன். தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாதே என்று கூறினான்.

இந்த நபர் யாருடைய குரலையும் கேட்பதைக் கூட விரும்பாதவராக இருப்பது அவருக்கு மிக விசித்திரமானதாகத்

தெரிந்தது. அடுத்த நாள் பர்சீசா மீண்டும், "தயவுசெய்து உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கேட்டார். அதற்கு அவன், "என் வேலையைச் செய்ய என்னை விடுங்கள்". நான் ஒன்றும் வேலை எதுவுமில்லாத ஓய்வானவனல்ல என்றான்.

ஒரு நாள் அல்லாஹ்வின் அருளால், மழை பெய்யத் தொடங்கியது. அந்த நபர் மழையிலும் தொழுகை நிலையில் நின்று கொண்டிருந்தார். அவர் வணக்க வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்ததால், மழையைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதனால், நானே ஏன் அவரை உள்ளே வரச் சொல்லி மரியாதையுடன் நடந்துகொள்ளக் கூடாது என்று பர்சீசாவுக்குத் தோன்றியது.

எனவே, அவர் சைத்தானிடம், "வெளியே மழை பெய்கிறது, உள்ளே வா" என்று கூறினார். அதற்குப் பதிலாக, சைத்தான், "சரி, ஒரு முஃமின் மற்றொரு முஃமினின் அழைப்பை ஏற்க வேண்டும்" என்றான். "ஆகவே, நான் உன்னுடைய அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன்."

ஆக சைத்தான் இதைத்தான் விரும்பிக் கொண்டிருந்தான். அதன்படி அறைக்குள் நுழைந்ததும் தொழுவதற்கு நிய்யத் செய்து கொண்டான். அவன் பல மாதங்கள்களாக அதே அறையில் தொழும் நிலையில் நின்றுகொண்டிருந்தான். அவன் உண்மையில் தொழவில்லை, தொழுவதைப் போன்று பாவனை மட்டுமே செய்துகொண்டிருந்தான். ஆனால், அவன் தொழுவதாகவே பர்சீசா எண்ணிக் கொண்டிருந்தார்.

பல மாதங்கள் கடந்ததும், பார்சிசா அவரை ஒரு மிகச் சிறந்த மகானாகக் கருதி அவர் மீது அபிமானம் கொள்ள ஆரம்பித்தார். நீண்ட காலத்திற்குப் பிறகு, அவன்

பார்சிசாவிடம், "இப்போது உன்னிடம் நான் தங்கியதிலிருந்து என்னுடைய ஓராண்டு காலம் நிறைவடைந்துவிட்டது. அதனால் நான் இங்கிருந்து புறப்பட இருக்கிறேன். நான் சென்றடைய வேண்டிய என்னுடைய தங்குமிடம் வெகு தொலைவில் இருக்கிறது. பொதுவாக விடை பெற்றுச் செல்லும் சமயம் ஒருவருடைய உள்ளம் இலகியதாக இருக்கும்.

எனவே அவன் பார்சிசாவிடம், "சரி, நான் புறப்படும் போது என் மூதாதையர்களிடமிருந்து எனக்குக் கிடைத்த ஒரு அன்பளிப்பை உனக்குத் தருகிறேன்" என்று கூறினான். "அந்த அன்பளிப்பு என்னவென்றால், நோயுள்ள நிலையில் யாராவது உன்னிடம் வந்தால், நான் கற்றுத்தருகிற வார்த்தைகளிலிருந்து சிலவற்றை ஓதி அவர் மீது நீ ஊதினால், அவர் குணமடைந்துவிடுவார் என்றான்."

அதற்கு பர்சீசா, "எனக்கு எந்த அன்பளிப்பின் அவசியமும் இல்லை" என்றார். நீண்ட கால கடின உழைப்பிற்குப் பிறகே எங்களுக்கு இந்த பாக்கியம் கிடைத்துள்ளது. அந்த பாக்கியத்தை நான் உனக்குப் பரிசாகத் தருகிறேன். ஆனால் நீயோ அதை மறுக்கிறாயே! நீயோ மதிப்பு தெரியாத மதிகெட்டவராக உள்ளாய் என்றான். இதைக் கேட்ட பார்சிசா, "சரி, எனக்கும் கற்றுக்கொடு" என்றார்.

எனவே அவன் அவருக்கு ஒரு கலையைக் கற்றுக் கொடுத்துவிட்டு, "சரி, நாம் மீண்டும் ஒருமுறை சந்திப்போம்" என்று கூறிவிட்டு விடைபெற்றான். அங்கிருந்து, சைத்தான் நேராக மன்னனின் மாளிகைக்குச் சென்றான். மன்னனுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். அவன் சென்று மன்னனுடைய மகளின் மீது தீய பாதிப்பை ஏற்படுத்தினான். அதனால் அவள் ஒரு மனநோயாளியாக

ஆகிவிட்டாள். அவள் அழகான, படித்த பெண்ணாக இருந்தாள்.

சைத்தானின் பாதிப்பினால் அவளுக்கு வலிப்பு வரத் தொடங்கியது. எனவே மன்னன் அவளுக்குச் சிகிச்சையளிக்க ஒரு மருத்துவரை வரவழைத்தான். அவர் பல நாட்கள் அவளுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளித்தார். ஆனாலும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. பல நாட்கள் சிகிச்சைக்குப் பிறகும் எந்த முன்னேற்றமும் ஏற்படாததால், மன்னனின் உள்ளத்தில் சிறந்த மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்களிடம் காட்டிய பின்பும் நிவாரணம் ஏற்படாததால் "இப்போது ஏதேனும் ஒரு பெரியவரை வரவழைத்து அவரை ஓதிப்பார்க்கச் சொல்லலாம் என்ற எண்ணத்தை சைத்தான் போட்டான்."

இந்த எண்ணம் அவனுக்குத் தோன்றிய உடனேயே, அவன் ஒரு வணக்கசாலியைத் தேட ஆரம்பித்தான். அக்காலத்தில் மிகவும் வணக்கசாலி யார் என்பதைக் கண்டறிய அவன் தனது அதிகாரிகளை அனுப்பினான். அக்காலத்தில் மிக வணக்கசாலி பர்சீசா தான் என்றும், ஆனால் அவர் யாரையும் சந்திக்க மாட்டார் என்றும் அனைவரும் கூறினர். அவர் யாரையும் சந்திக்க மாட்டாரென்றால், நாம் அவரை வந்து சந்திக்கிறோம் என்பதாக அவரிடம் சென்று நம் சார்பாகக் கோரிக்கை வையுங்கள் என்று கூறினான்.

எனவே சிலர் பர்சீசாவிடம் சென்றனர். அவர்களைக் கண்டதும், அவர், "என்னைத் தொந்தரவு செய்ய ஏன் வந்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "அரசரின் மகள் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். அவர் அவளுக்கு பல வைத்தியர்களிடம் விரிவான சிகிச்சை அளித்து விட்டார். ஆனாலும் அவளுடைய நோய் குணமாகவில்லை என்றனர்.

தங்களின் வணக்க வழிபாடு தடைபட்டு விடக்கூடாது என்பதற்காக, தங்களை அரசவைக்கு அழைப்பதை மன்னர் விரும்பவில்லை.எனவே நாங்கள் அந்தப் பெண்ணை உங்களிடம் அழைத்து வருகிறோம். நீங்கள் இந்தப் பெண்ணுக்கு ஓதி ஊத வேண்டும். நிச்சியம் அவள் குணமடைவாள் என்று நாங்கள் நம்புகிறோம். என்று கூறினார்கள்."

பர்சீசா தன் உள்ளத்தில், "ஆம், நான் ஒரு மந்திரத்தைக் கற்று வைத்திருக்கிறேன். அதனைச் சோதித்துப் பார்க்க இது ஒரு நல்ல வாய்ப்பு," என்று நினைத்துக்கொண்டார். அந்த மந்திரம் பயனுள்ளதா இல்லையா என்று பார்ப்போம். எனவே அவள், அரசரின் நோயுற்ற மகளை அழைத்து வர அவர்களுக்கு அனுமதியளித்தார்.

உடனே அரசர் தன் மகளை அவரிடம் தாமே அழைத்து வந்துவிட்டார். அவர் ஓதி ஊதியவுடன், அவள் பரிபூரணமாக குணமடைந்தாள். ஏனெனில் அந்த நோயும் சைத்தானின் தீண்டுதலாலே ஏற்பட்டிருந்தது. மேலும் அந்த மந்திரத்தை அவருக்கு சொல்லிக் கொடுத்தவனும் அவனே. எனவே, அந்த மந்திரத்தை ஓதியவுடன் சைத்தான் அவளை விட்டும் விலகிவிட்டான். அதனால் அவள் வெதுவிரைவாக குணமடைந்து விட்டாள்.

அவர் ஓதிப்பார்த்ததால் தன் மகள் குணமடைவாள் என்று அரசன் உறுதியாக நம்பினான். ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு, சைத்தான் மீண்டும் அதே வழியில் அந்தப் பெண்ணைத் தாக்கினான். அதனால் அவள் மீண்டும் பர்சீசாவிடம் அழைத்து வரப்பட்டாள். அவர் ஓதி ஊதியதும், சைத்தான் மீண்டும் அவளை விட்டுவிலகிச் சென்றுவிட்டான்.

இரண்டு அல்லது நான்கு முறைகளுக்குப் பிறகு, தன் மகளின் நோய்க்கான மருந்து அவருடைய மந்திரிப்பில் தான் உள்ளது என்று அரசன் உறுதி கொண்டான். அரசனுடைய மகளை மந்திருத்து ஊதி குணப்படுத்தியவர் என்று அவர் மக்களிடையே மிகவும் பிரசித்திப் பெற்றுவிட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு, யாரோ ஒரு எதிரி மன்னன் இந்த அரசனுடைய நாட்டைத் தாக்க வநது கொண்டிருக்கிறான் என்ற செய்தி இம்மன்னனுக்குக் கிடைத்தது. அதனால் அவன் தன் மகன்களுடன் எதிரியை எதிர்த்து போரிட புறப்படத் தயாரானான்.

இப்போது அவன், தான் போருக்குச் சென்றால், மகளை யாரிடம் விட்டுச் செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான். அவளை நம்முடைய அமைச்சர் ஒருவரிடம் விட்டுச் செல்லுமாறு சிலர் யோசனை கூறினார்கள். மற்றும் சிலர் வேறு யோசனையைக் கூறினார்கள். ஆனால் அரசன், “அவளுக்கு மீண்டும் நோய் வந்தால் என்ன செய்வது?. பர்சீசாவோ யாருடைய பேச்சையும் கேட்க மாட்டார்” என்று எண்ணி நானே சென்று என் மகளை பர்சீசாவிடம் விட்டுச் செல்வதற்கு அனுமதி கேட்கிறேன் என்று கூறினான்.

அப்படியே அரசன் தன் மூன்று மகன்கள் மேலும் மகளுடனும் பர்சீசாவிடம் சென்றான். “நாங்கள் அனைவரும் போருக்குச் செல்கிறோம், எனக்கு வெற்றியா தோல்வியா, வாழ்வா சாவா என்று தெரியாது. இந்த நேரத்தில், நான் உங்களைத்தான் மிகவும் நம்புகிறேன். என் மகளின் நோய்க்கு சிகிச்சையும் உங்களிடம் தான் உள்ளது. ஆகையால், இவள் உங்களுடன் தங்குவதை நான் விரும்புகிறேன்” என்றான்.

இதைக் கேட்ட பர்சீசா ஐய்யையோ அவள் என்னுடன் தனியாக தங்குவதை எப்படி நான் அனுமதிக்கமுடியும்?”

என்றார். அதற்கு அரசன், "இல்லை, அப்படி எதுவும் இல்லை. தாங்கள் தயவுசெய்து எனக்கு அனுமதி மட்டும் கொடுங்கள். அவள் வசிப்பதற்காக உங்கள் மடத்திற்கு முன்னால் ஒரு வீட்டை நான் அவளுக்காக கட்டி விடுகிறேன். அவள் அந்த வீட்டிலே தங்கியிருப்பாள் என்றான்.

இதைக் கேட்ட பர்சீசா, "சரி, பரவாயில்லை" என்றார். அவர் அனுமதி அளித்ததும், அரசன் அவருடைய மடத்திற்கு முன்னால் ஒரு வீட்டைக் கட்டி, போருக்குப் புறப்படுவதற்கு முன்பு அவளை அங்கே தங்க வைத்தான். அரசன் சென்ற பிறகு "நான் எனக்காகச் சமைக்கவே செய்கிறேன், அப்படியிருக்க அந்தப் பெண்ணுக்கும் சேர்த்து சமைப்பதில் என்ன வந்து விடப் போகிறது? என்று பார்சிசா தனக்குள் எண்ணினார்.

அவள் தனியாக இருக்கிறாள். எனவே அவள் தனக்காகச் சமைப்பாளா இல்லையா என்றும் தெரியாது. எனவே அவர் சமைத்ததில் பாதியைத் தான் சாப்பிட்டுவிட்டு, மீதிப் பாதியைத் தனது மடத்தின் வாசலுக்கு வெளியே வைத்து விட்டு கதவைத் தட்டுவார். இது அந்தப் பெண் தனது உணவை எடுத்துக்கொள்வதற்கான ஒரு சமிக்ஞையாக இருந்தது. உடனடியாக அவள் வெளியே வந்து உணவை எடுத்துச் சென்று சாப்பிட்டுக் கொள்வாள்.

பல மாதங்களாக இவ்வாறே நடந்து கொண்டிருந்தது. அதன் பிறகு, சைத்தான் அவருடைய உள்ளத்தில் நீயோ தன்னந்தனியாக வணங்கிக் கொண்டிருக்கிறாய். அவளும் தனியாக இருப்பதால் தனிமையினால் நோய் இன்னும் கூடிவிடக்கூடாது. எனவே அவளுக்கு அவ்வப்போது உபதேசம் செய்து கொண்டே இருந்தால் உன்னைப்

போன்றே அவளும் வணக்கசாலியாகி விடுவாள். இதனால் அவளுடைய நேரமும் வீணாகாமல் பாதுகாக்கப்படும் என்ற எண்ணத்தை விதைத்தான்.

இந்த எண்ணம் அவருடைய உள்ளத்தில் தோன்றியவுடனே, அவர், “இது மிகவும் நல்லது, ஆனால் அவளுக்கு உபதேசம் செய்வதற்குரிய வழிமுறை எவ்வாறு?” என்று யோசிக்கலானார். அந்தப் பெண்ணிடம், அவளுடைய வீட்டின் மொட்டை மாடிக்கு வரச் சொல். நீயும் உன் வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து, அவளுக்குப் அறிவுரை செய் என்ற வழிமுறையும் சைத்தான் அவருடைய உள்ளத்தில் போட்டான்.

ஆகவே, பர்சீசா அதே மாதிரியே உபதேசங்களையும், அறிவுரைகளையும் செய்யத் தொடங்கினார். அவருடைய உபதேசம் அந்தப் பெண்ணிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவள் தொழுகையாளியாக, திக்ரு வஜீபாக்களை பேணுபவளாக மாறிவிட்டாள். இப்போது சைத்தான் அவருடைய உள்ளத்தில், “பார், உன் அறிவுரை அந்தப் பெண்ணிடம் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நீ தினமும் இது போன்ற அறிவுரைகளைத் தொடர வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தான்.

ஆகவே, அவர் தினமும் அறிவுரைகள் செய்யத் தொடங்கினார். அவ்வாறே தொடர்ந்து செய்து வந்தார். சிறிது காலம் கழிந்ததும், சைத்தான் மீண்டும் அவருடைய உள்ளத்தில், “நீ உன் வீட்டின் மொட்டை மாடியிலும் அவள் அவளுடைய வீட்டின் மொட்டை மாடியிலும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தால் இவர்கள் யார்? ஏன் இவ்வாறு பேசுகிறார்கள் என்று அவ்வழியே செல்பவர்கள்

தவறாக நினைக்கக்கூடும். இவ்வாறு தொடர்ந்தால் மிகவும் தவறான எண்ணம் உருவாகும்.

ஆகையால், மாடியில் அமர்ந்து உரக்கப் பேசுவதற்குப் பதிலாக, நீ அவளின் வீட்டுக்குச் சென்று வாசலுக்கு வெளியே நின்றவாறு உபதேசம் செய், அவள் வாசலுக்கு உள்ளே நின்று கேட்பது பொருத்தமானது. இதனால் பர்தாவை பேணுவதில் எவ்வித இடையூறும் இருக்காது. இதற்குப் பிறகு இவ்விதத்தில் உபதேசமும், சொற்பொழிவும் தொடர ஆரம்பித்தது. சில காலம் வரை இதே நடைமுறை தொடர்ந்தது

இதற்கு பிறகு சைத்தான் அவருடைய உள்ளத்தில் நீ வெளியே நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் உன்னைப் பற்றி என்ன இவர் பைத்தியத்தைப் போன்று தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறாரே என்று எண்ணக் கூடும். ஆகவே, நீ அவசியம் உபதேசம் செய்தாக வேண்டுமென்றால், முற்றத்தின் உள்ளே நின்று கொண்டு செய்யவும்.அவள் சற்றுத் தொலைவில் நின்று கேட்கட்டும். அதன்படி இப்போது பர்சீசா வாசலுக்குள் நின்று பேசத் தொடங்கினார். அவர் உள்ளே நின்று பேச ஆரம்பித்ததும், தான் இவ்வளவு அதிகம் தொழுவதாகவும், இவ்வாறு இவ்வாறெல்லாம் வழிபாடுகள் செய்வதாகவும் அவள் அவரிடம் கூறினாள்.

என் உபதேசங்கள் இவளுக்குள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இப்போது நான் மட்டும் தனித்து வணங்கவில்லை. மாறாக என்னோடு சேர்ந்து இவளும் வணங்கிக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பிறகு இதே நடைமுறை நீண்ட காலமாக தொடர்ந்தது.

இறுதியாக, சைத்தான் அவளுடைய உள்ளத்தில் பர்சீசாவின் அன்பையும், பர்சீசாவின் உள்ளத்தில் அவளுடைய அன்பையும் விதைத்தான். எனவே "நீங்கள் நின்றுகொண்டு உபதேசம் செய்வதை விட நான் உங்களுக்காக ஒரு கட்டில் போடுகிறேன். நீங்கள் அதில் அமர்ந்து பேசுங்கள், நான் தூரத்தில் அமர்ந்து கேட்கிறேன்" என்று கூறினாள்.

அதற்கு அவர் "சரி" என்றார். அதன்படி அவள் வாசலுக்கு அருகில் ஒரு கட்டிலைப் போட்டாள். அவர் தொடர்ந்து அதில் அமர்ந்து அறிவுரை கூறிக்கொண்டிருந்தார். அவளும் தூரத்தில் அமர்ந்து தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

இந்த நேரத்தில், சைத்தான் அவருடைய உள்ளத்தில் அவளின் மீது மிகுந்த இரக்கத்தையும், பரிவையும் உருவாக்கினான். சில நாட்களுக்குப் பிறகு, சைத்தான் அவருடைய உள்ளத்தில் நீ அந்தப் பெண்ணுக்குத் தான் அறிவுரை கூறுகிறாய். நீ தூரத்தில் அமர்ந்திருந்தால், சத்தமாகப் பேச வேண்டும். தெருவில் கடந்து செல்பவர்கள் கூட உன்னுடைய பேச்சைக் கேட்பார்களா. நீ இந்தக் கட்டிலை இன்னும் கொஞ்சம் தள்ளி நகர்த்தி, "நீங்கள் இருவரும் மெல்லிய குரலில் பேசினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றான்."

எனவே, அவரின் படுக்கை அவளுடைய படுக்கைக்கு அருகில் நகர்த்தப்பட்டு, உபதேசமும், அறிவுரையும் தொடர்ந்தன. இப்படியே சில காலம் கழிந்தது. பிறகு சைத்தான் அவளை அவருடைய பார்வைக்கு அலங்கரித்து காட்டத் தொடங்கினான்.

இறுதியாக அவர் அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிப் போனார். இப்போது சைத்தான் அவருடைய உள்ளத்தில் இளமைக்கால எண்ணங்களை தூண்டி விட்டான். இதனால்

அவருடைய உள்ளம் வணக்க வழிபாடுகளை விட்டு தூர விலகிவிட்டது. எனவே அவர் தனது பெரும்பாலான நேரத்தை அந்தப் பெண்ணுடன் பேசுவதிலேயே செலவிட்டார். இவ்வாறாக சுமார் ஒரு வருடம் கழிந்தது.

ஒருமுறை அவளுடைய சகோதரர்கள் இளவரசியைப் பற்றி விசாரிக்கச் வந்தனர். அவள் மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும் இருப்பதையும் பர்சீசாவைப் புகழ்ந்து கொண்டிருபதையும் கண்டார்கள். இளவரசர்கள் மீண்டும் போரிடுவதற்காக செல்ல வேண்டியிருந்ததால், அவர்கள் திருப்தியுடன் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் வந்து சென்ற பிறகு, சைத்தான் தனது முயற்சிகளை இன்னும் தீவிரப்படுத்தினான். இவ்வாறு அவன் பர்சீசாவின் உள்ளத்தில் அவளுடைய அன்பையும், அவளுடைய உள்ளத்தில் பர்சீசாவின் அன்பையும் நிரப்பினான். இருவர் மீதும் காதல் தீ சமமாகப் பற்றி எரியத் தொடங்கியது.

இதற்குப் பிறகு பர்சீசா அவளுக்கு அறிவுரை கூறும் போதெல்லாம், அவருடைய கண்கள் சிமிட்டாமல் இளவரசியின் முகத்தையே உற்று நோக்கக்கூடியதாக இருந்தன. ஒரு பெண்ணுக்கு பொதுவாக தன் அழகு பற்றிய கர்வத்தையும், ஈர்க்கும் பாணியையும் சைத்தான் அவ்வப்போது கற்றுக் கொடுப்பான். அழகு சௌந்தர்யமிக்க நிலவு போன்ற பிரகாசமான அவள் தனது அங்க அசைவுகள் மற்றும் நன்னடத்தையால் பர்சீசாவின் உள்ளத்தை கொல்லை கொன்றாள்.

எந்த அளவிற்கெனில், அவர் தனிக்கட்டிலில் அமர்வதற்குப் பதிலாக, அவளுடன் சேர்ந்து ஒரே கட்டிலில் அமரத் தொடங்கினார். இப்போது பர்சீசாவின் பார்வை அவளின்

முகத்தில் பட்டபோது, அவளை மென்மேலும் அழகு சிற்பமாகவும், கவர்ச்சி மிக்களாகவும் இருக்கக் கண்டார்.

எனவே அவரால் தனது காம உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியாக அவர் இளவரசியை நோக்கித் தன் அசுத்தக் கரத்தை நீட்டினார். அவளும் புன்னகைத்து சம்மதம் தெரிவித்து விபச்சாரம் நிகழும் வரை அவரை ஊக்குவித்தாள். அவர்களுக்கு இடையேயான வெட்கத்தின் சுவர் அகற்றப்பட்டு, அவர்கள் இருவரும் விபச்சாரம் செய்தபோது, இருவரும் கணவன் மனைவியைப் போல ஒன்றாகவே வாழத் தொடங்கினர். இந்தக் காலகட்டத்தில் அவள் கர்ப்பமாகிவிட்டாள்.

நாளடைவில் யாருக்காவது தெரிந்தால் என்ன ஆகுமோ என்ற கவலை பர்சீசாவைத் தொற்றிக் கொண்டது. ஆனால் சைத்தான் இதற்காகவெல்லாம் போய் கவலைப்படத் தேவையில்லை. அவளுக்கு குழந்தை பிறந்தவுடன் அதை உயிருடன் புதைத்துவிடு. மேலும், அவளுக்கு இதற்கான காரணங்களை புரிய வைத்துவிடு. இதனால் அவள் தன் குற்றத்தையும், உன் குற்றத்தையும் மறைத்துவிடுவாள் என்ற எண்ணத்தை அவருடைய உள்ளத்தில் விதைத்தான்.

இந்த எண்ணத்தால், பயம் மற்றும் அச்சத்தின் தடைகள் அனைத்தும் விலகிவிட்டன. எனவே பர்சீசா அச்சமற்று, காமத்திலும், இச்சையிலும் கூடுதலாக எல்லை மீறத் தொடங்கினார். சிறிது காலத்திற்குப் பிறகு அவள் குழந்தை பெறும் நாள் நெருங்கியது. குழந்தைக்குப் பாலூட்டும் காலமான ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில், அரசனும் மற்ற மக்களும் போரிலிருந்து விரைவில் திரும்ப இருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தது.

அவர்கள் வந்தவுடன் அவள் நடந்த அத்தனை விஷயங்களையும் சொல்லிவிடுவாள். எனவே பாவத்திற்கான எந்த ஆதாரமும் இல்லாதபடி, நீ ஏதேனும் ஒரு சாக்கு கூறி அவளுடைய மகனைக் கொன்றுவிடு என்ற எண்ணத்தை சைத்தான் போட்டான்.

ஆகவே, ஒரு நாள் அவள் உறங்கிக்கொண்டிருந்தபோது, பர்சீசா அந்தக் குழந்தையைக் கொன்று, வீட்டின் முற்றத்தில் புதைத்தார். தாய் என்பவள் தாய்தான். அவள் விழித்தெழுந்து, "என் மகன் எங்கே?" என்று கேட்டாள். பர்சீசா, "எனக்குத் தெரியாது" என்றார். அவள் சுற்றிலும் தேடியும், தன் மகனின் எந்தத் தடயத்தையும் காண முடியவில்லை.

எனவே அவள் கோபமடையத் தொடங்கினாள். அப்போது சைத்தான் பர்சீசாவின் உள்ளத்தில் "இதோ பார், இவள் அக்குழந்தையின் தாயாக இருக்கிறாள். எப்படியிருந்தாலும் இவள் தன் குழந்தையை ஒருபோதும் மறக்க மாட்டாள்." இதற்கு முன்போ அவள் அவர்களிடம் நடந்த தவறுகளை சொல்லுவாளா இல்லையா என்பது தெரியாமலிருந்தது.

ஆனால் இப்போதோ அவள் நிச்சயமாக அவர்களிடம் சொல்லியே தீருவாள். ஆகவே, இப்போது ஒரே ஒரு தீர்வுதான் எஞ்சியுள்ளது, அதாவது, அந்தப் பெண்ணையும் கொன்றுவிட வேண்டும். அப்போதுதான், மூங்கில் இருந்தால் தானே, புல்லாங்குழல் இசைக்க முடியும் என்ற கூற்றின் படி அவர்களிடம் சொல்ல நாதியே இல்லாமலாகிவிடும் என்ற சிந்தனையைப் போட்டான்.

அரசன் விசாரித்தால் அவள் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள் என்று அவனிடம் சொல்லிவிடு. இந்த எண்ணம் அவருடைய மனதில் தோன்றியவுடனேயே, அவர், "அது முற்றிலும் சரிதான்" என்று கூறிக் கொண்டார்.

ஆகவே அவர் அந்தப் பெண்ணையும் கொன்று, அந்தச் குழந்தையுடன் முற்றத்தில் புதைத்தார். அதன்பிறகு, அவர் தன் வழிபாட்டில் மீண்டும் மும்முரமாக ஈடுபட்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு, அரசர் நாடு திரும்பினார். அவர் தன்னுடைய மகளை அழைத்து வர மகன்களை அனுப்பினார். அவர்கள் பர்சீசாவிடம் வந்து, “எங்கள் சகோதரி உங்களுடன்தான் இருந்தாள். அவளை அழைத்து வர நாங்கள் வந்திருக்கிறோம்” என்றார்கள். அதைக் கேட்ட பர்சீசா அழுத் தொடங்கினார்.

அவர், “உங்கள் சகோதரி மிகவும் நல்லவள். அவள் மிகவும் நற்குணம் உடையவள். அவள் இன்னின்ன வழிகளில் வழிபாடுகள் செய்து வந்தாள். ஆனால் அவள் அல்லாஹ்வுக்குப் பிரியமானவளாகிவிட்டாள்”. இதோ இந்த முற்றத்தில் இருப்பது அவளுடைய கல்லறை தான் என்றார். இதைக் கேட்ட சகோதரர்கள், அழுது பிரலாபித்து விட்டுத் திரும்பிச் சென்றனர். அவர்கள் வீட்டிற்குச் சென்று உறங்கியபோது, சைத்தான் மூத்த சகோதரனின் கனவில் தோன்றி, “உன் சகோதரிக்கு என்ன நேர்ந்தது என்று தெரியுமா” என்று கேட்டான். அதற்கு அவன், “நாங்கள் போருக்குச் சென்றதால் அவளை பர்சீசாவிடம் விட்டுச் சென்றோம். அவள் இப்போது இறந்துவிட்டாள்” என்றான்.

உடனே அவன், “அவள் இறக்கவில்லை” என்றான். “அவள் இறக்கவில்லை என்றால், பிறகு என்ன நடந்தது?” என்று சகோதரன் கேட்டான். அதற்கு சைத்தான், “பர்சீசா அவளுடன் விபச்சாரம் செய்து விட்டு குழந்தை பிறந்தபோது, அவனே அவளைக் கொன்று விட்டார். இன்னின்ன இடத்தில் அவளையும்.” மேலும், அந்தக் குழந்தையையும் அதிலேயே புதைத்துவிட்டார் என்று கூறினான்.

அதற்குப் பிறகு, அவன் நடு சகோதரனின் கனவில் வந்து அவனிடமும் அதே விஷயத்தைச் சொன்னான். பின்னர் கடைசி தம்பியிடமும் சென்று அதே விஷயத்தைச் சொன்னான். காலையில் மூன்று சகோதரர்களும் எழுந்தபோது, ஒருவன்,“நான் இந்தக் கனவைக் கண்டேன்” என்றான். மற்றவன், “நானும் இந்தக் கனவைக் கண்டேன்” என்றான். மூன்றாமவன், “நானும் இதே கனவைக் கண்டேன்” என்றான்.

“எல்லோருக்கும் ஒரே கனவு வந்திருப்பது ஒரு விசித்திரமான தற்செயல் நிகழ்வு” என்று அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொண்டனர். இளைய சகோதரன், “இது தற்செயலான நிகழ்வு அல்ல. நான் சென்று விசாரிக்கிறேன்” என்றான். மற்றவர்கள், “விடுதம்பி இது ஒன்றுமில்லை என்று கூறினார். அவன், “இல்லை, நான் கண்டிப்பாக விசாரிப்பேன்” என்றான்.

அதற்குப் பிறகு இளைய சகோதரன் கோபத்துடன் பர்சீசாவை நோக்கிப் புறப்பட்டான். இதைக் கண்ட மற்ற சகோதரர்களும் அவனுடன் சேர்ந்துகொண்டனர். அவர்கள் சென்று கனவில் காட்டப்பட்ட நிலத்தைத் தோண்டியபோது, அதில் தங்கள் சகோதரியின் எலும்புகளைக் கண்டனர். மேலும், அத்துடன் அந்தக் குழந்தையின் எலும்புக்கூடும் கிடைத்தது.அவர்கள் தக்க ஆதாரங்களைக் கண்டதும், பர்சீசாவை பிடித்தனர். அவரை நீதிபதியிடம் அழைத்துச் சென்றபோது, அவர் தனது கொடூரமான மற்றும் அருவருப்பான செயலை நீதிபதியின் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். இறுதியாக நீதிபதி அவரைத் தூக்கிலிடுமாறு உத்தரவிட்டார்.

பர்சீசா தூக்கு மேடைக்குக் கொண்டுவரப்பட்டு, அவருடைய கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டப்பட்டு,

அதை இழுக்கும் நேரம் வந்தபோது, அதை இழுப்பதற்குச் சரியாக இரண்டு மூன்று கணங்களுக்கு முன்பு, சைத்தான் முன்பு வந்த அதே வணக்கசாலியின் வடிவில் அவரிடம் வந்தான்.

அவன் அவரிடம், “நான் யார் என்று உனக்குத் தெரிகிறதா?” என்று கேட்டான். பர்சீசா, “ஆம், எனக்குத் தெரியும்” என்றான். “அந்த ஓதி ஊதும் கலையைக் கற்றுக் கொடுத்த வணக்கசாலி தானே நீ!”

அதற்கு சைத்தான் நன்கு கேட்டுக் கொள், அந்த ஓதி ஊதும் கலையையும் நான் தான் உனக்குக் கற்றுக் கொடுத்தேன். “நான் தான் அந்தப் பெண் மீது பாதிப்பை ஏற்படுத்தி நோயாளியாக்கினேன். “பிறகு அவளைக் கொல்லும்படி நான் தான் உன்னைத் தூண்டினேன்.” “எனவே நீ இப்போது காப்பாற்றப்பட விரும்பினால், என்னால் மட்டுமே உன்னைக் காப்பாற்ற முடியும்” என்று கூறினான்.

இவை அனைத்தையும் கேட்ட பர்சீசா, “இப்போது நீ என்னை எப்படி காப்பாற்றுவாய்?” என்று கேட்டார். “நீ நான் கூறும் ஒன்றை நம்பினால், நான் உனக்காக இந்த வேலையைச் செய்வேன்” என்றான். “உன் வார்த்தைகளில் நான் எதை நம்ப வேண்டும்?” என்று பர்சீசா கேட்டார். அதற்கு சைத்தான் அல்லாஹ் இல்லை என்று சொல்” என்றான்.

பர்சீசா சுயநினைவை இழந்து “சரி, இதை ஒருமுறை சொல்லிவிட்டு தூக்கிலிடப்படுவதிலிருந்து தப்பித்த பின் மீண்டும் அல்லாஹ் உள்ளான் என்பதை கூறிக் கொள்ளலாம் என்று நினைத்தான். எனவே அவர், “அல்லாஹ் இல்லை” என்றார். சரியாக அந்த நொடியில், கயிற்றை இழுக்கக்கூடியவன் கயிற்றை இழுத்தான்.

இவ்வாறு அந்த வணக்கசாலி இறை நிராகரிப்பாளராக இறந்தார்.

மனிதனைப் பாவத்திற்கு நெருக்கமாக்க சைத்தான் எவ்வளவு கொடூரமாக திட்டமிட்டுகிறான் என்பதை இது காட்டுகிறது. எனவே மனிதனால் இதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு போதும் முடியாது. அல்லாஹ்வால் மட்டுமே நம்மைக் காப்பாற்ற முடியும்.

நாம் அல்லாஹ்விடம்

اَللّٰهُمَّ احْفَظْنَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ رَبَّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزَاتِ الشَّيَاطِيْنِ وَ اَعُوْذُ بِكَ رَبَّ اَنْ يَّحْضُرُوْنَ

**யா அல்லாஹ், சபிக்கப்பட்ட சைத்தானின் தீமையிலிருந்து என்னைக் காப்பாயாக. இறைவா, சைத்தான் என்னிடம் வருவதிலிருந்து உன்னிடம் நான் அடைக்கலம் தேடுகிறேன் என்று பிரார்த்திக்க வேண்டும்:**

## சஜாஹ் மற்றும் பொய்யனான முசைலிமாவும்

சஜாஹி, ஹவாஸீனைச் சேர்ந்த பனூ தமீம் கோத்திரத்தில் ஹாரிசின் மகளாகப் பிறந்தாள். அவள் சவூதி அரேபியாவின் வடகிழக்குப் பகுதியில், தற்போது ஈராக் என்று அழைக்கப்படும் நிலத்தில் வாழ்ந்து வந்தாள். அது டைக்ரிஸ் மற்றும் யூப்ரடீஸ் ஆகிய இரண்டு நதிகளுக்கு இடையில் அமைந்துள்ளதால் அல்-ஜஸீரா என்று அழைக்கப்படுகிறது.

சஜாஹி மதத்தால் ஒரு கிறிஸ்தவராகவும், மிகவும் நாவன்மை மிக்க மற்றும் துணிச்சலான பெண்ணாகவும் இருந்தாள். அவள் பேச்சாற்றலில் மிகவும் திறமையானவளாக, நாவன்மை கொண்டவளாக இருந்தாள். கூர்மையான ஞானம்,

நற்குணம் மற்றும் புத்திசாலித்தனத்தில் ஒப்பற்றவளாகத் திகழ்ந்தாள். அவள் அக்காலத்தின் புகழ்பெற்ற ஜோசிக்காரியாக இருந்தாள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அவள் தனது அழகு, கவர்ச்சி மற்றும் வாலிப வனப்பில் பௌர்ணமியும் வெட்கித் தலைகுணியும் விதத்தில் இருந்தாள்.

எம்பெருமான் ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் இறந்தபோது, சஜாஹி தன்னை ஒரு தீர்க்கதரிசியாக, தனக்கு வஹி வருவதாக பொய்யாக பிதற்ற ஆரம்பித்தாள். பனூ தக்லிப் கோத்திரத்தார் அவளுடைய நபித்துவத்தை முதலில் ஏற்றுக்கொண்டனர். பிறகு அவள், பாடல் மற்றும் கவிதை நடையில் கடிதங்கள் எழுதி, பிற அரபு கோத்திரத்தார்களை தன்னுடைய புதிய மதத்தின் பால் அழைத்தாள்.

பனூ தமீமின் தலைவரான மாலிக் இப்னு ஹுபைரா, அவளுடைய கடிதத்தின் மொழி நடை, இலக்கிய நயத்தைக் கண்டு மிகுந்த ஆட்சரியமடைந்து அவள் மீது பைத்தியமாகி விட்டார். இவ்வாறாக மிகக் குறுகிய காலத்தில், சஜாஹின் கொடியின் கீழ் ஒரு பெரும் கூட்டம் ஒன்று சேர்ந்தவிட்டது. அவள் முதலில் பனூ தமீம் மீது தாக்குதல் நடத்தினாள். ஒரு கடுமையான போர் நடந்தது, ஆனால் பனூ தமீம் மக்கள் இறுதியாக அவளுடன் சமரசம் செய்து கொண்டனர்.

அடுத்த நாள், சஜாஹி உணர்வுப்பூர்வமான ஒரு கடிதத்தை எழுதி, காலையில் படைத் தலைவர்களிடம், “இறை வெளிப்பாட்டின் அடிப்படையில் நான் இப்போது யமாமா மீது தாக்குதல் நடத்த விரும்புகிறேன்” என்று கூறினாள். யமாமா என்பது பொய்யன் முசைலிமா தனது படையுடன் இருந்த இடமாகும். சஜாஹின் வருகையைப் பற்றிய செய்தி கிடைத்ததும், பொய்யன் முசைலிமா தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கையாண்டான்.

தன்னுடைய ஆட்களிடம் விலைவுயர்ந்த அன்பளிப்புகளை கொடுத்து அனுப்பி சஜாஹியிடம் "ஆரம்பமாக அரபு நாட்டின் பகுதிகளில் பாதி எங்களிடமும் பாதி குறைஷியர்களிடமும் இருந்தது. தற்போது குறைஷியர்கள் உடன்படிக்கையை மீறி விட்டதால், அவற்றில் பாதியை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன். "மேலும் நான் உன்னைச் சந்திக்க ஆவலோடு உள்ளேன். நீ அனுமதித்தால், நான் உன்னிடம் வருகிறேன்" என்று தூது அனுப்பினான். அதற்கு அவள் சந்திக்க அனுமதி வழங்கினாள்.

பொய்யன் முசைலிமா தன்னிடத்திலுள்ள நாற்பது புத்திசாலி மற்றும் தந்திரமான வீரர்களுடன் சஜாஹிடம் வந்தான். அவன் மிகவும் கண்ணியமான முறையில் அவளைச் சந்தித்தான். அவளின் அழகைக் கண்டதும் அவன் மயங்கி விட்டான். போர் மற்றும் வாதத்தின் மூலம் ஒரு பெண்ணை வெல்வது கடினம் என்றும், ஆனால் காதல் மற்றும் பாசம் எனும் வலையில் சிக்க வைப்பதன் மூலம் அவளை அடக்குவது எளிது என்றும் அவன் உறுதியாக நம்பினான்.

எனவே அவன் சஜாஹியைப் புகழ் மழையில் நனைய வைத்து தன்னுடைய கூடாரத்திற்கு வருமாறு அவளிடம் கோரிக்கை வைத்தான். அங்கே, நாம் இருவரும் தனிமையில் உரையாடி கருத்துப் பரிமாற்றம் செய்வோம். இடையில் அவரவர் நபித்துவத்தைப் பற்றியும் பேசிக் கொள்ளலாம் என்று கூறினான்.

அவனுடைய புகழ்ச்சிகளைக் கேட்ட சஜாஹினால் தன் உற்சாகத்தை அடக்க முடியவில்லை. அதனால் அவள் சரி, நம் இருவரின் ஆதரவாளர்களும் கூடாரத்திலிருந்து தூர விலகி இருப்பார்கள். யாரும் உள்ளே நுழைய

அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று உறுதியளித்தாள். அவளுடைய சம்மதத்தால் பொய்யனான முசைலிமாவின் நெஞ்சம் மகிழ்ச்சியால் நிரம்பியது.

உடனடியாக அவன் திரும்பி வந்து, அழகான மற்றும் ஆடம்பரமான ஒரு கூடாரத்தை அமைக்குமாறு கட்டளையிட்டான். அதில் மிக உயர்ந்த தரமான ஆடம்பரம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளும், விலைவுயர்ந்த ஆபரணங்களும், பல்வேறு வகையான நறுமணப் பொருட்களும் நிரப்பப்படக் கூறினான். இன்னும் அந்தக் கூடாரம் அலங்கரிக்கப்பட்டு ஒரு முதலிரவு அறையைப் போன்று மாற்றப்பட வேண்டும் என்று கூறினான்.

எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்ததும், அவன் சஜாஹியை வருமாறு அழைத்தான். அவள் அழகுக்கும் நளினத்திற்கும் இலக்கணமாகத் திகழ்ந்தாலும், இந்தச் சந்திப்பிற்காக அவள் மேலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு, செதுக்கிய சிற்பம் போல் முகத்தில் அழகும் நளினமும் நிறைந்தவாறு, காதல் ததும்பும் நடையுடன் நடந்து அவனுடைய கூடாரத்தின் பால் வந்தாள்.

முசைலிமா சஜாஹியை விட இரண்டு மடங்கு கூடுதல் வயதானவனாக இருந்தாலும், உடலமைப்பு, நடை, தோற்றத்தில் மிகவும் வலிமையானவனாக இருந்தான். அவன் வந்தவளை புன்னகையுடன் வரவேற்றான். அவளை மிக மென்மையான, பட்டுப் போன்ற ஒரு மெத்தையில் அமர வைத்தான். அவளுடன் இனிமையாகவும், மென்மையாகவும் பேசத் தொடங்கினான்.

அந்த நறுமண வாசனை சஜாஹியை மயங்கவைத்து, குதூகலமாக்கியது. ஒரு பெண் நறுமண வாசனையால் மயங்கும்போது, அவள் ஒரு ஆணின்பால் ஈர்க்கப்படுவாள்

என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். அவன் அவளிடம், "இச்சந்தர்ப்பத்தில் உனக்கு ஏதேனும் வஹீ அருளப்பட்டிருந்தால், அதை என்னிடம் கூறுவாயாக" என்று கேட்டான்.

அதற்கவள் "இல்லை, முதலில் உனக்கு ஏதேனும் வஹீ வந்திருந்தால் நீ என்னிடம் கூறு" என்றாள். அவன் ஏற்கெனவே ஆபாச உரையாடலுக்குத் தயாராக இருந்தான். எனவே அவன் அவளுடைய மனநிலையை அறிந்துகொள்வதற்காக, "இந்த வஹீ எனக்கு அருளப்பட்டுள்ளது" என்று கூறினான்.

أَلَمْ تَرَ اِلَي رَبِّكَ كَيْفَ فَعَلَ بِالْحَبْلِي اَخْرَجَ مِنْهَا نِسْمَةً تَسْعَي بَيْنَ صِفَاقٍ وَ حَشِيَ

**உங்கள் இறைவன் கர்ப்பிணிப் பெண்களோடு எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை நீ பார்க்கவில்லையா? அவனே அவர்களிடமிருந்து நடமாடும் உயிரினத்தை திரைகள், தோல்களுக்கு மத்தியில் போர்த்தப்பட்ட அமைப்பில் வெளிக்கொணர்கிறான்.**

அவன் வஹீ என்று கூறிய இந்த பொய்யான வார்த்தைகள் சஜாஹியின் சிற்றின்ப ஆசைகளுக்கு ஏற்ப இருந்ததால், அவளுக்குள்ளும் ஆசைகள் தூண்டத் தொடங்கின. அவள் ஒரு அந்நிய ஆடவருடன் தனியாக அமர்ந்திருந்ததால் அந்த ஆபாச உரையாடல் தொடர வேண்டும் என்று விரும்பினாள். எனவே "எனக்கு மற்றொரு வஹீயைக் கூறு" என்றாள்.

அந்த அழகுப் பதுமை இத்தகைய ஆபாசப் பேச்சைப் பொறுத்துக்கொண்டு, தவறாக கருதுவதற்கு பதிலாக

மகிழ்ச்சியடைந்ததைக் கண்ட அவன், மிகுந்த தைரியம் கொண்டான். அவன் பரவசமான கண்களுடன் அவளைப் பார்த்தான்.

அவன் அவளுடைய அழகையும், வசீகரத்தையும் தாமாக புகழ்ந்துவிட்டு, இந்த வசனங்களை அல்லாஹ் எனக்கு அருளினான் என்று கூறினான்.

اِنَّ اللّٰهَ خَلَقَ لِلنِّسَاءِ اَفْرَاجًا وَ جَعَلَ الْرِجَالَ لَهُنَّ اَزْوَاجًا
فَتُوْلِجُ فِيْهِنَّ اِيْلَاجًا ثُمَّ نَخْرُجُ اِذَا نِشَاءَ اِخْرَاجًا فَيَنْتَجِنُ
لَنَا سُخَالًا وَ اِنْتَاجًا

இப்லீஸின் இந்த வெட்கக்கேடான மற்றும் காமவெறி பிடித்த பேச்சைக் கேட்டதும், சஜாஹிற்குள் காம உணர்வு மேலிட்டது. அவளுடைய கண்களில் சிவப்புக் கோடுகள் தோன்றத் தொடங்கின.

முசைலிமா மிகவும் தந்திரமானவனாகவும், புத்திசாலியாகவும் இருந்தான். அவன் பெண்களின் உளவியலை நன்கு அறிந்திருந்தான். அவன் கூறினான் "சற்று கவனமாகக் கேள் எல்லாம் வல்ல இறைவன் எனக்கு பாதி நிலத்தையும், குறைஷியர்களுக்கு பாதி நிலத்தையும் கொடுத்தான். ஆனால் குறைஷியர்கள் நீதி செலுத்தவில்லை. ஆகையால், நான் குறைஷியர்களுடைய பாதியை அவர்களிடமிருந்து திரும்பப் பெற்று உனக்குக் கொடுக்கிறேன்.

நான் மிகுந்த நேர்மையுடன் உனக்கு ஆலோசனை கூறுகிறேன் நமது படைகள் ஒன்றிணைந்தால், நாம் அரேபியா முழுவதையும் நிச்சயம் வெற்றி கொள்ளலாம்.நீ அரேபியாவின் மகாராணி என்று அழைக்கப்படுவாய். நான்

உன்னுடைய படையைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வேன். அத்தோடு நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம்.

இதனால் நமது தூதுத்துவப் பிரச்சாரமும் பிரகாசமாக ஜொலிக்கும். ஏற்கெனவே சஜாஹி, முசைலிமாவின் பேச்சால் கவரப்பட்டிருந்தாள். எனவே, "உங்கள் ஆலோசனையை நான் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன்" என்றாள். இதைக் கேட்ட முசைலிமா புன்னகைத்து, "ஆம், எனக்கும் அதையே செய்யும்படி கட்டளையிடப்பட்டுள்ளது" என்றான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கணவன் மனைவி இருவரும் சம்மதித்தால் நீதிபதி என்ன செய்வார்? என்ற கூற்றுப்படி, அவர்கள் இருவரும் சாட்சிகள் இல்லாமலே தன்னிச்சையாகத் திருமணம் செய்து கொண்டு, திருமண இரவைக் கொண்டாடத் தொடங்கினர்.

தனிமையில் ஒரு ஆடவருடன் பேசுவதால் ஏற்படும் தர்க்கரீதியான விளைவு இதுதான். கூடாரத்திற்கு வெளியே, பொய்யாக தங்களைத் தூதராக பிரகடனப்படுத்திக் கொண்ட இருவரின் ஆதரவாளர்களும், கூடாரத்திற்குள் எல்லா விஷயங்களைப் பற்றியும் காரசாரமான விவாதமும், மறுப்பும் நடந்து கொண்டிருக்கும் என்றும், விவாதங்களும் கருத்து வேறுபாடுகளும் உச்சத்தில் இருக்கும் என்றும் நினைத்துக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் முடிவைத் தெரிந்துகொள்ள மக்கள் கண்சிமிட்டாமல் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தனர். அதே சமயம் கூடாரத்திற்குள், மணமக்களான அவர்கள் ஆடம்பரமான ஆசனங்களில் இளமையின் இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர். சந்திப்பின் இன்பம்

பற்றி என்ன கூற, மூன்று நாட்கள் ஆகியும் அவர்கள் கூடாரத்தை விட்டு வெளிவரவில்லை.

முசைலிமா ஆசை தீர சஜாஹியை அனுபவித்தான்.நீண்ட நாள் ஏக்கத்திலிருந்தவன் தன்னுடைய இச்சைக்கு திகட்டுமளவு விருந்தளித்தான். மூன்றே நாட்களில் தனது பொய்யான தூதுத்துவ பிம்பத்தை அழித்துக்கொண்டு, அவனுடைய கைகளால் தனது மானத்தையும் இழந்து, அவமானத்தில் அகப்பட்டவளாக தள்ளாடியபடி தனது படையிடம் சஜாஹி திரும்பினாள்.

மூன்று நாள் ஆலோசனைக் கூட்டத்தின் முடிவு என்ன ஆயிற்று என்று அவளுடைய குழுத் தலைவர்கள் கேட்டார்கள். "அவரும் ஒரு உண்மையான இறைத்தூதர்தான். எனவே அவருடைய தூதுத்துவத்தை ஏற்றுக்கொண்டு நான் அவரை மணந்துகொண்டேன்," என்று கூறினாள்.

அவளுடைய படை வீரர்களின் பொறுமையும், எதிர்பார்ப்பும் முடிவுக்கு வந்தது. அவர்களில் ஒருவன், உன்னுடைய திருமணத்திற்கு சாட்சி யார், மஹர் எவ்வளவு என்று கேட்டான். அவள் அவமானத்தால் தன் பார்வையைத் தாழ்த்தினாள்.

போட்டியில் தோற்றுவிட்ட வருத்தத்தால் அவள் முகம் கீழ் நோக்கித் தாழ்ந்தது. அவள், "நான் அவரிடம் மஹர் பற்றிக் கேட்கவே மறந்துவிட்டேன்," என்றாள். இப்போதே திரும்பிச் சென்று மஹரைச் செலுத்துமாறு நீ அவரிடம் சொல் என்று அவளுடைய ஆதரவாளர்கள் அவளுக்கு அறிவுரை கூறினார்கள். அது இல்லையென்றால் திருமணம் செல்லுபடியாகாது என்று வலியுறுத்தினர்.

அவர்கள் தொடர்ந்து அவளை வற்புறுத்தியபோது, அவமானத்தின் மொத்த உருவமாக கேவலத்துடன் அவள்

திரும்பினாள். அவளுடைய ஆதரவாளர்கள் நடந்த விஷயங்கள் அனைத்தும் தங்களுக்கு நிகழ்ந்த அவமானம் என்று கருதி எங்கே தன்னைக் கொன்றுவிடுவோர்களோ என்று அஞ்சி முசைலிமா கூடாரத்தின் கதவுகளை வேகமாக மூடிக்கொண்டான்.

சஜாஹி வாயிலுக்கு அருகில் வந்திருப்பதை முசைலிமா ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து மீண்டும் வந்ததற்கான காரணம் என்ன என்று கேட்டான். தனது மஹ்ரைக் கேட்க மறந்துவிட்டதாக சஜாஹி கூறினாள். உடனே அவன் புன்னகைத்து, முஹம்மது ﷺ அவர்கள் விண்ணேற்றத்தின் போது அர்ஷிலிருந்து ஐந்து தொழுகைகளைக் கொண்டு வந்ததாகக் கூறினார்கள்.

அதன்படி சஜாஹியின் மஹ்ராக எல்லாம் வல்ல இறைவன் முஃமின்களுக்கு ஃபஜ்ர் மற்றும் இஷா தொழுகைகளை மன்னித்து விட்டான் என்று கூறினான். அவள் திரும்பி வந்தபோது, அவளுடைய படைவீரர்களுக்கு ஏதோ ஒரு விஷயம் நடந்துள்ளது என்ற சந்தேகம் உருவானது.

மக்கள் முன்னிலையில் சிரித்துப் பேசி, தனது பேச்சாற்றலால் அவர்களின் இதயங்களைக் கவர்ந்து வந்த சஜாஹி, தனது பேச்சாலும் அழகிய தோற்றத்தாலும் அவர்களின் இதயங்களை வென்றவள் இப்போது பயம் மற்றும் கூச்சத்தால் பீடிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. அவளுடைய வாயிலிருந்து பொருளற்ற வார்த்தைகள் வெளிவந்தன.

ஒரு பெண் தன்னுடைய கற்பு என்ற மாபெரும் சொத்தைப் பறிகொடுத்து விட்டால் இதுதான் நடக்கும். அதன்படி அவள் இவ்வளவு காலம் வென்றிருந்த ஆட்டத்தையே இழந்து நின்றாள். இதனால் அவளுடையப் படையைச் சேர்ந்தவர்கள், மனம் உடைந்து, வீடு திரும்பத்

தொடங்கினர். இதற்கிடையில், ஹஜ்ரத் காலித் இப்னுல்-வலீத் ﵁ அவர்களின் இஸ்லாமியப் படை யமாமாவை அடைந்தது. அங்கு நடைபெற்ற யுத்தத்தில் முஸைலிமா கொல்லப்பட்டான்.

ஒரு வழியாக சஜாஹி தப்பிப் பிழைத்து தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஜஸீரா சென்று குடியேறினாள். அவள் மனந்திருந்தி, தூதுத்துவ வாதத்திலிருந்து தவ்பா செய்து மீண்டும் முஸ்லிமாக மாறினாள். பனூ தக்லிப் பழங்குடியினர் அவளுக்கு தாய்வழி உறவினர்களாக இருந்தனர்.

அவள் அவர்களுடன் சேர்ந்து அமைதியான வாழ்க்கையை வாழத் தொடங்கினாள். அவளுடைய வேண்டுகோளின் பேரில், அவளுடைய ஆதரவாளர்கள் பலரும் இஸ்லாத்தை ஏற்றனர். பிறகு அவள் பஸ்ராவுக்கு குடிபெயர்ந்தாள். அவர் இறையச்சத்தையும், நல்லொழுக்கத்தையும் தன்னுடைய தாரக மந்திரமாக ஆக்கிக் கொண்டார்.

சையித்னா அமீர் முஆவியா ﵁ அவர்களின் காலத்தில் அவர் மரணமடைந்தார். நபித் தோழரான ஹஜ்ரத் சமூரா இப்னு ஜுந்துப் ﵁ அவர்கள் அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.

இந்த முழு சம்பவத்திலும் ஒரு வேளை சஜாஹி பொய்யனான முசைலிமாவுடன் தனிமையில் தவறு செய்யாமல் இருந்திருந்தால், அவன் அவளுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதை ஏற்றுக்கொண்டிருப்பான் என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

அந்த கிழட்டு நபர் தனிமையைப் பயன்படுத்தி, அந்த இளம் பெண்ணிற்கு நிரந்தரமான கேவலத்தை

ஏற்படுத்திவிட்டார். எனவே அவளுக்கு வருத்தம், கேவலம் மட்டுமே மிஞ்சியது. சில வினாடி நடந்த தவறு அவளுடைய வாழ்நாள் முழுவதின் கௌரவத்தையும் பாழாக்கி விட்டது.

இந்த அதிர்ச்சியின் காரணமாகவே சஜாஹி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாள்.மேலும் தன்னையும், முசைலிமாவையும் பற்றிய பல உண்மைகளை அறிந்துகொண்டாள்.

வருத்தப்படுதல் என்பதும் ஒரு விந்தையான பாக்கியமாகும். அதனால் அல்லாஹ் சஜாஹியின் முடிவை நல்லதாக ஆக்கிவிட்டான். பாவமன்னிப்பின் வாசல் எப்போதும் திறந்தே இருக்கிறது என்பது உண்மை. ஒரு பாவி தான் விரும்பும் போது தன் இறைவனை மகிழ்விக்கலாம்.

## மஹ்ரமல்லாதவருடன் மறைமுகமான பழக்கம்

சில சமயங்களில் ஒருவர் செய்யும் தவறுகள், அவரது வாழ்நாள் முழுவதும் சிக்கல்களுக்குக் காரணமாக அமைந்துவிடும். அத்தகைய தவறுகளில் ஒன்று, ஒரு பெண் மஹ்ரமல்லாத ஆணிடம் தனது தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்குவதாகும். ஆரம்பம் எவ்வளவு நேர்மையாக, நியாயமானதாகத் தெரிந்தாலும், அதனுடைய முடிவு எப்போதும் மோசமாகவே இருக்கும்.

சில பெண்களுக்குத் தங்கள் பெற்றோரிடம் பேசுவது கடினமாகத் தெரிகிறது. மேலும் அவர்களிடம் மனம் விட்டுப் பேசக்கூடிய சகோதரிகளும் அவர்களுக்கு இருப்பதில்லை. எனவே, அவர்கள் தங்கள் உறவினர், அல்லது தோழியின் சகோதரன், அல்லது பக்கத்து வீட்டுப் பையன் அல்லது வகுப்புத் தோழனிடம் பேசுகிறார்கள். ஆரம்பத்தில் அந்த ஆண்கள் மிகுந்த

பெருந்தன்மையுடன் அவர்கள் சொல்வதைக் கேட்டு அவர்களுக்கு உதவுவார்கள். ஆனால் நாளடைவில் அவர்கள் அந்தப் பெண்களின் மீது தனிப்பட்ட ஆர்வமும், அன்பும் காட்டத் தொடங்கிவிடுவார்கள்.

ஆரம்பத்தில், இரு தரப்பினருக்கும் இந்த உரையாடலில் எவ்வித தவறும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் காலப்போக்கில், இருவருக்கும் இடையே ஒரு முறையற்ற உறவு உருவாகி இருக்கும்.

இக்கால வாலிபர்கள், அப்பாவிப் பெண்களைத் தங்களுடைய வலையில் சிக்க வைத்து ஏமாற்றும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். பொதுவாக, பெண்பிள்ளைகள் காதல் மற்றும் கவரும் கலையில் அனுபவமற்றவர்களாகவும், அதே சமயம் வாலிப ஆண்கள் அதில் பழுத்த அனுபவமுள்ளவர்களாகவும் இருப்பதால் ஒவ்வொரு புதிய பெண்ணையும் அவர்களின் மனதைத் திகைக்க வைக்கும் ஒரு உத்தியுடன் களமிறங்குகிறார்கள்.

அந்தப் பெண் ஆன்மீகத்தில் அதீத நாட்டமுள்ளவளாகத் தெரிந்தால் தொழுகை, மற்றும் நற்காரியங்களைப் பற்றிப் பேசுவார்கள். உன்னுடன் பழகிய பின்பே என் உள்ளத்தில் நான் நல்லவனாக வேண்டும் என்ற ஆசை வந்துள்ளது என்று அந்தப் பெண்ணிடம் கூறுவார்கள்.

ஒரு வேளை அந்தப் பெண் அனுதாபமுள்ளவராக இருந்தால், தன்னுடைய தாயின் கடுமை, வீட்டாரின் கசப்பான நடைமுறை மற்றும் மனைவியின் கொடூர வார்த்தைகளைக் கூறி, அவளுக்கு தன் மீது இரக்கம் வரும்படி செய்வார்கள். நான் இவனோடு பேசவில்லை என்றால், இவன் தற்கொலை செய்து கொள்ளவான் என்று அவள் எண்ணிக் கொள்வாள்.

அந்தப் பெண் ஏழையாகத் தெரிந்தால், வேலை வாங்கித் தருவதற்கும் மேலும் அவள் தன் சொந்தக் காலில் நிற்பதற்கும் அவளுக்கு ஆலோசனை கூறுவார்கள். அவள் அழகாகவும், குறும்புத்தனமாகவும் இருந்தால், அவளுடைய காலணிகளையும், ஆடைகளையும் அதிகம் புகழ்வார்கள். அவளுடைய உடலிலிருந்து துர்நாற்றம் வீசினாலும், ஆஹா ரோஜா மலரின் மணம் போல எவ்வளவு சுகந்தமான மணம் வீசுகிறது என்று கூறுவார்கள். அவளுடைய மேட்சிங் இரசனையைப் பாராட்டி அவளை நெருக்கமாக்க முயற்சி மேற்கொள்வார்கள்.

பார்ப்பதற்கு அப்பாவியாகத் தோற்றமளிக்கும் பெண்ணிடம் உன் முகத்தில் எளிமையின் பிரகாசம் தென்படுவதாக கூறுவார்கள். வயதில் முதிர்ச்சியடைந்த பெண்ணிடம் உன் முகத்தில் மிகுந்த அப்பாவித்தனம் தெரிவதாகக் கூறுவார்கள். முட்டாளாகத் தோற்றமளிக்கும் பெண்ணிடம், அவளிடம் அறிவுத் திறமை இருப்பதாகப் பாராட்டுவார்கள்.

குண்டான ஒரு பெண்ணிடம், உன்னுடைய ஆரோக்கியத்தின் ரகசியம் என்ன? நீ என்ன சத்தான உணவுகளை உட்கொள்கிறாய் என்று சொல் என்று கேட்பார்கள். வேறு எந்த காரணமும் புரியாத போது, “உன் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு, உன் பெருந்தன்மை எனக்குப் பிடித்திருக்கிறது” என்று சொல்வார்கள். அதுபோல, ஒரு பெண்ணின் மனதைத் தொடும் விதத்தில் ஏதாவதொன்றைச் சொல்வார்கள். அதன் மூலம், தன்னையும் யாரோ ஒருவர் நேசிக்கிறார் என்ற எண்ணத்தை அவளுக்குள் உருவாக்க முயல்வார்கள்.

நான் பொதுவான சராசரி வாலிபர்களைப் போல் அனைவரிடமும் பேசக்கூடியவனல்ல. ஆனால் உன் மீது

மட்டும் ஏன் இவ்வளவு பெரிய மரியாதை ஏற்பட்டுள்ளது என்று தெரியவில்லை என்றும் அவளிடம் கூறுவார்கள். இறுதியாக அவள் அவனோடு பேசத் தொடங்கி விட்டால், மெதுவாக அவளைக் கட்டுக்குள் கொண்டு வர எண்ணுவார்கள்.

அவளுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்க, அவளுடைய பிறப்புத் தேதியை அவர்கள் எழுதி வைப்பார்கள். கடிதத் தொடர்பு ஏற்பட்டிருந்தால், படிப்பவரின் உள்ளத்தை கொள்ளையடிக்கும் வகையிலான கவிதைகளை அதில் அவர்கள் எழுதுவார்கள்.

சில சமயங்களில், நான் சாப்பிடும்போது எனக்கு உன் நினைவாகவே இருந்தது என்பார்கள். நான் தூங்கும்போது உன் நினைவே வருகிறது என்பார்கள். நான் தொழும் போதும் உன் நினைவாகவே இருக்கிறது என்று கூறுவார்கள்.

உண்மையில் கழிப்பறையில் இருக்கும் போது தான் அவளுடைய சிந்தனை வந்திருக்கும்.ஆனால் அவளைக் கவர இவ்வாறெல்லாம் கூறுவார்கள்.

அவளிடம் அவர்கள் உயர்ந்த குணத்தைக் கண்டால், நான் பாவமென்ற அசுத்த சேற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தேன். நீ என்னைச் சரியான பாதையில் கொண்டு வந்துவிட்டாய் என்று கூறுவார்கள்.

அவள் தொழுகையாளியாக இருந்தால், நீ எனக்காக துஆ செய்வாயாக! உன் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன் என்பார்கள். அவள் ஏதேனும் நோயில் சிக்கியிருப்பதைக் கண்டால், அதற்கான சிகிச்சை வழிமுறைகள் பற்றிப் பேசுவார்கள்.

மொத்தத்தில் அவளுக்குப் பிடித்தமான ஒன்றைப் பற்றிப் பேசி, அவளும் அதற்கு பதிலளிப்பதன் மூலம் பேச்சு வளர வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

அந்தப் பெண் தயக்கமின்றிப் பேசத் தொடங்கிவிட்டாள் என்று அவர்கள் உணரும்போது, பேச்சிற்கிடையில் சில சமயங்களில், “சொல், எனக்கு உன்னை ஏன் பிடிக்கும்” என்று கேட்பார்கள். அவள் புன்னகைப்பதைப் பார்த்தால், “தயவுசெய்து நீ என் சிந்தனையில் வராமலிருப்பாயாக” என்று கூறுவார்கள். உன் விஷயத்தில் என் எண்ணம் தூய்மையாக உள்ளது. உன்னை மறப்பது எனக்குச் சிரமம் என்ற நிலை வந்துவிடக்கூடாது என்று அஞ்சுகிறேன் என்பார்கள்.

சில சமயங்களில், பேசும் போது, “என் விருப்பங்களும், வெறுப்புகளும் உன் விருப்பங்கள், மற்றும் வெறுப்புகளோடு மிகவும் ஒத்திருப்பது எவ்வளவு ஆட்சரியமாக உள்ளது” என்று கூறுவார்கள். சில சமயங்களில், “நீ மிகவும் புத்திசாலி, இப்படி இப்படி அற்புதமான ஆலோசனைகள் கூறியிருந்தாய் என்பார்கள். சில சமயங்களில், “நான் உன்னை என்னவளாக்கிக் கொள்ள விரும்புகிறேன். இதில் என் நோக்கம் தவறானதல்ல” என்று தெளிவான வார்த்தைகளில் கூறுவார்கள்.

இந்த உத்திகள் அனைத்தின் சாராம்சமும், அவள் நம்மிடம் பேச வேண்டும், சிரித்துப் பழக வேண்டும், அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிப் பேசத் தொடங்க வேண்டும் என்பதே. அவள் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டால் பறவை கூண்டில் சிக்கி விட்டது என்று அர்த்தமாகும்.

இரண்டாவது கட்டத்தில், என் நோக்கங்கள் கெட்டவை அல்ல. நான் உன் மீது காதல் கொண்டுவிட்டேன் என்று அந்தப் பெண்ணை நம்ப வைப்பார்கள். அவர்கள் தங்கள் நாவால், "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று சொன்னாலும், உள்ளத்தில், "எனக்கு நீ வேண்டும்" என்று சொல்வதே அதன் உண்மையான அர்த்தமாகும்.

இப்போது ஒரு படி மேலே செல்ல முடியும் என்று அவர்கள் காணும்போது, தங்கள் கற்பனையான மற்றும் பொய்யான காதல் சரித்திரங்களை அவளிடம் சொல்வார்கள். அவள் இதை கவனமாகக் கேட்டால், "நேற்று இரவு என் கனவில் ஒரு பெண்ணோடு இதைச் செய்தேன், அதைச் செய்தேன்" என்று தங்கள் கனவைப் பற்றி கூறுவார்கள். இதற்கும் அவள் ஆர்வத்தை வெளிப்படுத்தினால் அவர்கள் திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் பாடல்கள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளத் தொடங்குவார்கள்.

"உனக்கு எந்தப் பாடல் பிடிக்கும்? எனக்கு இது பிடிக்கும்?" என்று கூறுவார்கள். "உனக்கு எந்தப் படம் பிடிக்கும்? எனக்கு இது பிடிக்கும்?" என்று கூறுவார்கள். இதுபோன்ற பொருத்தமற்ற விஷயங்கள் வெளிப்படையாக நடக்கத் தொடங்கும் போது, இப்போது வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதாக அவர்கள் எண்ண ஆரம்பிப்பார்கள்.

மூன்றாவது கட்டத்தில், அவன் அவளிடம், "எனக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கு நான் உனக்கு அருகில் அமர்ந்து நேருக்குநேர் உன்னோடு பேச விரும்புகிறேன்" என்று சொல்வான். இன்னும் சில சமயங்களில், அவன் கடற் கரை மணலில் நாம் இருவரும் பேசிக்கொண்டே வெகுதூரம் செல்ல என் மனம் விரும்புகிறது என்பான். மேலும் கோடை

காலத்தில் நாம் இருவரும் ஒரு குளிர்ச்சியான சாலையில் வெறுங்காலுடன் நடந்து செல்ல வேண்டும். நாம் நடந்து நடந்து ஒரு கட்டத்தில் இருவரும் சோர்வாகி அங்கேயே உறங்கிவிட யாரேனும் நம் மீது லாரியை ஏற்றினாலும் பரவாயில்லை என்று எண்ணத் தோன்றுகிறது என்பான்.

அவ்வாறே குளிர்காலமாக இருந்தால், நாம் ஒரே கட்டிலில் ஒன்றாக அமர்ந்து, நம் கை, கால்களை கம்பளிப் போர்வையால் சுற்றிக்கொண்டு பேசிக் கொண்டே இருக்க என் மனம் விரும்புகிறது என்பான். அவள் இது போன்ற உரையாடல்களை மகிழ்ச்சியாகக் கேட்டால், சேருமிடம் இன்னும் அருகில் இருப்பதாக அவன் நினைப்பான்.

நான்காவது கட்டத்தில், அவன் அந்தப் பெண்ணைத் தனியாகச் சந்திக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்துவான். சிறிது உரையாடலுக்குப் பிறகு, அவன், “சிறிது நேரம் கட்டிப்பிடித்துக் கொள்ளலாமே” “உன் கண்களை ஒரேஒரு முறை முத்தமிட அனுமதிக்க வேண்டும்.” “மீண்டும், நான் அதை ஒருபோதும் செய்ய மாட்டேன் என்பான்.

இதற்கு அனுமதி கிடைத்து விட்டால் அடுத்தடுத்த சந்திப்பில் வழி இலகுவாகி அவன் வெளிப்படையாக விபச்சாரம் செய்து விடுவான்.

ஒரு குறும்புக்கார இளைஞன் தவ்பா செய்ய வந்த போது, இந்தத் திட்டங்கள் முழுவதையும் கூறினான். ஒரே நேரத்தில் சுமார் ஐந்து, ஆறு, பெண்களுடன் தனக்குத் தொடர்பு இருந்ததாகவும் கூறினான். இது போன்ற சில வாலிபர்கள் ஒரு பெண்ணிடம் பேசிவிட்டு தொலைபேசியைத் துண்டித்தால் இரண்டாவது பெண்ணை

அழைத்து, “நான் இன்று உன்னை எண்ணி மிகவும் ஏங்கியுள்ளேன்” என்று கூறுவார்கள்.

இரண்டாமவளுடன் பேசிவிட்டு தொலைபேசியைத் துண்டித்த பிறகு, அவன் மூன்றாவது பெண்ணை அழைத்து, “ஏய், இன்று உன்னுடன் பேச நான் மிகவும் ஆவலுடன் இருந்தேன்” என்பான். சைத்தான் விரும்பும் தீய செயலை நிறைவேற்ற ஒவ்வொரு அடியிலும் அவன் பொய்ச் சபதம் செய்வான்.

தங்கள் இச்சையைத் திருப்திப்படுத்துவதே அவர்களின் ஒரே குறிக்கோளாகும். ஆனால் ஒருமுறை எந்தப் பெண்ணுடன் தங்கள் ஆசையைப் பூர்த்தியாக்கிய பிறகு, அவளைத் திருமணம் செய்துகொள்ள ஒருபோதும் தயாராகுவதில்லை. தங்கள் மனதிற்குள், கன்னிப் பெண்ணாக இருக்கும் போதே என்னுடன் முறையற்ற உறவு கொள்பவள் என் மனைவியானால் அவள் மற்றவர்களுடன் ஏன் உறவு கொள்ள மாட்டாள் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். ஆகையால், இந்தக் காதலையும் படிப்படியாக முடிவுக்குக் கொண்டு வருவார்கள்.

## முதல் படி (Use the girl)

தேவைப்படும் வரை ஒரு பெண்ணுடன் உன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள். அதற்காக எவ்வளவு காலம் கொடுக்க நேர்ந்தாலும் சரி. “திருமணம் செய்து வையுங்கள் என்று என் அம்மாவிடம் பெண் கேட்டு என் வீட்டிற்கு வரலாமே?” என்று அந்தப் பெண் உங்களை வற்புறுத்தினால், சாக்குப்போக்குகள் சொல்லவும்.

அந்தப் பெண் விவேகமானவளாக இருந்து இதிலிருந்து பின்வாங்கத் தொடங்கினால், அவளை விபச்சாரம் செய்வதற்கு கட்டாயப்படுத்தவும்.

## இரண்டாம் படி (Abuse the girl)

ஒரு பெண்ணைக் கட்டாயப்படுத்தி அவளிடத்திலிருந்து உன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள். சில நேரங்களில் நான் மாத்திரைகளை சாப்பிட்டு விடுவேன். நான் மின்விசிறியில் தூக்கிலிட்டுக்கொள்வேன் என்று சொல். என் பாக்கெட்டில் உன் பெயரில் ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, மாடியிலிருந்து குதித்து விடுவேன். இது நடக்கக் கூடாது எனில் நீ என்னுடன் அவசியம் சேர வேண்டும். இவ்வாறே எத்தனை வருடங்களை கடத்த முடியுமோ கடத்திக் கொண்டே இருக்கவும்.

## மூன்றாம் படி (confuse the girl)

அந்தப் பெண்ணின் பெற்றோர் அவளுக்கு வேறு ஒருவரைத் திருமணம் செய்து வைக்க விரும்பினால், அவள் முன்னிலையில் சோகமான வார்த்தைகளைக் கூற வேண்டும். “உன்னை விட்டுவிட்டு என்னால் வாழ முடியாது. உன்னால் என்னுடைய நிம்மதியை நான் தொலைத்து விட்டேன். உன்னால், எனக்குப் படிப்பில் சரிவர கவனம் செலுத்த முடியவில்லை. அதனால் நான் தேர்வில் தோற்று விட்டேன். நீ என்னைத் திருமணம் செய்யவில்லை என்றால், உன் திருமண ஊர்வலம் செல்லும் அதே நேரத்தில் நான் தற்கொலை செய்துகொள்வேன்.

நினைவில் வைத்துக்கொள், நீ என்னைத் திருமணம் செய்யவில்லை என்றால், உன் வருங்காலக் கணவனிடம் எல்லாவற்றையும் நான் சொல்லிவிடுவேன். நான் அவரிடம் உன் கடிதங்களைக் காட்டுவேன். உன் புகைப்படங்களைக் காட்டுவேன். எப்படியாவது உன்னை விவாகரத்து செய்யும் படி அழுத்தம் தருவேன். பிறகு நீ என் மனைவியானால்

மட்டுமே வாழ முடியும் என்ற நிலைக்கு உன்னை நிர்பந்திப்பேன்.

அந்த அப்பாவிப் பெண், இந்த பொய்யான கட்டுக்கதைகள், மிரட்டல்களுக்கு பயந்து நல்ல நல்ல வரன்களையெல்லாம் தட்டிக்கழிப்பாள். அவள் தன் பெற்றோர் முன்னிலையில் அவமானத்தையும் இழிவையும் சகித்துக் கொண்டு நான் இன்னாரைத் தான் திருமணம் செய்து கொள்வேன். இல்லையென்றால் நான் தற்கொலை செய்துகொள்வேன் என்று பிடிவாதமாக இருப்பாள். நான் எங்காவது ஓடி தலைமறைவாகி எல்லோரின் தலைகுணிவிற்கும் காரணமாகிவிடுவேன் என்று அவர்களை அச்சுறுத்துவாள்.

ஒரு வழியாக பெற்றோர் இந்த தறுதலையான நபரையே உனக்குத் திருமணம் செய்து வைக்கிறோம் என்று ஒப்புக் கொண்டால் அவள் அவனிடம் “நீ உன் அம்மாவை என் வீட்டிற்கு அனுப்பி சம்மதம் கேள். நிச்சயம் என்னுடைய பெற்றோர் அனுமதித்து விடுவார்கள் என்று கூறுவாள். இந்த நிலையை அடைந்து விட்டால் நான்காவது கட்டம் தொடங்கிவிட்டது என்பதாக அவன் புரிந்துகொள்வான்.

## நான்காம் படி (Refuse the girl)

அவள் எல்லா வகையிலும் தன்னை தயார் படுத்திக் கொண்டதை அவன் காணும்போது, அவன் அவளுடன் உடலுறவு கொள்கிறான். ஆனால் அவன் தன் தாயை அனுப்பும் விஷயத்தில் சாக்குப்போக்குகளைச் சொல்லிக் கொண்டிருப்பான். சில சமயங்களில், இன்னின்ன வேலைகளில் என் தாயார் மும்முரமாக இருக்கிறார் என்பான்.

சில சமயங்களில், இன்னின்ன விஷயம் நடந்துவிட்டது. அதனால் நான் எப்படி இதை என் வீட்டில் பேசுவது என்றே தெரியவில்லை என்பான். இறுதியாக அவள் மிகவும் வற்புறுத்தும்போது, என் அம்மா சம்மதிக்கவில்லை. நான் என்ன செய்வது? என் அப்பாவும் சம்மதிக்கவில்லை என்று அவன் சொல்ல ஆரம்பிப்பான். இவ்வாறு இழுபறியிலேயே அவன் காலத்தைக் கடத்துவான். இப்படிக் கூறி அவளைச் சிக்கலில் தள்ளிவிடுவான்.

அவள் இதில் முன்னேறவும் முடியாமல், வெளிவரவும் முடியாமால் தவித்துக் கொண்டிருப்பாள். இந்த நிலையை அடைந்த பிறகே பல பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அவனுடைய தாயிடம் அவன் எப்படியாவது சம்மதம் கேட்டு விட வேண்டும் என்று சிலர் இரவு, பகலாக துஆ, வஜீஃபா செய்து கொண்டிருப்பார்கள். சிலர் இது எப்படியாவது நடைபெற வேண்டும் என்று நேர்ச்சை செய்து கொள்வார்கள் அல்லது தாயத்துகளுக்குப் பின்னால் சிலர் நேரத்தை வீணடிப்பார்கள்.

இன்னும் சிலர் அல்லாஹ் என்னுடைய துஆவை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கோபப்பட்டு தங்களுடைய தவறை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாகப் தொழுவதையே நிறுத்திவிடுவார்கள். ஆனால் தவறுகள் அனைத்தும் நம்மைச் சார்ந்ததாகவே இருக்கிறது என்பதை அறிய மறுப்பார்கள்.

அவன் அவளிடம் தன்னுடைய பாலியல் இச்சையை நிறைவேற்றிக்கொண்டான். எனவே இப்போது அவள் அவனுடைய பார்வையில் பயன்படுத்தப்பட்ட கழிவறைக் காகிதத்தை ஒத்தவளாவாள். அதனால் அவன் அவளைத் தவிர்க்க தந்திரங்களைக் கையாண்டு, அவளைச்

சந்திப்பதையே விட்டு விடுவான். சுருங்கக்கூறினால் அவன் அவளை ஒரு முட்டுச்சந்தில் சிக்க வைத்து விட்டு தப்பித்து விடலாம் என்று எண்ணுவான்.

## விளைவுகள்

பெரும்பாலான சந்தர்பங்களில், காதல் திருமணங்கள் கைகூடுவதில்லை. அப்படியே நடந்தாலும், இரண்டு காரணங்களால் விவாகரத்துக்கான வாய்ப்புகள் அதில் அதிகம் உள்ளன.

1) கணவனுக்குத் தன் மனைவி மீது சந்தேகம் ஏற்பட்டுவிடும். அவள் தன் சொந்த சகோதரனிடம் சிரித்துப் பேசினாலும் கூட, அவனுடன் தவறான உறவு இருப்பதாகக் கணவன் சந்தேகிப்பான். தன் பெற்றோரைச் சந்திக்க தாய் வீட்டிற்குச் செல்ல அவள் அனுமதி கேட்டால், கணவன் அவளை அனுமதிக்கமாட்டான். ஏனென்றால் அவள் அங்கு சென்று வேறு ஆணுடன் தொடர்பு வைத்துக்கொள்வாளோ என்று அஞ்சுவான்.

ஒரு படித்த இளைஞன் தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான். அவன் அலுவலகத்திற்குச் செல்லும்போது வீட்டைப் பூட்டிச் செல்வது அவனுடைய வழக்கமாக இருந்தது. அவளுக்கு வீட்டை விட்டு வெளியே வரக்கூடிய ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால் என்ன செய்வாள். ஏன் இவ்வாறு பூட்டி வைக்கிறீர்? என்று ஒருவர் கேட்டார்.

தன் பெற்றோருக்கே தெரியாமல் இரகசியமாக காதலிக்கத் தெரிந்தவளுக்கு தன்னுடைய பக்கத்து வீட்டுக்காரருடன் இரகசியமாகப் பழக முடியுமல்லவா? என்று அவன் பதிலளித்தான். இதிலிருந்து, காதலித்து கரம்பிடித்த

பெண்கள் காலம் முழுக்க சுய அபிமானத்தை இழந்து விடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

2) காதல் திருமணம் தோல்வியடைவதற்கான இரண்டாவது காரணம், திருமணத்திற்கு முன்பாக காதலன் காதலியை எல்லாவற்றிலும் புகழ்ந்து, அவள் சொல்வதெல்லாம் சரியானது என்று கூறுவான். இப்போது திருமணம் செய்து கொண்டு அவன் உண்மையில் கணவனாக மாறிய பிறகு சரியானதை சரி என்றும் தவறானதை தவறு என்றும் சொல்வான்.

நான் முன்பு நல்லவளாகத் தெரிந்தேன். இப்போது என்ன ஆகிவிட்டது என்னை எதற்கெடுத்தாலும் குறைக் கண்ணோடே பார்க்கிறாரே என்று அவனோடு சண்டையிடத் தொடங்கிவிடுவாள். திருமணத்திற்கு முன் அவளை எல்லாவற்றிற்கும் புகழ்ந்து பாராட்டியவன், தினந்தோறும் அன்பளிப்புகளால் ஆட்சிரியமளித்துக் கொண்டிருந்தவன் திருமணத்திற்கு பிறகு தலைகீழ் மாறிவிட்டாரே ! என் மீது முன்பிருந்த ஈடுபாடு குறைந்து விட்டதே என்று கவலையுறுவாள்.

சில வேளை வெளிப்படையில் அவளைத் திருமணம் செய்து கொண்டாலும் அவனுக்குள் காதலித்தல் என்ற நோய் இருப்பதால் வேறோரு பெண்ணிடம் இதே வழமையைக் கையாள ஆரம்பித்து விடுவான். இதனால் முதல் திருமணம் பெரும்பாலும் தோல்வியில் முடிவடைந்து விடுகிறது.

## அறிவுரை

ஒரு பெண்ணின் வீட்டுச் சூழல் சரியில்லாதபோது தான் பிற ஆண்களின் மீது அவளுக்கு காதல் ஏற்படும் என்பது

அனைவரும் அறிந்த உண்மையாகும். ஒருவரின் தாய் இறந்துவிட்டால், வளர்ப்புத் தாய் எவ்வளவு கவனித்துக் கொண்டாலும் தாய் போன்று அன்பு காட்டமுடியாது.

அவ்வாறே தாய் படிப்பறிவில்லாதவளாக இருந்தால், தன் மகளின் நிலைமையை அறியாமல் இருப்பாள். மேலும் கணவன் மனைவி தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தால், பிள்ளைகளின் விஷயத்தில் அவர்களுக்கு அலட்சியம் ஏற்படும். அல்லது தாய் விவரமில்லாதவளாக இருந்தால் மகன்கள் சொல்வதையெல்லாம் நம்பிக் கொண்டு, எதற்கெடுத்தாலும் மகளைத் திட்டுவாள். அல்லது மகளுடைய சிறு சிறு தவறையும் தாய் குறை கூறுபவளாக இருந்தால் அவளிடம் எந்தத் தவறையும் மகள் சொல்லமாட்டாள்.

அல்லது தாய் தன் மகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்வதால் மஹ்ரமல்லாத ஆணுடன் தொலைபேசியில் பேச வாய்ப்பு கிடைத்து விடுகிறது. அல்லது அருகிலுள்ள மஹ்ரமல்லாத ஆண்களுக்குத் தனியாக இருக்கக்கூடிய பெண்ணுடன் காதல் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. அல்லது கணவன் தன் மனைவியின் மீது முழுமையான நேசமிள்ளாதவனாக இருந்தால் அவள் அன்புக்கு ஏங்கி மஹ்ரமல்லாத ஒருவனின் அன்பான பேச்சிற்கு அடிமையாகிவிடுவாள்.

அல்லது கணவன் வீட்டை விட்டு வெகு தொலைவில் இருப்பதால் மனைவி மஹ்ரமல்லாத ஒருவனின் வலையில் சிக்கிக்கொள்கிறாள். அல்லது கணவனின் அணுகுமுறை தன் மனைவியிடம் மிகவும் கண்டிப்பானதாக இருப்பதால், மனைவி எங்கு மென்மை கிடைக்கிறதோ அங்கு சாய்ந்து விடுகிறாள்.

அல்லது ஒரு பெண் தனியாக வெளியே செல்ல அனுமதி பெற்றவளாக இருப்பாள். எனவே கடைவீதிக்குச் சென்று பொருட்களை விற்க, வாங்க ஈடுபடும் போது மஹ்ரமல்லாத நபர்களுடன் பழக வாய்ப்பு கிடைக்கிறது. அல்லது ஒரு பெண் தனியாக அல்லது தோழியுடன் பள்ளி அல்லது கல்லூரிக்குச் செல்கிறாள், வழியில் மஹ்ரமல்லாத வாலிபர்கள் அவளைக் கவர்வதற்கு ஆசைப்படுவார்கள்.

இத்தகைய எல்லாச் சூழ்நிலைகளிலும், முதல் தவறு குடும்ப உறுப்பினர்களுடையது. அவர்கள் ஏன் அவளுக்கு பிற ஆண்களின் பால் சாய்வதற்கு வாய்ப்பளிக்கிறார்கள்?

இரண்டாவது தவறு, பல்வேறு தந்திரங்களால் அந்தப் பெண்ணைக் காதல் வலையில் சிக்க வைக்கும் மஹ்ரமல்லாதவருடையது.

மூன்றாவது தவறு அந்தப் பெண்ணுடையது. சூழ்நிலைகள் சாதகமற்றதாக இருந்தபோதிலும், அவள் ஏன் மஹ்ரமல்லாத ஒருவரிடம் நெருங்கிச் செல்கிறாள்? எனவே அவள் தன் மானத்தை இழந்து, வாழ்நாள் முழுவதும் அவமானத்தின் கறையைத் தன் நெற்றியில் பூசிக்கொள்கிறாள். தவறு மற்றவர்களுடையதாக இருக்கும் அனைத்து இடத்திலும், நம்முடைய தவறும் அவசியம் இருக்கும்.

கவிஞரின் கூற்றுப்படி,

தங்கள் மானம் மற்றும் கற்பின் மதிப்பை அறிந்த பெண்கள், கோடிக்கணக்கான துன்பங்களுக்கு மத்தியிலும், மஹ்ரமல்லாதவர்களின் பால் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மேலும் அவர்கள் யாருக்கும் நெருங்கி வர வாய்ப்பளிப்பதும் இல்லை. அத்தகைய பெண்களையே அல்லாஹ் தன்னிடம்

நெருக்கமாக்கி, அவர்களுக்கு இறைநேசத்தின் ஒளியை வழங்குகிறான்.

## 5] மஹ்ரம் அல்லாதவருடன் தனியாகப் பயணம் செய்தல்

இஸ்லாமிய மார்க்கத்தில், ஒரு பெண் தனியாகவோ அல்லது மஹ்ரமல்லாதவருடனோ பயணம் செய்வது அனுமதிக்கப்பட்டதல்ல. மேலும், இமாம் அபூ ஹனீஃபா ﵀ அவர்களின் கூற்றுப்படி, கடமையான ஹஜ்ஜுக்குப் பயணம் செய்வதும் மஹ்ரமல்லாதவருடன் அனுமதிக்கப்பட்டதல்ல. இளம் வயதினராக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, அனைத்துப் பெண்களுக்கும் இதே சட்டம் பொருந்தும்.

ஒரு பெண் நல்லொழுக்கமுள்ள மஹ்ரமல்லாதவர்களுடன் பயணம் செய்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று ஹம்மாத் ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள். இதுவே இமாம் மாலிக் ﵀ அவர்களின் கருத்தாகும். இமாம் ஷாஃபி ﵀ அவர்களின் கருத்து என்னவென்றால், அவள் பக்குவமும், இறையச்சமும் கொண்ட பெண்களுடன் பயணம் செய்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இமாம் மாலிக் ﵀ மற்றும் இமாம் ஷாஃபி ﵀ அவர்களின் ஒரு கருத்தின் படி ஒரு பெண் தமக்கு எந்த அச்சமும் இல்லை என்று உணர்ந்தால், அவள் தனியாக வெளியே செல்லவும் அனுமதி உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

ஹனஃபி சட்ட வல்லுநர்களின் கூற்றுப்படி, ஒரு பெண் மஹ்ரமானவர் உடனில்லாமல் ஹஜ் செய்தால், அவளுடைய ஹஜ் கூடிவிடும். இருப்பினும், மஹ்ரம் இல்லாமல் ஹஜ்ஜுக்குச் சென்றதால் அவள் பாவியாகக் கருதப்படுவாள்.

அவள் விஷயத்தில் குழப்பமும், தவறும் நடைபெறாது என்ற உறுதி ஏற்படும் பட்சத்தில், தான் மஹ்ரமான நபரும் கூட அவளுடன் பயணத்தில் செல்ல அனுமதிக்கப்படுவார். ஆனால் ஒரு நாளை விட குறைவான தொலைதூரப் பயணத்திற்கு ஒரு பெண் மஹ்ரமுடைய துணை இல்லாமல் பயணம் செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது.

لَا يَحِلُّ لِاِمْرَأَةٍ تُؤْمِنُ بِاللّٰهِ وَ الْيَوْمِ الْاَخِرِ اَنْ تُسَافِرَ مُسِيْرَةَ يَوْمٍ وَّ لَيْلَةٍ لَيْسَ مَعَهَا حُرْمَةٌ

**ஒரு முஃமினான பெண்ணிற்கு மஹ்ரமில்லாமல் ஒரு பகல் மற்றும் ஒரு இரவு தூரம் தனியாகப் பயணம் செய்வது அனுமதிக்கப்படாது என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.**

மஹ்ரம் என்பவர் ஒருபோதும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படாத தந்தை, சகோதரர் போன்ற நபர்களாவர். ஒரு பெண் தனியாகப் பயணம் புறப்பட்டால், அவளுடைய உயிர், உடைமைகள் மற்றும் கண்ணியம் அனைத்தும் ஆபத்தில் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக, தனியாக பயணம் செய்யும் அவள் ஏதேனும் ஒரு காரணத்தால் மயங்கி விழுந்தால் பிறரால் அவளுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பள்ளது. அல்லது மஹ்ரமல்லாத ஒரு ஆண் அவள் தனியாக வந்திருப்பதை அறிந்து கொண்டால் அவளுடைய கற்பை இழப்பதற்கான வலுவான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் ஒரு பெண் அதிகம் உணர்ச்சி வசப்படுவதை கவனித்து அறிவு குன்றியவளாகவும், வெளி உலகத்தைப் பற்றி அறியாதவளாகவும் இருப்பாள். எனவே, மஹ்ரமல்லாத ஒருவர் அவளை ஏமாற்றி, அவளுடைய கற்புக்கு களங்கம் விளைவிக்க முடியும்.

அல்லது அவளுடைய உடைமைகளை எடுத்துக்கொண்டு அவளைக் கொல்லவும் முடியும்.

மேலும், அவள் ஆணை விட உடல் ரீதியாக பலவீனமானவளாக இருக்கிறாள். எனவே, அவளுடைய தனிமையைப் பயன்படுத்தி, யாராவது அவளுடன் கட்டாய உறவு கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது. அல்லது அவளைக் கடத்திச் சென்று விடலாம். இதற்கு மாற்றமாக ஒரு மஹ்ரமான ஆண் உடனிருந்தால், இது போன்ற அனைத்து அசம்பாவிதங்களிலிருந்து பாதுகாப்பு ஏற்படும்.

لَا تُسَافِرُ اِمْرَأَةٌ اِلَّا وَ مَعَهَا مُحَرَّمٌ فَقَامَ رَجُلٌ فَقَالَ يَا رَسُوْلُ اللّٰهِ اِكْتَتَبْتُ فِي غَزْوَةٍ كَذَا وَ كَذَا وَ خَرَجْتُ اِمْرَأَتِيْ حَاجَةً قَالَ اِذْهَبْ فَحِجْ مَعَ اِمْرَاَتِكَ

**ஒரு பெண் மஹ்ரமில்லாமல் பயணம் செய்யக்கூடாது என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். உடனே ஒரு மனிதர், “அல்லாஹ்வின் தூதரே, என் மனைவி ஹஜ்ஜுக்குச் செல்கிறார். நான் யுத்திற்குச் செல்ல பெயர் கொடுத்துள்ளேன்” என்றார். அப்படியானால் உன் மனைவியுடன் நீயும் ஹஜ்ஜுக்கு செல்வாயாக என்று கூறினார்கள்.**

அந்தப் பெண் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, அவர் ஜிஹாதுக்குச் செல்வதை விட, தனது மஹ்ரமுடன் ஹஜ்ஜுக்குச் செல்வதே சிறந்தது என்பதை அவருக்கு நபி ﷺ அவர்கள் உணர்த்தியுள்ளார்கள்.

ஹைசம் இப்னு அதீ ﵀ அவர்கள் ஒரு சம்பவத்தைப் பதிவு செய்துள்ளார்கள். ஒரு அழகான பெண் ஹஜ் செய்வதற்காக மக்கா வந்தாள். உமர் இப்னு ரபிஆ என்பவர் அவளைப் பார்த்தும் அவள் மீது காதல் கொண்டார். அவர்

அவளிடம் பேச விரும்பினார். ஆனால் அந்தப் பெண் அவர் சொல்வதைக் கேட்காமல், சற்றும் பொருட்படுத்திக் கொள்ளாமல் அலட்சியப்படுத்தினாள். அவருக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

அடுத்த நாள், உமர் இப்னு ரபிஆ மீண்டும் அவள் முன் வந்த போது, அவள் கோபத்துடன் அவரிடம் "இங்கிருந்து ஓடிவிடு என்றாள். நீ அல்லாஹ்வின் புனிதமான ஹரமிற்குள்ளும், புனிதமான நாட்களிலும் இருக்கிறாய்" என்றாள். ஆனால் அவருக்கு இவ்வார்த்தை எவ்வித உணர்வையும் ஏற்படுத்துவதில்லை.

அவர் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே இருந்தார். இவர் நம்மை விட்டு விலக மாட்டான் என்பதை உணர்ந்த நல்லொழுக்கமுள்ள அவள் இவருக்கு தக்க பாடம் புகட்ட விரும்பினாள்.

எனவே மூன்றாம் நாள், அவள் தன் சகோதரனிடம், "என்னுடன் வா, ஹஜ் மற்றும் உம்ராவின் சட்டங்களை எனக்கு நன்றாகக் கற்றுக்கொடு" என்றாள். அன்றும், அவர் அவளுக்காக வழமை போல் காத்திருந்தார். அன்றைய தினம் அவர் அந்தப் பெண்ணின் சகோதரனைக் கண்டதும், அங்கிருந்து நழுவிச் சென்று விட்டார்.

இந்த நிலைமையைக் கண்ட அவள் சில கவிதைகளை பாடினாள்.

تَعْدُوْ الْذِئَابُ عَلَي مَنْ لَّا كِلَابٌ لَهُ

وَ تتقي صولة المستاسد الضاري

*காவல் நாய்கள் இல்லாதவரின் மீதே ஓநாய்கள் தாக்கும்.*

*அவைகளோ இரத்தவெறி கொண்ட சிங்கத்தின் தாக்குதலுக்கு அஞ்சுகின்றன.*

கலீஃபா மன்சூர் அப்பாஸி இந்தச் சம்பவத்தைப் பற்றி அறிந்தபோது, "குறைஷி குலத்தாரின் அனைத்துப் பெண்களுக்கும் இந்தச் சம்பவம் சொல்லப்பட வேண்டும். எந்தப் பெண்ணும் இதைக் கேட்காமல் இருக்கக் கூடாது என்பதே என் விருப்பம்" என்று கூறினார்.

لَا يُحْفَظُ الْمَرْاَةَ اِلَّا بَيْتُهَا اَوْ زَوْجُهَا اَوْ قَبْرُهَا

**ஒரு பெண் அவளுடைய வீட்டில், அல்லது அவளுடைய கணவனின் பராமரிப்பில் அல்லது அவளுடைய மண்ணறையில் தான் பாதுகாக்கப்பாக இருக்க முடியும் என்று ஒரு அரபுப் பழமொழி உண்டு.**

ஒரு மனிதன் ஏதேனும் அவசர வேலைக்காக வீட்டை விட்டு வெளியே தங்க நேர்ந்தால், அவன் தன் மனைவி மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வது அவசியம்.

பயணத்தைத் தொடங்கும் போது இந்த துஆவை ஓதுங்கள்.

اَللّٰهُمَّ اَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ وَ الْخَلِيْفَةِ فِي الْاَهْلِ
اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَ كَآبَةِ الْمَنْظَرِ
وَ سُوْءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَ الْاَهْلِ

**யா அல்லாஹ், நீயே இந்தப் பயணத்தில் நண்பனாக உள்ளாய். மற்றும் நீயே குடும்பத்தின் பிரதிநிதியாக உள்ளாய். யா அல்லாஹ், இந்தப் பயணத்தின் கஷ்டங்களிலிருந்தும்,**

**துன்பங்களிலிருந்தும் மேலும் விரும்பத்தகாத காட்சிகளைக் காண்பதை விட்டும் மேலும் செல்வம் மற்றும் குடும்பத்தாரில் தீய முடிவுகளை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.**

இதனால் தான் பயணம் புறப்பட்டவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறியவுடன் தாமதமின்றி வீட்டிற்குத் திரும்பும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

اَلسَّفَرُ قَطْعَةُ مِنَ الْعَذَابِ يَمْنَعُ اَحَدَكُمْ طَعَامَهُ وَ شَرَابَهُ وَ نَوْمَهُ فَاِذَا قَضَي نَهْمَتَهُ مِنْ سَفَرِهِ فَلْيَعْجَلْ اِلَي اَهْلِهِ

**ஒரு ஹதீஸில், பயணம் என்பது சிரமம், துன்பத்தின் ஒரு பகுதியாகும். அது உங்களை உணவிலிருந்தும், குடிப்பிலிருந்தும், உறக்கத்திலிருந்தும் தடுக்கிறது. எனவே பயணத்தின் தேவை முடிந்தவுடன், உங்கள் குடும்பத்தாரின் பால் விரைவாகத் திரும்பி விடவும் என்று வந்துள்ளது.**

தீனுடைய உழைப்பிற்காக, மார்கத்தை எத்தி வைப்பதற்காக யார் தன்னுடைய வீட்டை விட்டு தூரமாக உள்ளார்களோ அவர்களுடைய பெண்களை, இஸ்லாம் சாதாரண பெண்களை விட கூடுதல் முக்கியத்துவமுள்ளவர்களாக ஆக்கியுள்ளது.

حُرْمَةُ نِسَاءِ الْمُجَاهَدِيْنَ عَلَي الْقَاعِدِيْنَ كَحُرْمَةِ اُمَّهَاتِهِمْ مَا مِنْ رَجُلٍ مَنَ الْقَاعِدِيْنَ يَخْلُفُ رَجُلًا مِنَ الْمُجَاهِدِيْنَ فِي اَهْلِهِ فَيَخُوْنَهُ فِيهِمْ اِلَّا وَقَفَ لَهُ يَوْمَ الْقِيَامَةِ فَيَاْخُذُ مِنْ حُسْنَاتِهِ مَا شَاءَ حَتَّي يَرْضَي

**மற்றொரு ஹதீஸில் யுத்தத்திற்குச் செல்லாதவர்களின்**

**மீது முஜாஹிதீன்களுடைய மனைவிமார்களின் கண்ணியம் அவர்களுடைய தாய்மார்களின் கண்ணியத்திற்குச் சமமானது. போருக்குச் செல்லாதவர்களில் ஒருவர் ஒரு முஜாஹிதீனின் குடும்பத்திற்குத் துரோகம் செய்தால், நியாயத்தீர்ப்பு நாளில் அந்த முஜாஹிதை அழைத்து வரப்பட்டு, அந்தத் துரோகியிடமிருந்து அவர் விரும்பும் அளவுக்கு நற்செயல்களை எடுத்துக்கொள்வார்.**

இந்த போதனைகளின் அடிப்படையில்,

முதலாவதாக, பெண்கள் வீட்டை விட்டு தனியாக வெளியே செல்லக்கூடாது என்பதை இஸ்லாமிய மார்க்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

அவர்கள் பயணம் செல்ல நேர்ந்தால், ஒரு மஹ்ரமான ஆண் அவர்களுடன் செல்ல வேண்டும்.

அதேபோல், ஆண்கள் பயணம் செய்யும்போது தங்கள் பெண்களை வீட்டில் தனியாக விட்டுச் செல்லக்கூடாது.

பயணம் செய்வது அவசியமானால், அவளை அல்லாஹ்வின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, நோக்கம் நிறைவேறியவுடன் உடனடியாக வீட்டிற்குத் திரும்பி விட வேண்டும்.

மார்க்கப் பணிக்காக அல்லாஹ்வின் பாதையில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அந்தப் பெண் வீட்டில் தனியாக இருந்தால், இங்கு கூறப்பட்டுள்ள ஹதீஸின் கருத்துப்படி, முஸ்லிம்களுக்கு, அந்தப் பெண்ணுடன் விபச்சாரம் செய்வது, ஒருவன் தன் சொந்தத் தாயுடன் விபச்சாரம் செய்வதற்குச் சமமானதாகும். வெட்கமுள்ள எந்தவொரு நபரும் தன் சொந்தத் தாயுடன் விபச்சாரம் செய்ய மாட்டார் என்பது தெளிவானதாகும்.

## 6] பாட்டுப் பாடுவது விபச்சாரத்தை நோக்கிய ஒரு படியாகும்.

இஸ்லாத்தில் பாட்டுப் பாடுவது கண்டிக்கப்பட்டுள்ளது.

وَ مِنَ النَّاسِ مَن يَّشْتَرِي لَهُوَ الْحَدِيْثُ لِيَضُلُّ عَنْ سَبِيْلِ اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَ يَتَّخِذْهَا هُزُوًا أُولَئِكَ لَهُمْ عَذَابٌ مُهِيْنٌ

**அல்லாஹ் கூறியுள்ளான்: மக்களில் சிலர், அல்லாஹ்வின் பாதையிலிருந்து எவ்வித புரிதலும் இல்லாமல் பிறரை வழிகெடுப்பதற்காக, மேலும் அதை ஒரு பொழுதுபோக்காக ஆக்கிக் கொள்வதற்காக,கேளிக்கைப் பொருட்களை வாங்குகிறார்கள். அவர்களுக்கு இழிவுபடுத்தும் தண்டனை உண்டு.**

ரூஹுல்-மஆனியில், கேளிக்கை காரியங்கள் என்று ஆயத்தில் கூறப்பட்டுள்ள “ லஹ்வுல் ஹதீஸ்” என்பதன் பொருள், அல்லாஹ்வின் வணக்கத்திலிருந்து திசை திருப்பும் அனைத்தும் இதில் அடங்கும் என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்களிடம் இந்த வார்த்தையின் கருத்தைப் பற்றிக் கேட்கப்பட்டபோது, அவர்கள் மூன்று முறை சத்தியம் செய்து, “அல்லாஹ்வின் மீது ஆணையாக, அதன் பொருள் பாடுதல் மற்றும் மெல்லிசைகள்” என்று கூறினார்கள்.

இது தொடர்பான சில ஹதீஸ்களும் கூற்றுகளும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

ஹஜ்ரத் அபூ உமாமா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ﷺ அவர்கள், பாடும் அடிமைகளை வாங்குவதையும், விற்பதையும், அவர்களுக்குப் பாடக் கற்றுக் கொடுப்பதையும் தடை செய்தார்கள். மேலும் அவர்களால் பெறப்படும்

வருமானத்தை உண்பதையும் தடைசெய்துள்ளார்கள். பின்னர் அவர்கள் மேற்கண்ட வசனத்தை ஓதினார்கள்.

ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ﷺ அவர்கள் அறிவித்துள்ளார்கள்: நபிகள் நாயகம் ﷺ அவர்கள், பாட்டு சப்தம் மற்றும் ஒப்பாரி சப்தம் ஆகிய இரண்டு சப்தங்களை எழுப்ப வேண்டாம் என்று எனக்குத் தடை விதித்தார்கள்.

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்: "பாடும் ஒரு அடிமைப் பெண்ணுடன் அமர்ந்து அவள் பாடலைக் கேட்பவரின் காதுகளில் மறுமை நாளில் உருக்கிய ஈயம் ஊற்றப்படும்."

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்கள் கூறினார்கள்: "தண்ணீர் செடிகளை வளரச் செய்வது போல, இசை உள்ளத்தில் விபச்சார எண்ணத்தை வளரச்செய்கிறது."

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஒரு இடையரின் புல்லாங்குழல் ஓசையைக் கேட்டு, அந்த சப்தம் நீங்கும் வரை தமது விரல்களைக் காதுகளில் வைத்து அடைத்துக்கொண்டார்கள்.

ஹஜ்ரத் ஃபுழைல் பின் இயாழ் ؒ அவர்கள் கூறினார்கள்: "பாட்டு பாடுவது விபச்சாரத்தைத் தூண்டக்கூடிய மகுடி ஓசையாகும்." மேலும் லஹ்ஹாக் ؒ அவர்கள் கூறினார்கள்: "அது உள்ளத்தைக் கெடுத்து, அல்லாஹ்வின் கோபத்தை வரவழைக்கக்கூடியதாகும்.

யஜீத் பின் வலீத் கூறினார்கள்: "பனூ உமையாவைச் சேர்ந்தவர்களே! நீங்கள், பாட்டு பாடுவதிலிருந்து விலகி இருங்கள். ஏனெனில் பாடுவது காமத்தை அதிகரிக்கிறது."

ஒரு மகான் கூறுகிறார்கள்: "உங்கள் மனைவிமார்களைப் பாட்டு பாடுவதிலிருந்து விலக்கி வையுங்கள். ஏனெனில் பாடுவது விபச்சாரத்திற்கான அழைப்பாகும்."

ஹஜ்ரத் ஸஃப்வான் பின் உமையா ﵁ அவர் அறிவித்துள்ளார்: ஒருமுறை உமர் பின் குர்ரா என்பவர் ஆபாசமான பாடல்களைத் தவிர மற்ற பாடல்களைப் பாடுவதற்கு நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம் அனுமதி கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்: "நான் உனக்கு அதற்கு ஒருபோதும் அனுமதி தரமாட்டேன். நான் உன்னை மதிக்க மாட்டேன். உனக்கு எதையும் வழங்கமாட்டேன். அல்லாஹ்வின் எதிரியே, நீ பொய் சொல்கிறாய். அல்லாஹ் உனக்கு ஹலாலான, தூய்மையான வருமானத்தையும், உணவையும் வழங்கியுள்ளான். ஆனால் நீயோ தடைசெய்யப்பட்டதைத் தேர்ந்தெடுக்கிறாய்.

நான் உனக்கு இதை முன்பே தடை செய்திருந்தால், நீ என்னிடம் அநாகரீகமாக நடந்திருப்பாய். இங்கிருந்து எழுந்து சென்று அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேள். நினைவில் கொள், நீ இசைக் கருவிகளை ஒலிக்க வைத்தால், நான் உனக்கு வேதனையான தண்டனையை வழங்குவேன்.

உன் முகத்தைச் சிதைப்பேன். உன்னை உன் வீட்டிலிருந்து வெளியேற்றுவேன். மேலும் உன் உடைமைகள் அனைத்தையும் மதீனாவின் இளைஞர்களுக்கு மத்தியில் பங்கிட்டு விடுவேன் என்று கூறிய போது" உமருப்னு குர்ரா பதட்டுத்துடன் அங்கிருந்து வெளியேறினார்.

பிறகு நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "இவர்களே கீழ்ப்படியாதவர்களும், பாவம் புரியக்கூடிய மக்களும் ஆவர். இவர்களில் எவர் தவ்பா செய்யாமல்

மரணிக்கிறாரோ, அவரை அல்லாஹ் மறுமை நாளில் நிர்வாணமாக எழுப்புவான். அவரது உடலில் ஒட்டுத் துணி கூட இருக்காது. அவர் எழுந்து நிற்க முயற்சிக்கும்போது, தடுமாறி விழுவார்.

இறுதி நாட்களில் சிலர் குரங்குகளாக, பன்றிகளாக மாற்றப்படுவார்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறிய போது "அல்லாஹ்வின் தூதரே, அவர்கள் ஏகத்துவத்தையும், நபித்துவத்தையும் ஒப்புக்கொண்டிருப்பார்களா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "ஆம், அவர்கள் பெயரளவில் தொழுவார்கள், நோன்பு நோற்பார்கள், ஹஜ் செய்வார்கள்" என்றார்கள்.

உடனே நபித்தோழர்கள், "அவர்களுக்கு ஏன் இத்தகைய நிலை ஏற்படும்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் இசைக்கருவிகள், நடனமாடும் பெண்கள் மற்றும் தபலா வாசிப்பதில் மிகுந்த பிரியம் கொள்வார்கள்" என்றார்கள். மேலும் அவர்கள் மது அருந்துவார்கள். இரவு முழுவதும் இவ்வகையான கேளிக்கைகளில் மூழ்கியிருப்பார்கள். காலை அடைந்தவுடன், அவர்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாறியிருப்பார்கள்.

## இசை மற்றும் பாடலினால் ஏற்படும் தீய விளைவுகள்

## (ஒரு உறுதிப்படுத்தப்பட்ட ஆய்வு)

1.1920 முதல் 1950 வரையிலான பிரெஞ்சு சூழலில், பொழுதுபோக்கு அம்சங்களுக்காகப் பாடல் மற்றும் இசை பயன்படுத்தப்பட்டது. வேலையால் சோர்வடைந்த மக்கள், மற்றும் குடும்பப் பிரச்சினைகளால் குழப்பமடைந்தவர்கள்,

பாடலைக் கேட்பதன் மூலம் தங்கள் கவலைகளைச் சிறிது நேரம் மறந்து, மனதைக் கவலைகளிலிருந்து விடுவிக்க முடியும் என்று உணர்ந்தனர்.

இதைக் கேட்பவர்கள் கொஞ்ச நேரத்திற்கு தங்களுடைய கவலைகளை மறந்து, மனதிலிருந்து பாரத்தை இறக்கி வைப்பதைப் போன்றும், சுமை இலகுவாகி சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் நிம்மதியாக உறங்குவதையும் உணர்ந்தனர். பிறகு மீண்டும் தங்கள் வேலையில் மும்முரமாக ஈடுபட முடிகிறது என்று எண்ணினார்கள்.

2.1950 முதல் 1985 வரையிலான கால கட்டங்களில் முதலீட்டாளர்கள் தங்கள் வணிக நோக்கங்களுக்காக இசை மற்றும் பாடலைப் பயன்படுத்தத் தொடங்கினர். உதாரணமாக, ஒரு நடிகர் அல்லது நடிகையின் பாடல் மக்களிடையே பிரபலமடைந்து விட்டால், அவர்கள் அந்த நபர்களின் மூலமாக தங்கள் வணிகப் பொருட்களை விளம்பரப்படுத்தினர்.

உதாரணமாக, அவர் பெப்சி கோலா குடிப்பதை அவர்கள் தொலைக்காட்சியில் காட்டுவார்கள். அதனால் அந்த பானத்திற்கான தேவை அதிகரித்து விடும். அல்லது அவர்கள் அந்த நடிகருக்கு ஒரு தனிப்பட்ட வகை அமைப்பிலான ஆடையை அணிவித்து, அவருடைய நேர்காணலை ஒளிபரப்புவார்கள். அதனால் இளம் தலைமுறையினர் அந்த வகையான ஆடையை விரும்ப ஆரம்பித்து விடுவார்கள்.

எனவே, முதலீட்டாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் இதுபோன்ற ஆடைகளைத் தயாரிப்பதன் மூலம் நிறைய பணம் சம்பாதித்தனர். அவர்கள் விளம்பரத்திற்காக 100

டாலர் செலவழித்தால், ஆயிரக்கணக்கான டாலர்கள் அதனால் லாபம் ஈட்டுவார்கள்.

ஒருவரால் ஈர்க்கப்படும்போது அல்லது ஒருவரை விரும்பும்போது, அவர்களைப் போலவே இருக்க வேண்டும், அவர்களைப் போலவே உண்ணவும், பருகவும், உடுத்தவும் ஆசைப் படுவது மனித இயல்பாகும். பாடகர்கள், நடிகர்கள் ஒரு பொருளில் கையெழுத்திடுவதற்காக மில்லியன் கணக்கான டாலர்களைப் பெறத் தொடங்கியபோது, இளைய தலைமுறையினர் நாமும் பாடகர்களாக, நடிகர்களாக ஆனால் நமது ஆற்றலைப் பயன்படுத்தி சம்பதிக்கலாமே என்று எண்ணினர்.

இவ்வாறாக இசைத் துறையில் நுழைவதற்கு மக்கள் கூட்டம் அலைமோதத் தொடங்கியது. ஏராளமான அழகான இளைஞர்கள் தங்கள் மாயக்குரலின் வசீகரத்தைக் காட்ட துடித்துக் கொண்டிருந்தனர்.

3.1985 முதல் 2000 வரையிலான காலகட்டங்களில், இசை சமூகம் மற்றும் சுற்றுப் புறத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனால், சைத்தான் மக்களின் மனதில் புதிய புதிய ராகங்களையும், மெல்லிசைகளையும், பாடல்களையும் புகுத்தத் தொடங்கினான். பாடகர்கள் பாடல்களுடன் குறிப்பான இசை மற்றும் நடன முறைகளையும் சேர்த்துக் கொண்டனர்.

இந்த இசையும் பாடல்களும் மிகவும் பிரபலமடைந்த போது, அது பாப் இசை என்று பரவலாக அறியப்பட்டது. இத்தகைய பாடல்களின் நோக்கம், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலியல் அன்பையும், காதலையும் குறிப்பிடுவதாகவே இருந்தது. உதாரணமாக,

To be in love (காதல் செய்வது எப்படி?)

Guy missing a girl (காதலன் தன் காதலி இல்லாமல்.)

Pain is real but no one knows (வலி உண்மையானது, ஆனால் காரணங்கள் தெரியாது.)

இத்தகைய பாடல்கள் மேற்கத்திய சூழலில் எதிர் பாலின ஈர்ப்பு மற்றும் காதலன், காதலி போன்ற கருத்தை மிகவும் பிரபலப்படுத்தின. இதன் நோக்கம், காதல் கலாச்சாரத்தைப் பரவலாக்குவதாகும். அதனால் பள்ளி மற்றும் கல்லூரிகள் மேலும் பல்கலைக்கழகங்களில் பயிலக் கூடிய இளம் ஆண், பெண் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் முறையற்ற உறவுகளை வைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

ஆரம்பத்தில், காதல் செய்வது எப்படி என்ற விதத்தை விவரிக்கும் பாடல்களை மட்டுமே அவர்கள் விரும்பினர். பிறகு நட்பு தொடங்கி சில நாட்களிலேயே பிரச்சனைகளும் மனக்கசப்புகளும் எழத் தொடங்கியபோது, காதலன் தன் காதலியைப் பிரிந்த நேரத்தில் பாடும் பாடல்களை அவர்கள் விரும்பினார்கள். அதனால், ஒவ்வொரு இளைஞனும் தன் சூழ்நிலைக்கேற்ப தனக்குப் பிடித்த பாடல் வரிகளைக் கொண்ட பாடலைத் தன் வீட்டிலும், வாகனத்திலும், ஏன் எல்லா இடங்களிலும் நூற்றுக்கணக்கான முறை கேட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்வாறே இசைப் பிரியர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தது. இந்தச் செயல் காதல் என்ற பெயரில் தொடங்கி, படிப்படியாக இச்சை மற்றும் காமத்தின் வடிவத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டது என்பதை காலம் சான்று பகர்கின்றது.

பொதுவாக பாப் இசைப் பாடல்கள் ஒருவரிடம் காமத்தைத் தூண்டி, பாலியல் ஆசையை நிறைவேற்ற

அவரைத் தூண்டுகின்றன. பாடகர் பாடும்போது, பின்னணியில் அரை நிர்வாண அழகிய மாடல் பெண்கள் நடனமாடுவதும் காட்டப்படுகிறது. இது எரியும் நெருப்பில் பெட்ரோல் ஊற்றுவது போல தவறைத் துரிதப்படுத்தி விடுகிறது.

இதனால் இளைஞர்கள் இது போன்ற பாடல்களைக் கேட்ட பிறகு தங்களைக் கட்டுப்படுத்திக் கொளள முடியாமல் எப்படியோவொரு விதத்தில் தங்களுடைய காமத்தைத் திருப்திப்படுத்திக் கொள்ள முயல்கிறார்கள். ஆக, காதலின் நோக்கத்துடன் தொடங்கிய பாடல்களின் தொடர், இறுதியில் காமம் என்ற அதன் தர்க்கரீதியான முடிவை எட்ட ஆரம்பித்தது.

மழையானது பூமியில் புற்களை முளைக்கச் செய்வதைப் போல் இசையைக் கேட்பது உள்ளத்தில் விபச்சார எண்ணத்தை உண்டாக்குகிறது என்பதற்கு நபிகள் நாயகம் ﷺ அவர்களின் ஹதீஸிலிருந்து தெளிவான ஆதாரம் உள்ளது.

4) மேற்கத்திய சூழலில், அடிக்கடி நிகழும் கள்ள உறவுகளால் திருமணமாகமலேயே தாய்மார்களாக ஆகிவிட்ட பல பெண்கள் உள்ளனர். பல சிறுமிகள் 10 வயதிலேயே கர்ப்பமாகி விடுகிறார்கள். 11 ,12 மற்றும் 13 வயது சிறுமிகள் கர்ப்பமாவது அன்றாட நிகழ்வாகிவிட்டது. அத்தகைய சிறுமிகள் பிற்காலத்தில் பொதுவாகத் தங்கள் பிள்ளைகளைத் தங்களிடமிருந்து விரைவாக விலக்கி விடுகிறார்கள்.

இதன் விளைவாக, அத்தகைய குழந்தைகள் பள்ளிக்குச் சென்று, தங்கள் தனிமையைப் போக்கிக்கொள்ள யாரையாவது நண்பர்களாக ஆக்கிக்கொள்கிறார்கள். இந்த

இளம்பிள்ளைகள் தங்கள் நேரத்தைச் செலவிடுவதற்காக, “கேங்” எனப்படும் ஒரு குழுவைத் தங்களுக்குள் உருவாக்கிக்கொள்கிறார்கள்.

அவர்களுக்குக் குடும்பப் பின்னணியும் இல்லாததால், அவர்களின் கேங்கே அவர்களின் குடும்பமாகிவிடுகிறது. தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் சிறு சிறு குற்றங்களுடன் தொடங்கி, காலப்போக்கில் அவர்கள் பெரிய குற்றவாளிகளாக மாறுகிறார்கள். அவர்களின் உள்ளங்களில் சமூகத்தின் மீதான கோபமும், வெறுப்பும் நிறைந்திருக்கும்.

மேலும் தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் மற்றும் சண்டைகளால், அந்த வெறுப்பு இன்னும் உச்சத்தை அடையும். எனவே அவர்கள் தங்களை அபாக்கியசாலிகளாக எண்ணிக் கொண்டு பிறரிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொள்ள விரும்புவார்கள்.

இத்தகைய குற்ற மனப்பான்மை கொண்ட இளைஞர்களின் வாழ்க்கையின் ஒரே நோக்கம், மற்றவர்களைப் பழிவாங்குவதும், அதன் மூலம் தங்கள் கோபத்தைத் தணிப்பதுமே ஆகும். எனவே, **(take anger out)** தங்கள் கோபத்தை வெளிப்படுத்தும் நோக்கத்தில், இந்த மக்கள் **(RAP)** ராப் இசை எனப்படும் ஒரு புதிய பாணியிலான இசையையும், பாடலையும் தொடங்கினர்.

இந்தப் பாடல்களில் வழக்கமான கவிதைகளுக்குப் பதிலாக, கவிதைக் கட்டுப்பாடுகளைத் தாண்டி, வேதனையான கதைகளை உணர்ச்சிமிக்க குரலில் இசையுடன் சொல்லப்படுகின்றன. கேட்போரின் இதயங்களைத் தொடும் விதத்தில் அவை அமைந்துள்ளன. இதைக் கேட்பவர்கள் அனுதாப உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்டு, இந்த

வகை இசைக்கு அடிமைகளாகி விடுகிறார்கள். முஸ்லிம் இளைஞர்கள் கூட இந்த அபாயகரமான இசையை நல்லதாகக் கருதுகின்றனர்.

இதைக் கேட்கக் கூடிய இளைஞர்கள் நாங்கள் பாடல்களைக் கேட்பதில்லை, தெருக் கதைகளைத் தான் கேட்கிறோம் என்று தங்கள் பெற்றோரிடம் கூறுகிறார்கள். இத்தகைய பாடகர்கள் பொதுவாக நீண்ட முடியுடன், அலங்கோலமான ஆடைகள், நிர்வாணம், மற்றும் உடல் பாகங்களில் வண்ணமயமான டாட்டூ அடையாளங்கள், பச்சை குத்தல்கள் மற்றும் கைகளில் உள்ள கிதார்களினால் அடையாளம் காணப்படுகிறார்கள்.

ஆரம்பமாக ஆப்பிரிக்க அமெரிக்கா வாழ் மக்கள் இந்த இசையை தொடங்கினர். ஆனால் காலப்போக்கில் அனைத்து வெள்ளையர்களும், கறுப்பினத்தவர்களும் அதன் பிடியில் சிக்கிக் கொண்டனர். இப்போதெல்லாம் ராப் இசையே இளைஞர்களின் விருப்பமான இசையாக உள்ளது. சாலையில் உலாவக் கூடிய சிறவர், சிறுமியர்கள் மற்றும், ஓட்டப்பயிற்சியில் ஈடுபடக்கூடியவர்கள் தங்களுடைய பைகளில் எப்போதும் வாக்மேனை வைத்திருக்கிறார்கள்.

மேலும், அவர்கள் ஹெட்ஃபோன்கள் மூலம் எல்லா நேரமும் இசையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில காலத்திற்குப் பிறகு, அந்த பாடலுடைய கருத்தின் தாக்கம் கேட்பவர்களிடம் உருவாகத் தொடங்குகிறது. ஆகையால், சாதாரண வீடுகளைச் சேர்ந்த நல்ல பிள்ளைகள் கூட, கேங்க் உறுப்பினர்கள் செய்யும் அதே காரியங்களைச் செய்யக்கூடியவர்களாக மாறிவிடுகின்றனர்.

நாளடைவில் ஏதேனும் ஒரு பெரிய குற்றம் செய்து தொலைக்காட்சித் திரையில் தோன்ற வேண்டும்

என்றோ, செய்தித்தாள்களில் இடம்பெற வேண்டும் என்றோ விரும்புகிறார்கள். அத்தகைய இளைஞர்களிடம் உங்களின் குறிக்கோள் என்ன என்று கேட்டால், ஆபத்தான குற்றவாளிகளின் சிறையான அங்கோலா சிறைச்சாலையை எப்படியாவது அடைய வேண்டும் என்று அவர்கள் பதிலளிப்பார்கள்.

கவிஞரின் கூற்றுப்படி,

*மண் எங்கிருந்து எடுக்கப் பட்டதோ அந்த இடத்திற்கே சென்றடைந்தது.*

மேற்கத்திய மக்கள் ஆரம்பத்தில் இந்த வகையான இசையை விரும்பவில்லை. மாறாக, இதைக் கேட்டு அவர்கள் தங்கள் கோபத்தையும், வெறுப்பையும் வெளிப்படுத்தினர். ஆனால் காலப்போக்கில், அவர்களுடைய இளைஞர்களின் காரணமாக இந்த இசை பிரபலமாகிவிட்டது. இன்றைய காலகட்டத்தில் அவர்களிடம் இதுவே மிகச்சிறந்த இசையின் வகையாகும். இதன் குறுந்தகடுகள் ஏராளமாக விற்பனையாகின்றன. முதலீட்டாளர்கள் இதைத் தங்கள் நாடுகளின் மூலைமுடுக்கெல்லாம் கொண்டு சேர்த்து விட்டனர்.

5) பாடகர்கள் சிறிது காலம் மக்களின் ஒடுக்குமுறையைப் பற்றிப் பேசி, மக்களிடையே பிரபலமடைந்தபோது, சற்று முன்னேறி, நம்பிக்கையற்ற, நிராசையுடன் வாழ்வை கழிக்கக்கூடியவர்களின் உள்ளங்களை ஆறுதல் படுத்தக்கூடிய இசையை உருவாக்கினார்கள்.

மேற்கத்திய சூழலில், மனச்சோர்வுடனும், மன அழுத்தத்துடனும் வாழ்பவர்கள் பலர் உள்ளனர். சிலர் தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். சிலர்

வீட்டை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். சிலர் தங்கள் அன்புக்குரியவர்களை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். சிலர் முதுமையில் தனிமையில் இருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் அல்லாஹ்வை விட்டுப் பிரிந்திருப்பதால் மன அழுத்தத்தில் இருக்கிறார்கள்.

அத்தகையவர்கள் தங்களுடைய மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக மாத்திரைகளை எடுத்துக் கொள்கின்றனர். பெரும்பாலும் அவர்கள் தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஹெவி மெட்டல் என்ற ஒரு புதிய வகை இசை மிகவும் பயனுள்ளதாகத் தெரிந்தது.

இந்த வகை இசையில், பாடகர் கத்துவார், கூச்சலிடுவார், உரத்த குரலில் கத்தி கத்திப் பாடுவார், அதிக சத்தம் எழுப்புவார். மேலும் முரட்டுத்தனத்தின் எல்லையை அடைந்து விடுவார்.

ஒரு வெறுப்புற்ற வெறியன் தனது கோபத்தை வெளிப்படுத்துவதைப் போல, இறக்கும் தருவாயில் உள்ள ஒருவன் சத்தம் மற்றும் கூச்சலின் மூலம் உள்ளத்தின் பாரத்தை இறக்கி வைப்பதைப் போல் அமைந்திருக்கக்கூடிய இவ்வகையான இசையும் பாடல்களும் மிகவும் பிரபலமடைந்தன. இது ராக் இசை என்று அழைக்கப்படுகிறது.

6) மக்கள் இறைவனை வெறுத்து, தன்னை வணங்கும்படி செய்வதற்காக, சில பாடகர்களின் உள்ளங்களில் ஒரு புதிய வகை இசையை சைத்தான் உருவாக்கினான். அந்த இசைக்கு சைத்தானிய வழிபாடு என்றே பெயர் வைக்கப்பட்டுள்ளது. இது ராக் இசையின் இரண்டாம் வகை என்று அழைக்கப்படுகிறது. இந்த இசையில்,

மனோ இச்சையையும், சைத்தானையும் வணங்குவது தொடர்பான பாடல்கள் இடம்பெறுகின்றன.

நாங்கள் சைத்தானை வணங்குபவர்கள், மனோ இச்சையின் அடிமைகள் என்றும், இதுவே எங்களுடைய வாழ்க்கையின் நோக்கம் என்றும் இதில் வெளிப்படையாகக் கூறப்படுகிறது. இவ்வகைப் பாடல்களைப் பாடும் பெண்கள் எல்லோருக்கும் முன்பாக மேடையில் முழு நிர்வாணகப் பாடுவார்கள். இளைஞர்களின் காமத்தைத் தூண்ட உடலின் சில அங்குலங்களைத் தவிர மற்ற அனைத்து உடல் பாகங்களையும் வெளிப்படுத்துவார்கள்.

அவர்களின் அசைவுகளைப் பார்க்கக்கூடிய, அவர்களின் பாடல்களின் ஓசையைக் கேட்கக்கூடிய இளைஞர்கள் அவர்களைத் தங்கள் கைகளில் அணைத்துக் கொள்ளத் துடிப்பார்கள். இறையச்சம் என்ற விஷயத்தை முற்றிலும் அழித்து ஒவ்வொரு வார்த்தையும் சைத்தானை வணங்கக் கற்பிக்கும் வகையில் அவர்களுடைய பாடல்கள் அமைந்திருக்கும்.

இத்தகைய ஆண் பாடகர்கள் மிகவும் அநாகரிகமாக உடை அணிந்திருப்பார்கள். முதலில், ஜீன்ஸ் அணிந்திருந்தனர். பின்னர், ஆங்காங்கே கிழிந்துள்ள ஜீன்ஸை அணியத் தொடங்கினர். இன்று, ஸ்டோன் வாஷ் ஜீன்ஸ் என்பது பரவலாகிவிட்டது. இதை அவர்கள் நன்கு ஊக்குவித்ததால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, முதலீட்டாளர்களுக்கு தங்களுடைய தொழிற்சாலைகளில் புதிய வகை ஜீன்ஸ்களைத் தயாரிக்கும் வாய்ப்பு கிடைத்து விட்டது.

அவர்களின் தொழிற்சாலைகளின் லாபம் அதிகரித்தது. சந்தையில் அவர்கள் தயாரித்த ஆடைகளுக்கு பெரும் தேவை ஏற்பட்டது. புதிய புதிய ஆர்டர்கள் வரத்

தொடங்கின. இவ்வகையான இசையில் பாடக்கூடிய ஆண் பாடகர்கள் பெரும்பாலும் கருப்பு நிற ஆடைகளை அணிந்திருப்பார்கள். மேலும் அவர்கள் முகத்தின் வெவ்வேறு பகுதிகளில், சில சமயங்களில் மூக்கிலும், சில சமயங்களில் காதுகளிலும், சில சமயங்களில் புருவங்களிலும், சில சமயங்களில் உதடுகளிலும், சில சமயங்களில் நாக்கிலும் விசித்திரமான மற்றும் அசாதாரணமான இடங்களில் மோதிரங்கள் மற்றும் ஆபரணங்களை அணிந்திருப்பார்கள்.

அவர்கள் தங்களுடைய வெளித்தோற்றத்தை சைத்தானின் பிள்ளைகளைப் போன்று அமைத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் தங்கள் இசையை கண்ட்ரி மியூசிக் (country music) என்ற பெயரில் பிரபலப்படுத்தியுள்ளனர்.

7) இசையின் இது போன்ற புதிய வடிவங்கள் விதவிதமான பரிமாணங்களை வெளிப்படுத்தியது. அதனால் ஒவ்வொரு இசை தொடர்பாகவும் தனித்தனி வீடியோக்கள் தயார் செய்யப்பட்டது. இதற்காக, எம்டிவி (MTV) என்றழைக்கப்படும் ஒரு தனித் தொலைக்காட்சி சேனல் தொடங்கப்பட்டது. இசைப் பிரியர்கள் அதன் மூலம் எப்போதும் பாடல்களை கேட்டு மகிழ வாய்ப்பு கிடைத்தது. இந்தத் தொலைக்காட்சி சேனலை வெளிநாடுகளைத் தவிர, சிறிய மற்றும் பெரிய நாடுகள் அனைத்திலும் திறக்க முடியும்.

இதனால் தற்போது இளம் தலைமுறையினர் மீது இதன் தாக்கம் மிக விரைவாக உணரப்படுகிறது. இந்த சேனல் வெறுமனே இசையை மட்டும் ஒளிபரப்பாமல் மேற்கத்திய நாகரிகத்தைப் பரப்பும் ஒரு கருவியாகவும் மாறி வருகிறது. இதைத் தான் ஊடகங்கள் வாயிலாக

மக்களின் உள்ளங்களிலும், சிந்தனைகளிலும் (culture through media) நாகரிகத்தைப் புகுத்துதல் என்று கூறப்படுகிறது.

இளைஞர்களிடம், நமது பிறப்பின் நோக்கம் இதுவே என்று பின்வருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

உயிரோடு இருங்கள் (live) காதலித்து, களிப்புறுங்கள் (Love and laugh)

உங்கள் கனவுகள் நனவாகும். (your dreams Will come true)

## 8] சைத்தானின் ஆழ்ந்த சதித்திட்டங்கள்.

### உணரமுடியாத இரகசியத் தகவல்கள்

தற்போதைய அறிவியல் யுகத்தில், மனித மூளை குறித்த ஆராய்ச்சி மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், மூளையின் உண்மைத்தன்மையையும், இயல்பையும் புரிந்துகொள்வதற்காக, ஒவ்வொரு நாளும் ஆய்வகங்களில் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

எனவே, நாளுக்கு நாள் புதிய தகவல்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன. மனித மூளையானது, அதன் வெளிப்புற உறுப்புகளைக் கட்டுப்படுத்த அதன் 15 சதவீதப் பகுதிகளை மட்டுமே பயன்படுத்துகிறது என்றும், அதே சமயம் மூளையின் 85 சதவீதம் எல்லா நேரங்களிலும் பயன்பாட்டில் உள்ளது என்ற விசித்திரமான ஒரு உண்மை கண்டறியப்பட்டுள்ளது. அந்த மீதமுள்ள 85 சதவீத மூளை என்ன வேலை செய்கிறது என்று கேட்கப்பட்டால் அதன் ரகசியத்தை இதுவரை யாரும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே பதில் கூறப்படும்.

நாம் உணரும் சமிக்ஞைகளையும், நாம் உணராத ஆழ்மன சமிக்ஞைகளையும் நமது புலன்கள் மூளைக்கு ஒவ்வொரு வினாடியும் அனுப்புகின்றன என்பது தெளிவாகியுள்ளது. மூளையில் அவை பெறும் தகவல்களின் காரணமாக, ஒரு நபரின் ஆளுமையில் பெரிய தாக்கம் ஏற்படுத்துகிறது என்ற உண்மையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக, நாம் சாலையில் ஒரு காரைப் பார்த்தால், மூளை பின்வரும் தகவலைப் பெறுகிறது.

**புலன்சார் தகவல்:**

கார் நகர்ந்து கொண்டிருந்தது. அது சிவப்பு நிறமாக இருந்தது. அதன் வேகம் மெதுவாக இருந்தது. அதை ஒரு ஆண் ஓட்டிச் சென்றான்.

**புலன்சாரா தகவல்:**

அந்தக் கார் விலை மதிப்புமிக்கதாக இருந்தது. சாலை ஆள் நடமாற்றமின்றி இருந்தது. தனியாக செல்வதால் கொள்ளையடிக்கப் படுவோம் என்ற எந்த ஆபத்தும் இல்லை.

மற்றொரு உதாரணமாக நிறங்களைப் பற்றி கூறலாம். மனிதக் கண்களுக்குப் பச்சை நிறத்தின் தாக்கம் மிகவும் நேர்மறையானது. அதனால்தான் அல்லாஹ் மரங்களையும், காய்கறிகளையும், புற்கள் போன்றவற்றையும் பச்சையாகப் படைத்துள்ளான். இதனாலேயே இன்று, பல்கலைக்கழகங்களில் கரும்பலகைக்குப் பதிலாகப் பச்சைப் பலகை பயன்படுத்தப்படுகிறது. மேலும் போக்குவரத்து சமிக்ஞைகளில் நகர்வதற்குப் பச்சை விளக்கு பயன்படுத்தப்படுவதும் இதனாலேயாகும்.

மேலும் சிவப்பு நிறம் எப்போதுமே ஆபத்தின் அறிகுறியாக இருந்து வருகிறது. கண் சிவப்பு நிறத்தைப் பார்த்தவுடன், மூளை உடனடியாக அதனுடைய ஏதேனுமொரு ஆபத்தை உணர்ந்து கொள்ளும். அதனால்தான் வாகனங்களை நிறுத்துவதற்குச் சிவப்பு விளக்கு பயன்படுத்தப்படுகிறது. ஒரு செய்தியை நமது மூளைக்கு எவ்வாறு கடத்துகிறது என்ற இரகசியத்தைக் கண்டறிய விஞ்ஞானிகள் இரவும் பகலும் உழைத்தனர்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் பயனடைய முதலாளித்துவ அமைப்புகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டன. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வகை நறுமணத்தை நுகர்ந்தால், ஒருவருக்குக் காம உணர்வு ஏற்படுகிறது. எனவே விலை மாதுக்கள் தங்கள் வியாபாரம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக இந்த நறுமணத்தை அதிகம் பயன்படுத்தத் தொடங்கினர்.

மற்றொரு வகையான நறுமணத்தை நுகர்வதினால் ஒருவரது உள்ளம் அவனிடம் உள்ள அனைத்து பணத்தையும் செலவழிக்கத் தூண்டும். எனவே, ஐரோப்பாவின் பெரிய பல்பொருள் அங்காடிகள் ஏசியின் குளிர்த காற்றினூடே இந்த நறுமணத்தைத் தெளிக்கத் தொடங்கின. இந்தச் சூழலில், நூறு ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வாங்க வீட்டிலிருந்து வரும் ஒருவர், பல நூறு ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வாங்கிச் செல்வார் என்பது அனுபவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

இந்த ஆராய்ச்சி வெளிச்சத்திற்கு வந்தபோது, வேறு வழியின்றி மக்கள் நமது பொருட்களை வாங்க நிர்பந்திக்கும் விதமாக ஒரு தொடர் வழிமுறையை நாமும் ஏன் தொடங்கக்கூடாது என்று முதலீட்டாளர்கள் நினைத்தார்கள்.

எனவே, வாடிக்கையாளர்கள் நமது பொருட்களை வாங்க எப்படி அவர்களுடைய சிந்தனையைத் திருப்புவது என்ற தலைப்பில் ஆய்வு செய்ய பல்கலைக்கழகங்களுக்கு கணக்கில்லா பணங்களை வாரி இறைத்தனர்.

சுருங்கக்கூறினால் ஐம்புலன்களின் வழியாக மனித மூளைக்கு எந்தவொரு தகவலையும் கண்ணுக்குப் புலப்படாத வகையில் கடத்துவதற்கான வழிகளை விஞ் ஞானிகள் கண்டறிந்தனர்.

## விளம்பரமா அல்லது வேட்டையா

தொலைக்காட்சித் திரையில் பல்வேறு பொருட்களுக்கான விளம்பரங்கள் காட்டப்படும்போது, அவற்றுடன் இசையும் சேர்த்தே ஒளிபரப்பப்படும். இந்த இசையுடன் மனித மனதில் சென்று பதியக்கூடிய ஒரு செய்தியும் சேர்க்கப்படும். அது என்னவென்றால் மக்கள் பொருட்கள் வாங்க கடைவீதிக்குச் செல்லும்போது, அதை வாங்கியே ஆக வேண்டும், அதை வாங்காமல் திருப்தி அடையாதே என்ற செய்தி சேர்க்கப்பட்டிருக்கும். இந்த முறைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரமும் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, விளம்பரம் என்பது உண்மையில் வேட்டையாட வலைவிரிப்பதைப் போன்று மாறிவிட்டது.

## சைத்தானின் பொறி

இசையின் மூலம் மனிதர்களின் மனங்களுக்குத் தங்கள் செய்தியைப் புலப்படாத வழியில் அனுப்பும் சோதனைகள் வெற்றிகரமாக நிறைவேறிய போது வணிகர்களும் நிறுவனங்களும் மட்டுமல்ல, சைத்தானும் அவனது சீடர்களும் இதைத் தங்களுடைய தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். அப்பட்டமான ஆபாசத்தையும்,

ஒழுக்கக்கேட்டையும் பரப்ப விரும்பக்கூடியவர்கள், அதை பாடல்களின் இசையோடு சேர்த்துக் கொண்டனர்.

மிகவும் பிரபலமாகப் போகும் ஒரு பாடலை நூற்றுக்கணக்கான தடவைகள் அல்ல, ஆயிரக்கணக்கான தடவைகள் கேட்கப்படும் என்று அவர்களுக்கு நன்கு தெரியும். இதனால், சைத்தானின் செய்தி ஆயிரக்கணக்கான முறை அவர்களின் மனதைச் சென்றடைந்து விடும். இதைத் தான் (Back track) பின்னணிச் செய்தி என்று அழைக்கப்படுகிறது.

உதாரணமாக, கேட்பவர் பாடலைத் தன் புரிதலுக்கு ஏற்பக் கேட்பார். ஆனால் அவரது மனதில் சைத்தானிய எண்ணங்கள் அவனுக்கே தெரியாமல் ஊடுருவி விடும். ஏனெனில், பாடலின் பின்னணியில் சைத்தானுக்கு வழிபடு என்பது போன்ற செய்தி வழங்கப்பட்டிருக்கும். மற்றொரு பாடலைக் கேட்டவர்களுக்குத் தன்னுடைய தாய் மீது வெறுப்புணர்வுகள் வருவது கண்டறியப்பட்டது. அது கண்டுபிடிக்கப்பட்டபோது, அதன் பின்னணி இசையில் (kill your mom) தாயைக் கொலை செய் என்ற செய்தி இருந்தது.

சில வருடங்களுக்கு முன்பு, மேற்கத்திய சூழலில் ஓரினச் சேர்க்கையை மிகவும் எதிர்மறையாகப் பார்க்கப்பட்டது. ஆனால், சட்டபூர்வ அங்கீகாரம் கிடைத்தபோது, பொது மக்களிடம் இது பற்றிய நேர்மறையான கருத்தோட்டத்தை ஏற்படுத்த பிரபலமான பாடல்களின் இசையில் பின்னணிச் செய்தியில் ஓரினச்சேர்க்கை சரியானது (gays Life style) என்று கருத்து சேர்க்கப்பட்டது.

எனவே தான் இன்றைய சூழலில், ஓரினச்சேர்க்கையைக் கெட்டது என்று யாராவது சொன்னால், அந்த நபர் மிகவும்

கெட்டவராகக் கருதப்படுவார். ஆண்களும் பெண்களும் இந்த வாழ்க்கை முறையை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர். முன்பு மருத்துவர்கள் கூட அதன் மருத்துவ ரீதியான தீமைகளை கூறி வந்தனர். ஆனால் இப்போது அவர்களும் மௌனிகளாகி விட்டனர். அவர்களுடைய உதடுகளில் முத்திரையிடப்பட்டுள்ளது போன்றாகிவிட்டது.

சில நிறுவனங்கள் தங்களுடைய கம்பெனி விளம்பரங்களுக்காக மில்லியன் கணக்கான டாலர்களைச் செலவழிப்பதன் காரணம் இப்போது தான் விளங்குகிறது. சில சமயங்களில் ஒரு விளம்பரத்தை உருவாக்குவதற்க்கான செலவு மில்லியன் கணக்கான டாலர்கள் இருக்கும். ஆனால் அந்த விளம்பரங்களை அந்தப் பணத்தில் பத்து சதவிகிதத்திலேயே உருவாக்க முடியும் என்றாலும். விளம்பரங்களில் தாங்கள் விரும்புகிற பின்னணிச் செய்தியை நிரப்புவதற்காகவே அவர்கள் உண்மையில் இவ்வளவு விலையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அதனால் வாடிக்கையாளர்கள் தங்களின் தயாரிப்புகளுக்கு அடிமையாகிவிடுகிறார்கள் என்ற விஷயமே இதன் மூலம் அவர்கள் பெறும் பலனாகும். ஒரு நிறுவனம், "எங்கள் ஆண்டு வருமானத்தில் 90 சதவிகிதத்தை விளம்பரத்திற்காகவே முதலீடு செய்கிறோம்". ஆனால் அதே சமயம், எங்கள் தயாரிப்புகளின் விற்பனை மிகவும் அதிகமாக இருப்பதால், மீதமுள்ள பத்து சதவிகிதப் பணமே எங்கள் நிறுவனத்தை நடத்துவதற்குப் போதுமானதாக இருக்கிறது என்று அறிவித்தது.

## பின்னணிச் செய்தி

எனக்கு நெருக்கமான மார்க்கப் பற்றுள்ள ஒரு நண்பர் இருந்தார். அவர் பல்கலைக்கழகத்தில் முனைவர்

பட்டப்படிப்பில் பயின்று கொண்டிருந்தார். அவருக்கு அவருடைய பேராசிரியர் மனிதன் சில தகவல்களை தெரிந்தே பெறுகிறான். இன்னும் சில தகவல்களை தனக்கே தெரியாமல் பெறுகிறான் என்று அவருக்கு வகுப்பில் கற்பித்தார்.

இது எப்படி சாத்தியம் என்று வகுப்பில் உள்ள மாணவர்கள் கேட்டனர். அவர், வகுப்பில் இருந்த முந்நூறு பங்கேற்பாளர்களுக்கு முன்னால் மடோனாவின் பிரபலமான பாடல் ஒன்றின் ஒலிநாடாவை ஒலிக்கச் செய்து, இந்தப் பாடலில் ஏதேனும் அசாதாரணமான செய்தி கிடைக்கிறதா என்று கேட்டார். அதை முந்நூறு மாணவர்களும் மறுத்துவிட்டனர்.

நீண்ட விவாதத்திற்குப் பிறகு, அவர் அந்த ஒலிநாடாவை குறைந்த அதிர்வெண்ணில், அதாவது மெதுவான வேகத்தில் ஒலிக்கச் செய்தார். அதில், “ஓ சைத்தானே, ஓ சைத்தானே” என்ற செய்தி இடைவெளி விட்டு விட்டு நிரப்பப்பட்டிருந்தது. அதைக் கேட்ட மாணவர்களின் கண்கள் ஆச்சரியத்தில் திகைத்தன.

மேலும் பல நாடுகளுடைய அரசாங்கங்கள் தங்களின் தீய நோக்கங்களுக்காக இந்த முறையைப் பயன்படுத்துகின்றன என்றும் அந்த பேராசிரியர் அவரிடம் கூறினார். உதாரணமாக, அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு பொது புத்தியை உருவாக்க விரும்பினால், பின்னணிச் செய்திகள் மூலம் மக்களின் மனதில் அவர்களுக்கு எதிரான வெறுப்பை நிரப்புகிறார்கள்.

உலகின் ஏதாவதொரு பகுதியில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மரணித்திருந்தால், அந்தச் செய்தியை

ஒளிபரப்புவதற்கு முன்பு, “இது நடக்கக்கூடிய ஒன்று தானே “இது சகஜமானது தானே “இதில் என்ன புதிது?” என்ற கருத்துக்கள் மறைக்கப்பட்ட செய்தி பிண்ணனி இசையில் ஒலிபரப்பப்படும்.

இவ்வாறு செய்தி ஒளிபரப்பப்படும்போது, உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் வாழக்கூடிய எந்தவொரு முஸ்லிமுக்கும் அதனால் கவலை ஏற்படாது. எதுவுமே நடக்காதது போல் அனைவரும் கடந்து செல்வார்கள். இதனாலேயே தற்சமயம் ஆதிக்க சக்திகள் மேலும் வல்லரசு நாடுகள் தாங்கள் விரும்பியதை தைரியமாகச் செய்கின்றன.

பெரும்பான்மையோனோரின் கருத்து இதில் உடன்படுகிறதா அல்லது இல்லையா என்பதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. உலகில் எத்தனை நபர்கள் நம்மைக் கெட்டவர்கள் என்று கூறினாலும் சரி பின்னர், பின்னணிச் செய்தியின் மூலம் நாம் மக்களின் கவனத்தை நம் பக்கம் திருப்பிக் கொள்ளலாம். அதனால் இன்று நம்மைச் சபிப்பவர்கள் நாளை நம்மை நிச்சயம் புகழ்வார்கள் என்ற எண்ணத்தில் உள்ளனர்.

இசையையும் பாடல்களையும் கேட்டுப் பழகிய ஒருவன், மார்க்கத்தை விட்டும் விரைவாக வெளியேறிவிடுவான் என்பதை இலகுவாக புரிந்து கொள்ளலாம். உண்மையில், அவன் உணர்வற்றவனாகி விடுகிறான். அவனுடைய குடும்பத்தினர் எவ்வளவு அறிவுரை கூறினாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை. அவன் பாவத்தைப் பாவமாகக் கருதாத அளவுக்கு முட்டாளாகி விடுகிறான்.

அவன் மார்க்கத்தை பின்பற்ற விரும்பினாலும், தன்னையே அறியாமல் மார்க்க விரோதத்தின் பாலே ஈர்க்கப்படுவான். இவையெல்லாம் பின்னணிச் செய்தியின்

இருண்ட பக்கங்களாகும். அவை இசை என்ற போர்வையில் நற்குணமுள்ள இளைஞர்களை தீயவர்களாக மாற்றி விடுகிறது.

## இசைத் துறை

இன்று இசை தனித் துறையாகவே உருவெடுத்துவிட்டது. ஆய்வகங்களில் இது குறித்து ஏராளமான ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்சமயம் பல்கலைக்கழகங்களில் உயிரியல் மருத்துவம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற பாடப்பிரிவுகளை விட, ஒலி செயலாக்கப் பாடப்பிரிவில் சேர்க்கை பெறுவது கடினமாகிவிட்டது. தொழில் நுட்பவியலாளர்கள் இப்போது கணினிகள் மூலம் ஒலியை பல மாதிரிகளாக மாற்றுகிறார்கள். ஆகையால், ஒரு செய்தியை ஏதாவதொரு நபரின் குரலில் தெரிவிப்பது ஒரு பொதுவான விஷயமாகிவிட்டது.

ஒரு ஆணின் குரலை பெண்ணின் குரல் போலவும், ஒரு பெண்ணின் குரலை ஆணின் குரல் போலவும் மாற்றுவது தற்காலத்தில் மிக இலகுவாகவிட்டது. ஒரு குழுவிலுள்ள பல நபர்களின் குரல்களுக்கு மத்தியில் ஒரு குறிப்பிட்ட நபரின் குரலை பிரித்தறிவதும் எளிதாகிவிட்டது. இதற்கு அலைகள் பகுப்பாய்வு என்று கூறப்படும். குரல்களை கண்டறியக்கூடிய கணினி நிரல்களின் மூலம் எந்தவொரு நபரின் குரலையும் இலகுவாக அறியவும், பதிவு செய்யவும் முடியும். இதனால் ஒரு பாடகரின் பாடலை, மீட்டொலி அமைப்பின் மூலம் அவருடைய சொந்தக் குரலை விட சிறந்த விதத்தில் மாற்ற முடியும்.

முற்காலத்தில், பாடல்களில் ராகமும், மெல்லிசையும் அடங்கியுள்ளன என்ற ஒரே காரணத்திற்காக இசை தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்று, அதில் தறிகெட்ட

தனமும், ஆபாசத்திற்கு வழிவகுக்கும் பின்னணிச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. ஆகையால், அது முன்பை விடப் பல மடங்கு அதிகமாகத் தடைசெய்யப்படத் தகுதியான மாறிவிட்டது. அக்காலத்தில் இசையில் லைப்பவருடைய அமல்கள் விடுபடும் அபாயம் இருந்தது. ஆனால் இக்காலத்தில், இசையைக் கேட்பவரின் ஈமானே பறிபோய் விடும் அபாயமுள்ளது.

அக்காலத்தில் இசை கேட்பவர்களை அது நற்காரியங்கள் செய்வதை வெறுக்கச் செய்தது. ஆனால் இக்காலத்தில் இசை கேட்பவர்களை அது இறைவனையே வெறுக்கச் செய்து விடுகிறது. ஆகையால், இசை கேட்பது என்பது தற்போது பன்மடங்கு தடுக்கப்பட்ட செயலாகும்.

## 9] ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மை.

இசையை நேசிக்கும் ஒருவர் நல்ல மனிதர்களுடன் பழகி எவ்வளவுதான் நல்லவராக ஆனாலும், அவர் மனதில் இசை மீது வெறுப்பு ஏற்படாது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். மாறாக, 20 ஆண்டுகள் நல்ல வாழ்க்கை வாழ்ந்தாலும், அவர் எப்போதாவது ஒரு சந்தை அல்லது கடைக்கு அருகில் செல்லும்போது ஒரு பழைய பாடலைக் கேட்டால், அவர் பரவசமடைகிறார். ஒரே நொடியில், 20 ஆண்டுகால கடின உழைப்பு வீணாகிறது. பழைய நினைவுகள் மீண்டும் புத்துயிர் பெற்றுவிடுகின்றன.

இதனால்தான் இசை மிகவும் ஆபத்தானதாகும். குழந்தைப் பருவத்தில் கேட்ட பாடல்கள் வயோதிகப் பருவத்தில் கூட மறப்பதில்லை. இசையின் எச்சங்கள் ஒருவரின் மனதில் இறக்கும் வரை நிலைத்திருக்கும். நல்ல மனிதர் என்பவர் இந்தத் தொல்லைக்கு அருகில் கூட

வராதவரே. மேலும் தன்னுடைய இதயத்தையும், மனதையும் இசையிலிருந்து தூய்மையாக வைத்திருப்பவரேயாவார்.

## 10] திரைப்படங்களும் நாடகங்களும்

மேடையிலும், திரையிலும் பொழுதுபோக்கு அம்சங்களைக் காணும் வரலாறு மிகவும் தொன்மையானது. ஆனால் தற்போதைய காலகட்டத்தில், கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ள ஹாலிவுட் இதில் முக்கிய மையமாக செயல்படுகிறது. மக்கள் அதை (sex capital of the world) உலகின் பாலியல் தலைநகரம் என்று அழைக்கிறார்கள். யூனிவர்சல், சோனி, கொலம்பியா, ஃபோகஸ் மற்றும் எம்ஜிஎம் போன்ற தயாரிப்பாளர்கள் திரைத்துறையில் ஆதிக்கம் செலுத்தினர்.

### நாடகம்

நாடகம் என்பது, அதைத் தயாரித்தவர் ஏதேனுமொரு பாடத்தைக் கற்றுக் கொடுக்க விரும்பும் ஒரு திரைப்படமாகும். திரைப்படங்கள் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சீரழிவதை மக்கள் கண்டுள்ளார்கள். அதைப் பார்த்து எவரும் முன்னேறியதாக வரலாறு இல்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும். இதன் மூலம் நாடகத்தின் தீய விளைவுகளை எளிதில் மதிப்பிடலாம்.

### திரில்லர் ஆக்ஷன்

திரில்லர் என்பது கொலை மற்றும் மனதைக் கல்லாக்கும் காட்சிகளைக் கொண்ட ஒரு திரைப்படமாகும். இதுபோன்ற படங்களைப் பார்க்கக்கூடிய குழந்தைகள் கொலை செய்யும் முறைகளைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் திருடவும், தாக்குதல் செய்யவும் கற்றுக்கொள்கிறார்கள்.

சில நேரங்களில், இதை உணராமல் தங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொள்கிறார்கள்.

## காமெடி

காமெடி என்பது கேலிக்கூத்துகள் மேலோங்கியிருக்கும் ஒரு திரைப்படமாகும். இதைக் காண்பவர்கள் தற்காலிகமாக மகிழ்ச்சியடைவது மட்டுமல்லாமல், தங்கள் முழு வாழ்க்கையையும் நகைச்சுவையாக மாற்றும் முயற்சியில் சிக்கி, அதையே தன்னுடைய அடையாளமாகவும் ஆக்கிக் கொள்வார்கள்.

## கார்ட்டூன்

குழந்தைகளை மகிழ்விப்பதற்காக வெவ்வேறு விலங்குகளின் தோற்றங்களை கதாபாத்திரங்களாக சித்தரித்து கார்ட்டூன் படங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் வழியாக குழந்தைகளிடமிருந்து சிறுவயதிலேயே வெட்கம் அகற்றப்படுகிறது. அத்துடன் பின்னணிக் காட்சியிலிருந்து உணரப்படும் செய்தியின் மூலம், குழந்தைக்கு கூடுதலாக பிடிவாதமும், அகங்காரம் கற்பிக்கப்படுகிறது.

ஒரு கட்டத்தில் கார்ட்டூன்களைப் பார்ப்பதில் முனைப்பு காட்டி தொழுகையைத் தவறவிட்டாலும் பரவாயில்லை அதைப் பார்ப்பதை விடக்கூடாது என்ற ஒருவித பைத்திய நிலை உருவாகி விடும்.

## அறிவியல் புனைக்கதைகள்

நவீன அறிவியலின் சிந்தனைக்குட்பட்டு வருங்கால மாற்றங்களை கற்பனை செய்து படங்களாக மாற்றுவதற்கு இவ்வாறு கூறப்படும்.

## காதல்

இந்தத் திரைப்படங்களில் காதல் கொள்ளுதல், மற்றும் அதை முறியாமல் எவ்வாறு பாதுகாத்தல், மேலும் காதலை அடுத்த கட்டத்திற்கு எப்படி கொண்டு செல்லுதல் போன்றவை கற்றுக் கொடுக்கப்படும். ஏனெனில் ஏற்கெனவே காதல் வயப்பட்ட வாலிப பிள்ளைகளுக்கு அதை முறியாமல் கவனித்துப் பேசும் கலை எளிதாக வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இத்திரைப்படங்களில் பல வகைகள் உள்ளன. அதற்கேற்ப அவற்றிற்க்குக் குறியீடுகள் உள்ளன.

- G– பொதுவான காதல் தொடர்பான திரைப்படங்கள்.
- PG– பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்கு அருகில் அமர்ந்து அவனுக்கு/அவளுக்குத் திரைப்படத்தைக் காட்டி விளக்கும் வகையில் உள்ள திரைப்படங்கள்.
- PG13 – 13வயது வரையிலான உங்கள் பிள்ளைகளுக்கு அருகில் அமர்ந்து பெற்றோர்கள் இத்திரைப்படத்தைக் காட்டலாம்.
- NC17–இந்தத் திரைப்படங்கள் ஆபாசத்தையும், நிர்வாணத்தையும் கற்பிப்பதற்காக உருவாக்கப்பட்டவை.
- R– இந்தத் திரைப்படத்தில் ஒழுக்கக்கேடுகள் நிறைந்திருக்கும் என்பதால், எல்லோராலும் இதைப் பார்க்க முடியாது.
- X– ஒருவரிடம் காமத்தைத் தூண்டும் திரைப்படங்கள்.
- N– இதில் இடம் பெறும் ஆண்களும் பெண்களும் தங்கள் உடலின் மறைக்கப்பட வேண்டிய உடல்

பாகங்களிலிருந்து ஆடைகளை அகற்றும் திரைப்படம்.

- S- இதில் இடம் பெறும் ஆண்களும் பெண்களும் விபச்சாரம் செய்வதாகக் காட்டப்படும் திரைப்படம்.

உங்களுடைய பிள்ளைகள் ஒரு வீடியோவை வாடகைக்கு எடுத்து வந்து பார்த்தால், அல்லது ஏதேனும் படம் ஒன்றைப் பார்த்தால் அதில் என்ன பார்க்கிறார்கள் என்பதை பெற்றோர்களுக்கு விளங்க வேண்டும் என்பதற்காகவே இது பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டன. பள்ளியில் படிக்கும் சிறுவர்கள், சாக்கு போக்குகளைக் கூறி சாமர்த்தியமாக சிறுமிகளுக்கு நிர்வாணக் காட்சிகளையும் ஆபாசப் படங்களையும் காட்டுவதாக நமது கவனத்திற்கு வந்தது.

அவர்கள் காட்டக்கூடிய திரைப்படத்தைப் பார்த்த பிறகு, அச்சிறுமி காமத்தால் தூண்டப்பட்டு, விபச்சாரம் செய்யத் தயாராகி விடுகிறாள். இன்னும் சில பெண்கள் தங்கள் பிள்ளைகளின் மூலம், வீட்டு ஆண்களுக்குத் தெரியாமல் வாடகைக்கு ரகசியமாக இது போன்ற வீடியோக்களை வாங்கி வரக் கூறுகிறார்கள்.

இது மிகவும் மோசமான ஒரு பழக்கமாகும். ஒரு முறை இதற்குப் பழகிவிட்டால், அவர்களால் இதை நிறுத்தவே முடியாது. இன்னும் சில ஆண்கள் தவறான ஆபாசக் காட்சிகளில் வருபவர்கள் தங்கள் காமத்தை அசிங்கமான வழிகளில் பூர்த்தி செய்வதைப் பார்த்து, அதே விஷயங்களை தங்கள் மனைவிகளிடமும் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இது கணவன்-மனைவிக்கு இடையே அன்பை அதிகரிப்பதற்குப் பதிலாக, இடைவெளியை அதிகரிக்கச்

செய்கிறது. மேலும் பெண்கள், திரைப்படங்களில் நடிக்கும் இளம் நடிகைகளின் ஆடை அலங்காரங்களைக் கண்டு, தாங்களும் அது போன்றே ஆடை அணியப் பிரியப்படுகிறார்கள். இது நாகரிக மோகத்தை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து திரைப்படங்களைப் பார்க்கிறார்கள். ஐந்து வயது சிறுவன் ஒருவன் கூறினான், “மாலை நேரங்களில், நான் என் பெற்றோருடன் அமர்ந்து நிறைய திரைப்படங்களைப் பார்ப்பேன். அதில் ஏதேனும் நிர்வாண ஆபாசக் காட்சி காட்டப்படும்போது, என் அம்மா என்னிடம் கண்களை மூடிக்கொள்ளச் சொல்வார். நான் கண்களை மூடிக்கொள்வேன். ஆனால் அம்மாவுக்குத் தெரியாமல் விரல்களின் குறுகிய இடைவெளி வழியாகப் பார்த்துக் கொண்டே இருப்பேன்.”

முன்பெல்லாம், மக்கள் திரைப்படங்களைப் பார்க்க திரையரங்குகளுக்குச் செல்வார்கள். எனவே யாரும் பார்த்துவிட்டால் அவமானமாகிவிடுமோ என்று பயப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இன்று, விசிஆர் கருவிகள் ஒவ்வொரு வீட்டையும் ஒரு திரையரங்கமாக மாற்றிவிட்டன. முன்பெல்லாம், ஒழுங்கக்கெட்ட வாலிபர்கள் ஏதாவதொரு பெண்ணிடம் ஆபாசமாக பேச விரும்பினால், அவளைச் சந்திக்க ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்க வேண்டியிருந்தது.

இன்று, அவன் விரும்பியதை எல்லாம் திரையின் வழியாக அந்தப் பெண்ணுக்குக் காட்டுகிறான். அது அப்பெண்ணின் பெற்றோர்களுக்குக் கூடத் தெரிவதில்லை. முன்பெல்லாம், ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் கள்ள

உறவு கொள்ள விரும்பினால், அவளிடம் அதற்குச் சம்மதம் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. இன்று, திரைப்படங்களில் வரும் பாலியல் காட்சிகளைப் பார்த்த பிறகு, ஏதாவதொரு ஆண் தன்னிடம் வர வேண்டுமே என்று ஏங்கியபடி, அவள் ஏற்கெனவே தயாராக இருக்கிறாள்.

பிரெஞ்சு தொலைக்காட்சி நிலையங்களில், நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 2 மணி வரை, நிர்வாணக் கிளப்களின் காட்சிகள் காட்டப்படுகின்றன. அவற்றில் ஆண்களும் பெண்களும் ஆடையின்றி, பல்வேறு விதங்களில் பாலியல் செயல்களில் ஈடுபடுவார்கள்.

இஸ்லாமிய நாடுகளில் வாழும் இளைஞர்கள் காலை விடியும் வரை மூடிய அறைகளில் இந்த சகிக்க முடியாத காட்சிகள் அனைத்தையும் பார்க்கிறார்கள். ஆதலால், அவர்களுக்கு இஸ்லாம் கூறும் சட்டங்கள் அனைத்தும் அடிமைப்படுத்துவதாகவும், கசப்பானதாகவும் தெரிய ஆரம்பிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில், தொலைக்காட்சி பார்ப்பது பல மடங்கு தீங்கு விளைவிப்பதாகவும், ஹராமானதாகவும் மாறிவிட்டது என்று கூறலாம். எந்த வீட்டில் தொலைக்காட்சி உள்ளதோ அங்கு சைத்தானுடைய ஒரு இராணுவம் ஆயத்தமாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சிலர், எங்களுடைய குழந்தைகள் பக்கத்து வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சி பார்க்கிறார்கள்.

எனவே அதைத் தடுக்க நாங்களே வீடுகளில் அதை வைத்திருந்தால் அவர்கள் எங்கும் செல்லமாட்டார்களே என்ற ஒரு சாக்கைச் சொல்கிறார்கள். ஆக இந்த ஒரு நிர்ப்பந்திற்காக மட்டுமே நாங்கள் தொலைக்காட்சி வைத்துள்ளோம் என்று கூறுகின்றனர்.

இது எப்படி இருக்கின்றதென்றால் நம் குழந்தைகள் வெளியே சென்றால் விஷம் சாப்பிட்டுவார்கள் என்பதால் வீட்டிலேயே நம் கைகளால் அவர்களுக்கு விஷம் கொடுக்க ஆரம்பித்துவிடுவதைப் போன்றாகும். இதனால் வீட்டில் இருக்கின்ற நபர்களிலேயே தொலைக்காட்சியின் தீய விளைவுகள் மனைவியின் மீதுதான் அதிகமாக ஏற்படுகின்றன.

இதனால் ஆண்கள் தினமும் திரையில் அழகான பெண்களைப் பார்க்கிறார்கள். எனவே அவர்களுக்கு தங்கள் மனைவிகளிடம் இருக்கும் ஈர்ப்பும் மெல்ல மெல்ல குறைய ஆரம்பிக்கிறது. திரையில் காணக்கூடிய பெண்கள் மீது ஆசை கூடிக் கொண்டே செல்லும். நமது வீடுகளில் கணவன் மனைவிக்கு இடையே சண்டைகள் மற்றும் விவாகரத்துகள் அதிகரிப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். எப்படியிருந்தாலும், டிவியும் மனைவியும் (பீவீ) உர்தூவில் ஒத்த உச்சரிப்புடைய வார்த்தைகளாகும். இதன் மூலம் இரண்டிற்கும் மத்தியில் நெருக்கமான தொடர்பு இருப்பது போல் தெரிகிறது.

## இணையத்திற்குள்ளா? அல்லது இரும்பு வளையத்திற்குள்ளா?

இணையம் மேலும், இன்டர்நெட் என்பது ஒரு கணினி இணைப்பாகும். அதேசமயம் என்டர்நெட் என்பது வலைக்குள் சிக்கிக் கொள்வதாகும். நவீன காலத்தின் கல்வி வசதிகளைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள் எளிதாக கல்விசார்ந்த தகவல்களைப் பெற வேண்டும் என்பதற்காக மேற்கத்திய நாடுகள் இணையத்தைத் தொடங்கின. உண்மையில் தகவல்களைப் பெறுவதற்கு இது சிறந்த வழி என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆனால் பிரச்சனை என்னவென்றால், இதை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருந்தாலும், தீய பயன்பாட்டிற்கே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. சைத்தானும், அவனுடைய முகவர்களும் இந்த இணையத்தை தவறாக பயன்படுத்த வழிகாட்டுகின்றனர். பெரும்பாலான ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் நட்பு கொள்வதற்காக இணையத்தில் சேட்டிங் செய்கின்றனர். இறுதியில் இருவரும் ஒருவருக்கொருவர் நிர்வாணப் படங்களைக்கூட அனுப்பிக் கொள்கின்றனர்.

முஸ்லிமான பெண்கள் இணையத்தின் மூலமாக காஃபிரான ஆண்களுடன் காதல் கொண்ட எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. சில இடங்களில், இணைய நட்பின் காரணமாக ஒரு பெண் தன் வீட்டை விட்டே வெளியேறி, தன் காதலனின் வீட்டிற்குச் சென்றதாகவும் கேள்விப்படுகிறோம். இதனால் அவளுடைய குடும்பத்தின் கௌரவம் பாழாகிவிட்டது.

பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் எப்போதும் படிப்பதில் மும்முரமாக இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்கள்.ஆனால் அவர்கள் கணினித் திரையின் முன் அமர்ந்து மணிக்கணக்கில் தங்கள் நண்பர்களுடன் காதல் மற்றும் நேசத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்குகிறார்கள் என்பது அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது.

இந்த நோய்க்கு இளைஞர்கள் மட்டுமல்ல, சில வயதானவர்களும் சமமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு இளைஞன் செய்வது போல அவர்களும் இளம் பெண்களுடன் அரட்டை அடிக்கிறார்கள்.

நிர்வாணம் மற்றும் ஆபாசங்களைப் பரப்பும் தொழில்முறை நபர்கள், தங்கள் தீய நோக்கங்களுக்காக இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். கிரிடிட் மூலம் அவர்களுக்குப் பணம் அனுப்பப்பட்டால், அவர்கள் ஒரு இளம் பெண்ணின் நிர்வாணப்படத்தைக் காண்பித்து, பின்னர் நிர்ணயிக்கப்பட்ட 20 நிமிடங்கள் அல்லது அரை மணி நேரத்திற்கு, அவளுடைய காமமூட்டும் அசைவுகளைக் கண்டும், அவளுடைய ஆபாசப் பேச்சைக் கேட்டும் இன்பம் பெற வாய்ப்பளிப்பார்கள்.

அவர்கள் அவளுடைய இந்தப் படத்தைப் பார்த்தும், அவளுடைய உரையாடலைக் கேட்டும் காமத்தால் மதிமயங்கி, பின்னர் சட்டப்பூர்வமான மற்றும் சட்டவிரோதமான வழிகளில் தங்கள் காமத்தைத் தீர்த்துக் கொள்வார்கள்.

ஒரு மாணவன் இணையத்தில் அமர்ந்து தனது வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று திரையில் நிர்வாணப் பெண்களின் படங்கள் தோன்றுகின்றன. எங்களைத் தொடர்புகொள்ள விரும்பினால், இந்த எண்ணைத் தொடர்பு கொள்ளவும் என்று கீழே எழுதப்பட்டிருக்கும். இவ்வாறு சில வினாடிகள் வந்து சென்ற விளம்பரங்கள் நல்ல இளைஞர்களின் முழு வாழ்க்கையையும் சீரழிக்கும் ஒரு வழியாக மாறிவிடுகின்றன.

சில நேரங்களில், மின்னஞ்சல்களில் இதுபோன்ற மோசமான கட்டுரைகள் வருகின்றன, அவற்றைப் படிப்பவருக்கு ஆன்மீக மரணம் உறுதியாகிவிடும். இணையத்தில் “இஸ்லாமியப் பெயரில் ஒரு இணையதளம் உள்ளது. ஆனால் அதில் இஸ்லாத்திற்கு எதிரான வேலை செய்யப்படுகிறது.

ஒரு முறை ஆய்வு செய்தபோது, அது இஸ்லாத்தின் பெயரால் இஸ்லாத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வரும் ஒரு இந்து நபரின் இணையதளம் என்பது தெரியவந்தது. இளைஞர்கள் இணையத்தின் வழியாக பல்வேறு கட்டுரைகளைப் படித்து விட்டு அதுவே இஸ்லாம் என்று புரிந்துகொள்கின்றனர்.ஆனால் அதற்கும் இஸ்லாத்திற்கும் சிறிதளவும் தொடர்பு இல்லை என்பதே உண்மை.

இது போன்ற பல நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு உற்று நோக்கினால், இந்த இணையதளம் உண்மையில் இணைய வலைக்குள் வசமாக சிக்கிக் கொள்வதைப் போன்றாகும்.ஆகவே இளைஞர்கள் இதிலிருந்து விலகி இருப்பதே நல்லது.

## வீடியோ கேம்கள்

குழந்தைகள் விளையாடி சலிப்படையாத வகையில், அவர்களை மகிழ்விப்பதற்காகவே வெளிநாட்டு நிறுவனங்கள் கணினிகளில் இதுபோன்ற விளையாட்டுகளை உருவாக்கியுள்ளன. இது போன்ற ஒரு விளையாட்டை உருவாக்க பல குழுக்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

உதாரணமாக,

1) graphic designer (வரைகலை வடிவமைப்பாளர்கள்)

2) game designer (விளையாட்டு வடிவமைப்பாளர்கள்) ,

3) programmer (கணினி நிரலாளர்கள்,)

4) music designer (இசை வடிவமைப்பாளர்கள்,)

5)colour designer (வண்ண அல்லது சாயல் வடிவமைப்பாளர்கள்) ,

6) psychologist (உளவியலாளர்கள்.)

விளையாட்டுகளை வடிவமைக்க சுமார் 200 கலை வல்லுநர்கள் இணைந்து பணியாற்றுகிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் சிறுவர்கள் இவ்விளையாட்டை விட்டு விலகக்கூடாது என்ற நோக்கில் அவர்களின் மனதைக் கவரும் வகையில், உளவியலாளர்கள் அவர்களின் உளவியலைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற விளையாட்டுகளை உருவாக்குகிறார்கள்.

அதனால்தான், குழந்தைகள் இவ்விளையாட்டுகளை விளையாட அமரும்போது, அவர்கள் பள்ளிப் பாடத்தை நினைவில் கொள்வதில்லை. குர்ஆன் ஓதுவதிலும் கவனம் செலுத்துவதில்லை. இஷா தொழுகைக்குப் பிறகு விளையாட அமர்ந்து, காலை விடியும் வரை அதிலேயே இரவைக் கழித்த ஒரு குழந்தையின் சம்பவத்தை அதனுடைய நெருங்கிய உறவினர் மிகுந்த ஆட்சரியத்தோடு கூறினார்.

ஏனெனில் இவ்விளையாட்டில் கண்களும், சிந்தனையும், இரு கைகளும் ஈடுபட்டே ஆக வேண்டும். அத்துடன் பல மணிநேரங்கள் திரைக்கு முன்னால் அமர்வதும் வியப்பான விஷயமாகும்.

மேலோட்டமாகப் பார்த்தால், விளையாட்டின் மூலம் குழந்தைகள் தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் அதனுடன் அவர்கள் முக்கியமான ஃபர்ளு தொழுகைகளை விட்டுவிடுகிறார்கள். இன்னும் அவ்விளையாட்டில் வருகிற இசையின் பின்னணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள செய்திகள் பெரும்பாலான பொதுமக்களுக்குத் தெரிவதில்லை. இந்த விளையாட்டுகள் விஷம் நிறைந்தவையாக இருப்பதால், குழந்தைகள் விரைவாக மார்க்கத்திலிருந்தே வெளியேறி விடுகின்றனர்.

இன்னும் வாலிபத்தை நெருங்கியவர்ளுக்காக உருவாக்கப்பட்ட விளையாட்டுகளில், சிறுமிகளின் நிர்வாணப் படங்கள் இடம் பெற்றிருக்கும். நெருப்புப் பொறி போன்று இத்தாக்குதல் நடைபெறும்போது காமத் தீ பற்றிக்கொள்வது இயல்பானதே. பிறகு அதன் விளைவு விபச்சாரமாக இருக்கும் என்பதும் தெளிவானதாகும்.

## 8] நாவல்களும் கதைகளும்

இப்போதெல்லாம், காதல் பற்றிய தலைப்பில் புதிய புதிய கற்பனைக் கதைகளுடன் கூடிய நாவல்கள் எழுதப்படுகின்றன. செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் கூட இதுபோன்ற கதைகளால் நிரம்பி வழிகின்றன. “மூன்று பெண்களும், மூன்று கதைகளும்” என்ற தலைப்பில் இளம் ஆண், பெண் பிள்ளைகள் ஆர்வத்துடன் படிக்கும் விதத்தில் சுவாரஸ்யமான காதல் சம்பவங்கள் எழுதப்பட்டுள்ளன. சில சமயங்களில் அவர்களே அதையே செய்யவும் தொடங்கி விடுகிறார்கள்.

யாருடனும் காதல் வயப்படாத இளைஞர்கள், தனிமையில் இக்கதைகளை மனதில் எண்ணி சிந்தனை ரீதியான பாவங்களில் சிக்கிக் கொள்கின்றனர். இதனால் அவர்களுடைய எண்ணங்கள் அசுத்தமாகிவிடுகின்றன. அவர்கள் வெளிப்படையாகத் தொழுவார்கள், நோன்பு வைப்பார்கள். ஆனால் ஒரு கற்பனைக் காதலியின் பிம்பத்துடன் சுற்றித் திரிவார்கள்.

தொழும்போது கூட, அவளுடைய நினைவால் அவர்கள் ஆட்கொள்ளப்பட்டிருப்பார்கள். ஒரு கற்பனைச் சிலையை வணங்குவது போல் சதா காலமும் அவளுடைய சிந்தனை குடிகொண்டிருக்கும். வெளிநாடுகளில்,

ஃபோனோகிராஃபி என்ற பெயரில் முழு நிர்வாணப் படங்கள் அச்சிடப்படுகின்றன.

வயது வந்தவர்களைக் கவர்வதற்காக, பெண்களின் உடலின் அந்தரங்க பாகங்கள் மிக நெருக்கமாக எடுக்கப்பட்ட படங்களை அச்சிடுவார்கள். இந்தப் படங்களைப் பார்த்தால் ஒரு வயதான கழுதை கூட காம எழுச்சியால் இளமையாக மாறிவிடும்.

ஒரு வெளிநாட்டில், பாலியல் சாம்பியன் என்று அழைக்கப்பட்ட ஒரு நடத்தை கெட்ட பெண்ணின் படம் காட்டப்பட்டது.அவள் ஏறத்தாழ 300 ஆண்களுடன் அடுத்தடுத்து விபச்சாரம் செய்து உலக சாதனை படைத்ததாக அறிவிக்கப்பட்டது. இறைமறுப்பாளர்கள் உடலுறவைக்கூட கால்பந்து விளையாட்டாகக் கருதத் தொடங்கி விட்டனர் என்பதை அறிய முடிகிறது. அதில் நீங்கள் விரும்பும் அளவுக்கு கோல்களை அடித்துக் கொள்ளுங்கள், ஆடுகளம் திறந்தே இருக்கிறது என்று சொல்லாமல் சொல்கிறார்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக!

## 9] குடும்பக் கட்டுப்பாடு

இன்று, குடும்பக் கட்டுப்பாடு குறித்த அரசாங்கத்தின் பிரச்சாரமும் விபச்சாரம் மற்றும் ஒழுக்கக்கேட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு பெரும் வழியாக அமைந்துள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் என்ற பெயரில், இது நம் மீது திணிக்கப்பட்ட ஒரு காலனித்துவ சதியாகும்.

அதன் முடிவுகளையும், பின்விளைவுகளையும் பற்றிக் கவலைப்படாமல், ஊடகங்கள் மூலம் இது மக்களின் மனதில் பதியவைக்கப்படுகிறது. நாம் இதை கவனமாக ஆராய்ந்தால், இந்தப் பிரச்சாரத்தால் ஏற்படும் சமய,

சமூக, மற்றும் பொருளாதார ரீதியிலான இழப்புகள் மிக அதிகம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, விளம்பர உத்திகள் மூலம் அவை நன்மைகளாகக் காட்டப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் அனுபவிக்கும் சில தீய விளைவுகள் இங்கே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

## ஷரியத் சட்டங்களுக்கு எதிரான விரோதப் போக்கு.

1) மனித இனம் பெருக வேண்டும் என்பதற்காக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே பாலியல் ஈர்ப்பையும், இன்பத்தையும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான்.

ஆனால் குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிப்பவர்கள், மனித இனத்தின் பெருக்கத்தை விரும்பாமல், இன்பமும் காமமும் மட்டுமே நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது படைப்பாளனின் விருப்பத்திற்கு முற்றிலும் எதிரானதாகும்.

2) நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

تَزَوَّجُوْا الْوُلُوْدَ الْوَدُوْدَ فَاِنِّيْ مُكَاثِرُ بِكُمُ الْاُمَمَ يَوْمَ الْقِيَامَةِ

**அதிகம் அன்பு செலுத்தக்கூடிய, பல பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். மறுமை நாளில் மற்ற சமூகங்களை விட நீங்கள் மிகுதியாக இருப்பது குறித்து நான் பெருமைப்படுவேன்.**

ஆகவே, இந்தத் திட்டமிடுபவர்கள் நபி ﷺ அவர்களின் பெருமையை தகர்க்க விரும்புகிறார்கள் என்று அர்த்தமாகும்.

3) மனித இனம் நிலைத்திருப்பதற்காக, மனிதர்களின் எண்ணிக்கையில் அல்லாஹ் ஒரு சமநிலையை

ஏற்படுத்தியுள்ளான். அதில் அவன் மட்டுமே அறியக்கூடிய எண்ணிலடங்கா நுட்பங்கள் உள்ளன. அவன் இவ்வுலகில் பிறக்கக்கூடிய ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அதனுடைய வாழ்வாதாரத்தையும் சேர்த்தே அனுப்பியுள்ளான்.

இத்தனை குழந்தைகள் இருக்க வேண்டும், இவ்வளவு இருக்கக்கூடாது என்று ஒருவர் தன் அறிவை செலுத்தி மக்கள் தொகையைக் குறைக்கத் திட்டமிட்டுவாரானால் அவர் அல்லாஹ்வின் தெய்வீகத்தன்மையில் தலையிடுபவராவார். இது வெறும் முட்டாள்தனமும், ஈமானின் பலவீனத்திற்கான தெளிவான சான்றுமாகும்.

கருத்தடை விஷயத்தில், சில சமயங்களில் சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்யப்படுகிறது. இது ஒரு ஆன்மாவைக் கொல்வதாகும். இதுவும் மறுமை நாளில் கேள்விக்குட்படுத்தப்படும்.

தாயின் உடல்நலத்திற்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு, அவரது உயிரைக் காப்பாற்ற வேறு வழியே இல்லாத பட்சத்தில் மட்டுமே, சட்டப்பூர்வமான எந்தவொரு கருத்தடை முறையையும் பின்பற்றுவது அனுமதிக்கப்படுகிறது. கருத்தடையைப் பயன்படுத்துவது சரியானதுதான், ஆனால் அதன் நோக்கம் ஒரு உயிரைக் காப்பாற்றுவதே தவிர, மக்கள்தொகையைக் குறைப்பதல்ல.

## கலாச்சார விளைவுகள்

இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தில், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் பிற ஊடகங்கள் மூலம் கருத்தடை ஊக்குவிக்கப்படுகிறது. இதன் விளைவாக, நமது சமூகத்தில் முன்பு வெளிப்படையாகப் பேசுவதற்கு வெட்கக்கேடானதாகக் கருதப்பட்ட

கணவன்-மனைவியின் பாலியல் உறவுகள் பற்றிய விஷயங்கள், இப்போது அவ்வளவு வெட்கக்கேடானதாகக் கருதப்படுவதில்லை.

மாறாக, அது இன்னும் நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறி வருகிறது. பொதுவாகக் கடைகள், சந்தைகள் மற்றும் பிற பொது இடங்களில், கருத்தடை மருந்துகளும், சாதனங்களும் மிகவும் வெளிப்படையாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றை முதியவர்களும் சிறு குழந்தைகளும் பார்க்கின்றனர்.

மேலும், இயல்பான ஆர்வத்தின் காரணமாக, அவற்றின் நோக்கம் என்ன, அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர்கள் விரைவில் அறிந்துகொள்கிறார்கள். சமூகத்திலிருந்து வெட்கம் மற்றும் நாணத்தின் வேர்களைப் பிடுங்கி எறிவதில், இந்தக் கும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் மிகவும் திறம்படப் பங்காற்றுவது போல் தெரிகிறது.

## விபச்சாரத்தை ஊக்குவித்தல்

இந்தத் திட்டத்தின் விளைவாக கருத்தடை சாதனங்களும், மருந்துகளும் எளிதில் கிடைப்பதால், முறையற்ற பாலியல் உறவுகள் பெருகுகின்றன. ஏனென்றால், இந்த விஷயங்களைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாத காலத்தில், பெண்கள் அவமானத்திற்கு அஞ்சினர். அதன் காரணமாக, அவர்களால் எந்தவொரு தவறான செயலையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆனால் இப்போது, திட்டமிடல் குறித்த வழிகாட்டல்களும், மருந்துகளும் கிடைப்பதால், முறையற்ற உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதைத் தடுத்த அந்தப் பயம் மறைந்துவிட்டது. இவ்வாறு, இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத்

திட்டம் கள்ள உறவை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கியக் கருவியாக மாறியுள்ளது.

## பொருளாதாரத் தாக்கம்

குடும்பக் கட்டுப்பாட்டு ஆதரவாளர்கள், குழந்தைகள் அதிகமாக இருந்தால் வளங்கள் குறைந்துவிடும் என்பதை மிகவும் தீவிரமாக எடுத்துரைக்கிறார்கள். இப்படிச் சொல்பவர்கள், புதிதாக வரும் ஒவ்வொரு வளமும் யாரோ ஒருவரால் பயன்படுத்தப்படும், இது வளங்கள் குறைவதற்கு வழிவகுக்கும் என்று மட்டுமே நினைக்கிறார்கள்.

வளங்களை உருவாக்கும் திறனையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. உண்பதற்கு ஒரே ஒரு வாயை மட்டுமே அவன் கொடுத்துள்ளான், ஆனால் உழைப்பதற்க்கு இரு கரங்களை கொடுத்துள்ளான். உண்மை என்னவென்றால், உழைக்கும் வர்க்கம் அதிகரிக்க அதிகரிக்க, வளங்களை உருவாக்கும் சக்தியும் அதிகரிக்கிறது.

“இரண்டு குழந்தைகள் நல்லது” என்ற திட்டமிடுபவர்களின் முழக்கத்தை நியாயமாக ஆராய்ந்தால், அனைவரும் அதைப் பின்பற்றினால், ஒரு தலைமுறைக்குப் பிறகு சமூகத்தில் இளைஞர்களுக்குப் பதிலாக முதியவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடும்.

இப்போது வளங்களைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சனை அல்ல, வளங்களை உருவாக்கும் கைகள் பற்றிய பிரச்சனைகளே முதன்மை பெறும். கருத்தடை சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ள நாடுகளில், அதே உழைக்கும் வர்க்கத்திற்காக அவர்கள் மற்ற நாடுகளை நாட வேண்டியுள்ளது என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

## மனித ஆரோக்கியத்தில் ஏற்படும் தாக்கம்

இத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படும் அனைத்து கருத்தடை மருந்துகளும் அல்லது கருத்தடை அறுவை சிகிச்சைகளும் மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் தீங்கு விளைவிப்பவை. மேற்கூறிய முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், உடலில் நச்சுப் பொருட்கள் உருவாகி, அவை மிகுந்த வலியை ஏற்படுத்துவது பலமுறை காணப்படுகிறது.

மேலும் சில சமயங்களில், மரணத்தை விளைவிக்கும் அளவிற்கு ஆபத்தான ஒரு சூழல் உருவாகிவிடுகிறது. ஆம், இது ஒரு தீங்கு விளைவிக்கும் பழக்கமாகும். மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துக் கருத்துக்களின் சாராம்சம் என்னவென்றால், குடும்பக் கட்டுப்பாடு என்பது இயற்பியல் விதிகளுக்கு முற்றிலும் எதிரானது. அவர்கள் கூறும் நன்மைகளை உருவாக்குவதற்குப் பதிலாக, அது ஒழுக்கக்கேட்டையும் விபச்சாரத்தையும் தான் ஊக்குவிக்கிறது. எனவே, இது சரிசெய்யப்பட வேண்டும்.

## பாவத்தின் பாதைகளை அடைத்த பாச நபியின் ஷரீஅத்

இறுதித் தூதருடைய ஷரீயத்தின் அழகு மற்றும் நேர்த்தியை கவனியுங்கள்! சமூகத்திலிருந்து நிர்வாணம், ஆபாசத்தை அகற்றுவதற்காக விபச்சாரத்தை விட்டு விலகி இருக்க கட்டளையிட்டது மட்டுமல்லாமல், அதன் வழிகளையும் சேர்த்தே அடைத்துவிட்டது.

“மூங்கில் இல்லையெனில், புல்லாங்குழல் இசைக்க முடியாது” என்ற பழமொழி பிரசித்தி பெற்றது. செல்லாத ஊருக்கு வழி கேட்டு என்ன பயன்? என்ற முதுமொழியும் எல்லோரும் அறிந்ததே. எனவே, விபச்சாரத்தில்

ஈடுபடுவதற்கு வழியாக மாறக்கூடிய ஒவ்வொரு செயலையும் ஷரீயத் தடை செய்துள்ளது.

சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1] பெண்ணின் பெயர்

ஒரு பெண்ணின் பெயரை மஹ்ரமல்லாதவர்களுக்கு முன் வெளிப்படுத்தக் கூடாது என்று சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். எங்காவது பெயரைக் கூற வேண்டியிருந்தால், ஹபீபுடைய தாய், ஜைதின் சகோதரி, அடியேனின் மனைவி, அஹ்மதின் மகள் போன்ற மஹ்ரமான ஆண்களுடன் அடையாளப் படுத்தி கூற வேண்டும்.

இருப்பினும், அடையாள அட்டை அல்லது பாஸ்போர்ட் போன்ற நிர்பந்தத் தேவையாக இருந்தால் அப்போது தனிப்பட்ட பெயரைக் குறிப்பிடலாம். பொதுவாக தனிப்பட்ட பெயர்களுக்கும் ஒரு விதமான ஈர்ப்பு உண்டு. ஆமிர் என்ற இளைஞனுக்கு ஆமிரா என்ற பெண்ணோடு அறிமுகம் ஏற்படுமானால், அவர்களுடைய பெயர்களின் பொருத்தத்தின் காரணமாக இருவரும் நெருக்கமாகப் பழகக்கூடும்.

## 2] பெண்களின் குரல்

பெண்கள் தங்கள் வீடுகளில் சப்தம் குறைவாகப் பேசுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் குரல், எந்த நோக்கமுமின்றி மஹ்ரமல்லாத ஒருவரைச் சென்றடையும் அளவுக்கு உயர்திருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதனால்தான், ஒரு பெண் ஜமாஅத்துடன் தொழும்போது, இமாம் தொழுகையில் ஏதாவதொன்றை மறந்து விட்டால்

“சுப்ஹானல்லாஹ்” என்ற தஸ்பீஹைக் கூட உரக்கக் கூறக்கூடாது. மாறாக, ஒரு கையின் பின்புறத்தால் மற்றொரு கையின் உள்ளங்கையில் தட்டி ஒலி எழுப்ப வேண்டும்.

சில சட்ட வல்லுநர்கள் பெண்களின் குரலை மறைக்கப்பட வேண்டியவற்றில் சேர்த்துள்ளனர். ஆனால் பெரும்பாலான அறிஞர்கள் அதை மறைக்கப்பட வேண்டியவற்றில் சேராது என்ற கருத்தையே கொண்டுள்ளனர்.

## 3] பெண்ணின் குரலில் கொஞ்சிக் குலாவும் தோரணை இருக்கக்கூடாது.

ஒரு பெண் அந்நிய ஆணுடன் பர்தா அணிந்த நிலையில் பேச நேர்ந்தாலும், அவளுடைய குரல் மென்மையாகவும், கொஞ்சிக் குலாவும் விதத்திலும் இருக்கக்கூடாது. அதனால் உள்ளத்தில் கயமைத்தனம் கொண்டவருக்கு தப்பான ஆசைகள் உண்டாகக்கூடும்.

அல்லாஹ் கூறுகிறான்:

فَلَا تَخْضَعْنَ بِالْقَوْلِ فَيَطْمَعُ الَّذِيْ فِي قَلْبِهِ مَرَضٌ وَ قُلْنَ قَوْلًا مَعْرُوْفًا

**கொஞ்சிக் குலாவிப் பேசாதீர்கள்; எவருடைய உள்ளங்களில் நோய் உள்ளதோ அவர்கள் பேராசைப்படக்கூடும். நீங்கள் நியாயமான விதத்தில் தான் பேச வேண்டும்.**

ஒரு பெண் தன் கணவனிடம் பேசும் மென்மை, கொஞ்சிக் குலாவுதல் போன்றவை கணவனுக்கு மட்டுமே பொருத்தமானவையாகும். அதே முறையில் அவள் வேறு ஆணிடம் பேசுவது கூடாது. அந்நிய ஆண்களிடம் பேசும்போது,அவள் தன்னுடைய குரலையும், சப்தத்தையும்

சற்று கடினமானதாக, வறண்டதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் எப்போதும் ஆணுடைய மனதில் சிற்றின்ப ஆசைகள் எழும் விதத்தில் பேசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். "பெண்களின் குரலும் மறைக்கப்பட வேண்டும்" என்ற கருத்தை முன்வைத்து பெண்களை நிர்பந்தமாகக் கூட யாருடன் பேசக் கூடாது என்று நாம் தடைசெய்கிறோம் என்று புரிந்துகொள்ளக்கூடாது என அல்லாமா ஷாமி ﵀ எழுதியுள்ளார்கள்.

ஒரு பெண் தேவைப்படும்போது மஹ்ரமல்லாத ஒருவரிடம் பேசுவதை நாம் அனுமதிக்கிறோம். ஆனால் ஆண்களின் உள்ளங்கள் அவள் பக்கம் சாய வேண்டும் என்பதற்காக, ஒரு பெண் தன் குரலில் இனிமையையும், கவர்ச்சியையும் உருவாக்குவதைத் தான் நாம் தடுக்கப்பட்டதாகக் கருதுகிறோம்.

அதனால்தான் பெண்களுக்கு பாங்கு சொல்வதற்கும் கூட அனுமதி வழங்கப்படவில்லை. ஏனெனில் பொதுவாக அதில் அழகிய குரலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

### 4] பெண்ணுக்கு ஸலாம் கூறுதல்

சாலையில் நடந்து செல்லும் போது, தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என அனைத்து ஆண்களுக்கும் ஆண்கள் ஸலாம் கூற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது போல் ஒரு பெண் சாலையில் நடந்து செல்லும் போது மஹ்ரமல்லாத ஆண்களுக்கு ஸலாம் சொல்ல வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை.

எனவே வழியில் கடந்து செல்லும் மஹ்ரமல்லாத ஆண்களுக்கு ஒரு பெண் ஸலாம் சொல்லக் கூடாது.

ஆனால் அறிமுகம் அல்லது உறவினர்களிலுள்ள ஆண்கள் யாராவது சென்றால்,பர்தாவில் இருந்தபடியே அவர்களுக்கு ஸலாம் கூறுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. அப்போதும் மஹ்ரமான ஆண்கள் மூலமாக ஸலாமினை எத்தி வைப்பதே மேலானது.

## 5] பெண் பயன்படுத்திய மீதத் தண்ணீர்

ஒரு பெண் தான் குடித்த மீதத் தண்ணீரை அல்லது தான் சாப்பிட்ட மீத உணவை மஹ்ரமல்லாத ஆணுக்கு அனுப்புவது அனுமதிக்கப்பட்டதல்ல. இது இரகசியமாக செய்தி அனுப்புவதைப் போன்றாகும்.

ஆனால் விருந்தினரான ஒரு ஆண் மீதம் வைத்த உணவை ஒரு பெண் பரக்கத் பெற நாடியோ அல்லது தேவைக்காகவோ உண்ணலாம். ஆனால் இச்செயல் எண்ணத்தைப் பொறுத்ததாகும். எண்ணம் நல்லதாக இருந்தால், அனுமதிக்கப்படும். ஒரு வேளை எண்ணம் கெட்டதாக இருந்தால் இதுவும் அனுமதிக்கப்படாது.

## 6] பெண்ணின் உடைகள்

ஒரு பெண் தன்னுடைய ஆடைகளை மஹ்ரமல்லாத ஆண்களின் பார்வை படக்கூடிய அல்லது தொட ஏதுவான இடத்தில் வைக்கவோ அல்லது தொங்க விடவோ கூடாது.

## 7] பெண்ணின் கூந்தல்

ஒரு பெண் தலை சீவும் போது விழக்கூடிய கூந்தலைக் கூட மறைவான இடத்தில் புதைக்க வேண்டும். அவற்றை அந்நிய ஆண்கள் பார்வை படும் இடத்தில் வைக்கக்கூடாது.

## 8] பெண்கள் மறைவான ஆபரணங்களைக் காட்டக்கூடாது.

பெண்கள் தங்கள் கைகளிலும் கால்களிலும் பல்வேறு

ஆபரணங்களை அணிகிறார்கள். அவற்றிலிருந்து மணியோசை போன்ற ஓசை வருமானால், அது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஏனெனில் பல சமயங்களில் ஆபரணங்களிலிருந்து வெளிப்படும் ஒலியும், அதனுடைய மினுமினுப்பும் பெரும்பாலும் குழப்பத்திற்கும், ஆபத்திற்கும் காரணமாகிவிடுகிறது.

தஃப்ஸீர் கபீரில், ஒரு ஆண் ஏதேனுமொரு பெண்ணுடைய கொலுசின் ஓசையைக் கேட்பானேயானால் அவனுக்குள் பாலியல் ஆசை தூண்டப்பட வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

மிஷ்காத் ஷரீஃபில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு அறிவிப்பில் “உரிமைவிடப்பட்ட ஒரு அடிமைப் பெண் ஒரு சிறுமியை சுமந்து கொண்டு ஹஜ்ரத் உமர் ؓ அவர்களிடம் வந்தாள். அந்த சிறுமியுடைய காலில் ஒலி எழுப்பும் ஆபரணம் இருந்தது. ஹஜ்ரத் உமர் அதை வெட்டி எறிந்துவிட்டு,

مَعَ كُلُّ جَرَسٍ شَيْطَانٍ

**“ஒவ்வொரு மணியுடனும் ஒரு ஷைத்தான் இருக்கிறான் என்று நபி ﷺ அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்” என்று கூறினார்கள்.**

ஒருமுறை, ஒலி எழுப்பும் ஆபரணங்களை அணிந்த ஒரு பெண் அன்னை ஆயிஷா ؓ அவர்களின் வீட்டிற்குள் நுழைந்தாள். அவளைத் தடுத்து நிறுத்தி,

لَا تَدْخُلُ الْمَلَائِكَةُ بَيْتًا فِيْهِ جَرَسٌ

**“மணியோசை வெளிப்படும் வீட்டிற்குள் மலக்குகள்**

**நுழைய மாட்டார்கள்" என்று நபி ﷺ அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன் என்றார்கள்.**

## 9] பெண்கள் பர்தா அணியாமல் வெளியே செல்லக்கூடாது

وَ لَا يَبْدَيْنَ زِيْنَتَهُنَّ

**மேலும், உங்கள் அலங்காரத்தை வெளிக்காட்டாதீர்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.**

"ஒரு பெண் பர்தா அணியாமல் தன் வீட்டை விட்டு வெளியேறும்போது, அவள் திரும்ப வீட்டிற்குள் நுழையும் வரை மலக்குகள் அவளைச் சபித்துக் கொண்டிருப்பார்கள்" என்று ஒரு ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 10] பெண்கள் அலங்கரித்துக் கொண்டு வெளியே செல்லக்கூடாது

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

اَلرَّافِلَةُ فِي الزِّيْنَةِ فِي غَيْرِ أَهْلِهَا كَمَثَلِ ظُلْمَةٍ يَوْمَ الْقِيَامَةِ لَا نُوْرَ لَهَا

**"உங்கள் குடும்பத்தினர் அல்லாத மற்றவர்களுக்கு முன்னால் அலங்கரித்துக் கொண்டு வெளியே செல்வது, மறுமை நாளில் ஒளியே இல்லாத இருளைப் போன்றதாகும்."**

## 11] பெண்கள் நறுமணம் பூசிக்கொண்டு வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது.

اَلْمَرْأَةُ إِذَا اسْتَعْطَرَتْ فَمَرَّتْ بِالْمَجْلِسِ فَهِيَ كَذَا وَ كَذَا يَعْنِي زَانِيَةٌ

**ஒரு கூட்டத்தின் அருகே நறுமணம் பூசிக் கொண்டு**

**கடந்து செல்லும் பெண் இப்படி அப்படிப்பட்டவள். அதாவது அவள் ஒரு நடத்தை கெட்டவள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.**

ஹஜ்ரத் அபூ ஹுரைரா ؓ அவர்கள் சாலையில் நறுமணம் பூசிக்கொண்டு கமகமவென்று நறுமணம் கமழ நடந்து சென்ற ஒரு பெண்ணைச் சந்தித்தார்கள். அவர்கள் அவளிடம், “பள்ளிவாசலில் இருந்து வருகிறாயா?” என்று கேட்டார்கள். அவள், “ஆம்” என்றாள்., “நீ வாசனைத் திரவியம் பூசினாயா?” என்று கேட்டார்கள். அவள், “ஆம்” என்றாள்.

“பள்ளிவாசலுக்கு வாசனைத் திரவியம் பூசி வரும் ஒரு பெண்ணின் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை என்று என் அன்பிற்குரிய நபி ﷺ அவர்கள் கூறுவதை நான் கேட்டுள்ளேன்” என்று கூறினார்கள். உடனே அந்தப் பெண் வீட்டிற்குத் திரும்பிச் சென்று தன் ஆடைகளை நன்கு துவைத்தாள்.

ஆனால் இக்கால பெண்கள் அருகில் ஒரு பெண் கடந்து செல்கிறாள் என்று ஒரு பார்வையற்றவரால் கூட சொல்ல முடியும் அளவிற்கு மிக அதிகமாக நறுமணம் பயன்படுத்துகிறார்கள்.

## 12] பெண்களின் நடை பாதை

பெண்கள் அசம்பாவிதத்தைத் தவிர்ப்பதற்காக ஆண்கள் மிகுதியாக நடந்து செல்லும் பாதைகளின் நடுவில் நடந்து செல்ல வேண்டாம் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

لَيْسَ لَكِنْ اَنْ تَحْتَضِنَّ الطَّرِيْقَ عَلَيْكِنَّ بِحَافَاتِ الطَّرِيْقِ

**நீங்கள் பிரதான சாலையில் நடப்பது சரியல்ல.**

**நீங்கள் சாலையின் ஓரத்தில் நடப்பதை அவசியமாக்கிக் கொள்ளுங்கள்.**

இந்தக் கட்டளைக்குப் பிறகு, சஹாபி பெண்மணிகள் இந்த வழக்கத்தை உறுதியாகப் பின்பற்றினர். மேலும் அவர்களுடைய ஆடைகள் சுவரை உரசும் வகையில் ஒட்டி நடந்தனர்.

## 14] பெண்கள் மஹ்ரமல்லாத ஆண்களுடன் கைகுலுக்கக் கூடாது.

மேலைநாட்டுச் சூழலில், அந்நியர்களும், மஹ்ரமல்லாதவர்களும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது கைகுலுக்கிக் கொள்வார்கள். இஸ்லாம் இதைத் தடை செய்துள்ளது. மஹ்ரமல்லாத ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் கைகுலுக்க அனுமதியில்லை.

ஒரு ஹதீஸில், உமையா பின் ருகைக்கா ﵂ அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை உடன்படிக்கையின் போது நாங்கள் நபி ﷺ அவர்களிடம், “இப்போது எங்கள் பக்கமாக வாருங்கள், நாங்கள் தங்களுடைய திருக்கரங்களின் மீது உடன்படிக்கை செய்கிறோம்” என்று கேட்டோம். அதற்கு “நான் மஹ்ரமல்லாத பெண்களுடன் ஒருபோதும் கைகுலுக்க மாட்டேன். வாய்மொழி ஒப்புதலே போதுமானது” என்று கூறினார்கள்.

மற்றொரு ஹதீஸில், நபி ﷺ அவர்கள் கூறினார்கள், “மார்க்கம் அனுமதித்த உறவில்லாத ஒரு பெண்ணின் கரங்களை யார் தொடுவாரோ அவருடைய உள்ளங்கையில் நியாயத்தீர்ப்பு நாளில் நெருப்புக் கங்கு வைக்கப்படும்.”

ஆயிஷா ﵂ அவர்கள், நபி ﷺ அவர்கள் “மஹ்ரமல்லாத எந்தப் பெண்ணையும் ஒருபோதும் தொட்டதில்லை” என்று கூறினார்கள்.

## 15] பெண்கள் மஹ்ரமல்லாத ஆணுக்குக் கடிதம் எழுதக் கூடாது.

ஒரு பெண் மஹ்ரமல்லாத ஒரு ஆணுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்பினால், அதைத் தனக்கு மஹ்ரமான ஆண்கள் வழியாகவே தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறே அவள் ஒரு கடிதம் எழுத விரும்பினால், அதை மஹ்ரமான ஆண்களின் அனுமதியுடன் தான் எழுத வேண்டும். உதாரணமாக, மார்க்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு விடையை அறிந்து கொள்ள முஃப்திகளுக்கு கடிதப் போக்குவரத்து இவ்விதமாகவே அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 16] ஆண்கள் மற்றவர்களின் வீடுகளுக்குள் எட்டிப் பார்க்கக் கூடாது.

ஆண்கள் பிறருடைய வீட்டிற்குள் நுழைய விரும்பினால், அவ்வீட்டார்களிடம் அனுமதி கேட்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

اَلْاِسْتِئْذَانُ ثَلَاثٌ فَاِنْ اَذِنَ لَكَ وَ اِلَّا فَارْجِعْ

**மூன்று முறை அனுமதி கேளுங்கள். அனுமதி கிடைத்தால், அது நல்லது. இல்லையெனில், நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்.**

வருபவர் வீட்டார்களைத் தவறுதலாகப் பார்க்காமல் இருப்பதற்காக அனுமதி கேட்டல் அவசியமாக்கப்பட்டுள்ளது. நபி ﷺ அவர்கள் ஒருமுறை தங்கள் அறையில் இரும்புக் குச்சியால் தலையைச் சொறிந்துகொண்டிருந்தபோது, ஒருவர் எட்டிப் பார்க்கத் தொடங்கினார். பிறகு நபி ﷺ அவர்களின் கவனத்திற்கு வந்த போது "எனக்கு முன்பே தெரிந்திருந்தால், நான் அவருடைய கண்களைப்

பிடுங்கியிருப்பேன்” என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாகக் கூறினார்கள்.

اِنَّمَا جُعِلَ الْاِسْتِئْذَانُ مِنْ اَجَلِ الْبَصَرِ

“உள்ளே எட்டிப் பார்ப்பவர்களுக்காகவே அனுமதி கேட்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது” என்பது அவருக்குத் தெரியாதா? அனுமதி கேட்பவர் கதவைத் தட்டிய பிறகு அதன் முன் நிற்கக்கூடாது.

மாறாக வலது அல்லது இடது பக்கத்தில் நிற்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதேபோல், கதவு அல்லது ஜன்னலின் துவாரம் வழியாக பார்ப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆதாரப்பூர்வமான அறிவிப்புகளில், நபி ﷺ அவர்கள் கூறியதாகத் வந்துள்ளது:

لَوْ أَمْرَأً اَطْلَعَ عَلَيْكَ بِغَيْرِ اِذْنٍ فَخَذَفْتَهُ بِحِصَاةٍ فَفَقَأْتَ عَيْنَهُ مَا كَانَ عَلَيْكَ مِنْ جَنَاحٍ

**“அனுமதியின்றி ஒருவர் உங்கள் வீட்டிற்குள் எட்டிப் பார்த்தால், ஒரு கூழாங்கல்லை எடுத்து அவரை அடியுங்கள். அது அவரது கண்களை கலங்கச் செய்தாலும் உங்கள் மீது எந்தப் பாவமும் இல்லை”.**

பிறருடைய வீடுகளுக்குள் எட்டிப் பார்ப்பது ஒரு பெரும் குற்றம் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். சில இளைஞர்கள் தங்கள் வீட்டு மாடியில் அமர்ந்து கொண்டு தொலைவில் உள்ள வீடுகளில் இருக்கும் பெண்களை, மிக அருகில் இருப்பது போல தொலைநோக்கி மூலம் பார்க்கிறார்கள். இதுவும் தடைசெய்யப்பட்டுள்ளது.

## 17] ஆண்கள் தங்கள் தாய்மார்களிடமும் அனுமதி கேட்க வேண்டும்.

ஒரு ஹதீஸில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஒரு மனிதர் நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம், வீட்டிற்குள் நுழைய என் தாயிடமும் அனுமதி கேட்க வேண்டுமா என்று கேட்டார். அதற்கு "ஆம், உன் தாயிடமும் அனுமதி கேட்க வேண்டும்" என்றார்கள். அதற்கு அவர் "நான் அவருடன் ஒரே வீட்டில் தான் வசிக்கிறேன்" என்று கூறினார்.

அதற்கு நபி ﷺ அவர்கள், "ஆம் அனுமதி கேளுங்கள்" என்றார்கள். அதற்கு அவர், "நான் தான் அவருக்கு எல்லா பணிவிடைகளையும் செய்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

இதனைக் கேட்ட நபி ﷺ அவர்கள், "உன் தாயை ஆடையின்றிப் பார்க்க விரும்புவீரா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "இல்லை" என்றார். உடனே நபி ﷺ அவர்கள், "அதனால் தான் நீ அனுமதி கேட்க வேண்டும் என்று சொல்கிறேன்" என்றார்கள்.

ஹஜ்ரத் இப்னு மஸ்ஊத் رضي الله عنه அவர்களின் மனைவி, ஹஜ்ரத் ஸைனப் رضي الله عنها அவர்கள் கூறுகிறார்கள், ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் ஏதேனும் ஒரு தேவைக்காக வீட்டிற்குள் வரும்போது, முதலில் வாசலில் நின்று, தும்மிவிட்டு ஒரு சத்தம் எழுப்பி, பின்னர் உள்ளே நுழைவார்கள்.

இப்னு அரபி رحمه الله அவர்கள் எழுதுகிறார்கள், பிறருடைய வீட்டில் நுழைய அனுமதி கேட்பது அவசியமாகும். ஒரு வேளை அது உங்களுடைய சொந்த வீடாக இருந்தால், அனுமதி கேட்பது கட்டாயமில்லை. ஆனால் உங்கள் அம்மாவும் சகோதரியும் அந்த வீட்டில் உம்முடன் ஒன்றாக வசித்தால், நீ வாசலில் நின்று அனுமதி கேட்க வேண்டும்.

சில சமயங்களில் பெண்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக தரையில் பலமாக உதைக்கவும். ஏனென்றால் சில சமயங்களில் அம்மாக்களும் சகோதரிகளும் கூட நாம் பார்க்க விரும்பாத நிலையில் இருக்கலாம்.

## 18] ஹஜ்ரத் உமர் ﵁ அவர்களின் பேணுதல்

ஒருமுறை ஹஜ்ரத் உமர் ﵁ அவர்கள் தன் வீட்டு வாசலில் அமர்ந்திருப்பதை அவ்வழியாக சென்ற ஒருவர் கண்டார். அவர் அவர்களுக்கு சலாம் கூறிவிட்டு முன்னேறிச் சென்றார். சிறிது நேரம் கழித்து, அவர் திரும்பி வரும் வழியில் அதே பாதையில் வந்த போது, ஹஜ்ரத் உமர் ﵁ அவ்வாறே அமர்ந்திருப்பதைக் கண்டார். அவர் ஆச்சரியப்பட்டு, அமீருல் முஃமினீனிடம், “அப்போதிருந்தே இங்கேயே அமர்ந்துள்ளீரா ?” என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், “என் மகள் ஹஃப்ஸா இன்று வீட்டிற்கு வந்திருக்கிறார். என் மனைவி வீட்டில் இல்லை. எனவே அவர் வீட்டில் தனியாக இருக்கிறார்”. அதனால்தான், அவருடன் வீட்டில் தனியாக அமர்ந்திருப்பதை விட, இங்கே வாசலில் அமர்ந்திருக்க விரும்பினேன் என்று கூறினார்கள்.

## 19] மக்கள் நடமாடும் தெருக்களில் ஆண்கள் அமரக் கூடாது.

தெருக்களில் கடந்து செல்லும் பெண்கள் மீது பார்வை படும் விதத்தில் ஆண்கள் அதன் பாதைகளில் அமரக்கூடாது. அவ்வாறு அமர்வதை ஷரீஅத் தடுத்துள்ளது. சில குறும்புக்கார இளைஞர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும்போது, தெருக்களில் நின்று அவர்களை கேலி செய்து சீண்டுகிறார்கள்.

முதலாவதாக, பெண்கள் வீட்டை விட்டு தனியாக வெளியேறக்கூடாது. நிர்பந்தமாக வெளியேற வேண்டுமானால் பல பெண்கள் ஒன்று சேர்ந்து குழுவாகச் செல்ல வேண்டும். மேலும் அக்கம் பக்கத்தில் உள்ள மற்றவர்கள் அப்படிப்பட்ட இளைஞர்களைப் பார்த்தால், அவர்களுடைய போதை இறங்கும் வரை நையப் புடைக்க வேண்டும்.

## 20] ஆணின் முன்பாக மற்றொரு பெண்ணை வர்ணித்தல்

ஒரு பெண் தன் கணவனின் முன்னிலையில் மற்றொரு பெண்ணின் நிலையை வெளிப்படையாக விவரிக்கக்கூடாது என்று ஷரியத் கட்டளையிட்டுள்ளது. ஏனெனில் அதனால் அவனுடைய உள்ளத்தில் அப்பெண்ணின் அழகும், வசீகரமும் இடம்பிடித்து அவள் மீது காதல் கொள்ள வாய்ப்புள்ளது.

لَا تُبَاشِرُ الْمَرْاَةُ الْمَرْاَةَ فَتَنْعَتَهَا لِزَوْجِهَا كَاَنَّهُ يَنْظُرُ اِلَيْهَا

**ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் கலந்துறவாடிய பிறகு தன் கணவனுக்கு அவன் அவளை நேரடியாகக் காண்பதைப் போல் வர்ணிக்க வேண்டாம் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.**

## 21] கணவன் தன் மனைவியின் இரகசியத்தை வெளிப்படுத்தக்கூடாது.

ஒரு ஆண் தன் மனைவியுடன் தனிமையில் கழித்த தருணங்களை வேறு எந்த ஆணிடமும் கூறுவதை நபி ﷺ அவர்கள் தடை செய்தார்கள்.

اِنَّ مِنْ أَشَرُّ النَّاسِ عِنْدَ اللهِ مَنْزِلَةَ الرَّجُلِ يَفْضِي اِلَي
اِمْرَاَتِهِ وَ تَفْضِيَ اِلَيْهِ ثُمَّ يَنْشُرُ سِرَّهَا

**தன் மனைவியுடன் தனியாக இருந்து, பின்னர் தனிமையில் நடந்தவற்றின் இரகசியத்தை வெளிப்படுத்துபவனே அல்லாஹ்வின் பார்வையில் மிக மோசமானவன் என்று ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.**

எனவே உடலுறவைப் பற்றி சூசகமாக குறிப்பிடுவதும் கூட வெறுக்கத்தக்கது. ஆனால் நிர்பந்தங்கள் இதில் அடங்காது என்று இமாம் நவவி ﵀ கூறியுள்ளாரகள்.

## 22] ஆணும் பெண்ணும் இச்சையைத்தூண்டும் ஆபாசப் பேச்சுக்களைத் தவிர்த்தல்

ஒரு ஆண் மற்ற ஆண்களுடன் அவ்வாறே ஒரு பெண் மற்ற பெண்களுடன் அன்பு மற்றும் காதல் சார்ந்த விஷயங்களைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அதனால் அவர்களுடைய இச்சைத் தூண்டப்பட்டு, அவர்களுடைய உள்ளங்கள் பாவம் செய்யத் தயாராகும். கேலியாக, விளையாட்டாகக் கூட சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய ஆபாச வார்த்தைகளைக் கூறக்கூடாது.

## 23] இரு ஆண்களோ இரு பெண்களோ ஒன்றாக உறங்கக்கூடாது.

இரு ஆண்களோ அல்லது இரு பெண்களோ ஒரே போர்வையில் ஒன்றாக உறங்குவதை இஸ்லாம் தடை செய்துள்ளது.

وَ لَا يَفْضَي الرَّجُلُ اِلَي الرَّجُلِ فِي ثَوْبٍ وَاحِدٍ وَّ لَا تَفْضَي الْمَرْاَةُ اِلَي الْمَرْاَةِ فِي ثَوْبٍ وَاحِدٍ

**ஒரு ஆண் மற்றொரு ஆணுடன் ஒரே போர்வைக்குள் ஒன்றாக உறங்கக்கூடாது என்றும், ஒரு பெண் மற்றொரு**

**பெண்ணுடன் ஒரே போர்வைக்குள் ஒன்றாக உறங்கக்கூடாது என்றும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.**

ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக இருப்பது கூட விபச்சாரத்திற்கு ஒரு காரணமாக அமைகிறது. ஹஜ்ரத் ஷாஹ் வாலியுல்லாஹ் முஹத்திஸ் திஹ்லவி ﷀ அவர்கள் கூறுகிறார்கள், இவ்விஷயம் காமத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. இது ஆண்கள் மேலும் பெண்களை ஓரினச்சேர்க்கையின் பழக்கமுடையவர்களாக ஆக்கிவிடுகிறது.

## 24] படுக்கைகளைப் பிரித்தல்.

مُرُوْا اَوْلَادَكُمْ بِالصَّلَاةِ وَ هُمْ أَبْنَاءَ سَبْعَ سِنِيْنَ وَ اضْرِبُوْهُمْ عَلَيْهَا وَ هُمْ أَبْنَاءَ عَشَرَ وَ فَرِّقُوْا بَيْنَهُمْ فِي الْمَضَاجِعِ

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்கள் பிள்ளைகளுக்கு ஏழு வயதாகும்போது, அவர்களைத் தொழும்படி கட்டளையிடுங்கள். அவர்களுக்குப் பத்து வயதாகும்போது, தொழாததற்காக அவர்களை அடியுங்கள். மேலும் தனித்தனிப் படுக்கைகளில் அவர்களை உறங்க வையுங்கள்.**

இந்த வயதிலிருந்தே பொதுவாக மனிதர்களுக்குப் பாலியல் நாட்டங்கள் வரத் தொடங்குகின்றன. எனவே, பிள்ளைகளைத் தனித்தனிப் படுக்கைகளில் உறங்கச் செய்வது அவசியமாகும். உறக்கத்திலோ அல்லது விழித்திருக்கும்போதோ பொதுவாக உடல்கள் நெருக்கமாக இருக்கும்போது, சைத்தான் எண்ணத்தில் ஒருவித பலவீனத்தை உருவாக்குகிறான். ஒருவருக்கொருவர் இச்சையைத் தணித்துக்கொள்வது இலேசாகிவிடுகிறது.

இந்த ஹதீஸை அடிப்படையாக வைத்து இமாம் ராஜி ﵀ கூறியுள்ளார்கள்.

لَا يَجُوْزُ لِلرَّجُلِ مُضَاجَعَةَ الرَّجُلِ وَ أَنْ كَانَ كُلُّ وَاحِدٍ مِنْهُمَا فِيْ جَانِبِ الْفِرَاشِ

இரண்டு ஆண்கள் படுக்கையின் எதிர் எதிர் ஓரங்களில் இருந்தாலும், ஒன்றாக உறங்குவதோ அல்லது படுப்பதோ அனுமதிக்கப்பட்டதல்ல. நவீன அறிவியலின் வெளிச்சத்தில் உளவியலாளர்களும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றனர்.

## 25] திருமணத்தில் தேவையற்ற தாமதம்

திருமணத்தில் ஏற்படும் தேவையற்ற தாமதமே விபச்சாரம் மற்றும் இன்னபிற ஒழுக்கக்கேட்டிற்கு ஒரு முக்கிய காரணமாகும். பெற்றோர்கள் தங்கள் மகன் படித்து, வேலைக்குச் சென்று வீடு கட்டிய பிறகே அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதற்குள் அவனுக்கு முப்பது வயதாகிவிடுகிறது. சில சமயங்களில் மூத்த மகனுக்கு தாமதமாகத் திருமணம் செய்து வைக்கிறார்கள். அதற்குள் அவனுக்குக் கீழுள்ள இளைய பிள்ளைகளும் பருவ வயதை அடைந்துவிடுகிறார்கள்.

சில சமயங்களில் இளைஞர்கள் தங்களுக்கு ஒப்பற்ற ஒரு பெண்ணைத் தேடுகிறார்கள். ஆனால் அவர்கள் விரும்பும் அழகான பெண் அவர்களுக்கு அவ்வளவு இலகுவாகக் கிடைப்பதில்லை. சில சமயங்களில் மூத்த சகோதரன், முதலில் தன் தம்பி தங்கைகளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு, பிறகு நான் திருமணம் செய்து

கொள்வேன் என்று நினைக்கிறான். அதற்குள் அவனுக்கு நாற்பது வயதாகிவிடுகிறது.

ஒரு ஆணுக்கு திருமணத்திற்கான சிறந்த வயது இருபத்தைந்தும், ஒரு பெண்ணுக்கு சிறந்த வயது பதினெட்டுமாகும். இதைத் தாண்டி காலம் செல்லச் செல்ல, தீமைக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். பிள்ளைகள் வளர்ந்த பிறகும் பெற்றோர்கள் திருமணத்தைத் தாமதப்படுத்தினால் அப்பிள்ளைகள் செய்யும் பாலியல் ரீதியான பாவங்களுக்குரிய தண்டனையில் அவர்களின் பெற்றோர்களும் சமபங்கு பெறுவார்கள்.

## தாமதமே தவறுக்குக் காரணம்

ஹஜ்ரத் அலி ﵁ அவர்கள் என்னுடைய அன்பர் ﷺ அவர்கள் மூன்று விஷயங்களை விரைவுபடுத்த அறிவுறுத்தினார்கள்:

1. தொழுகையை அதன் நேரம் வரும்போது தொழுவதில்
2. இறந்தவர்களை அடக்கம் செய்வதில்
3. ஒரு பெண்ணுக்குத் தகுந்த துணை அமையும் போது திருமணம் செய்து வைப்பதில்..

சில வீடுகளில், பெண்கள் இருபத்தைந்து வயதை அடைந்த பிறகும், அவர்களின் பெற்றோர் சிறந்த வரனைத் தேடுவதில் மும்முரமாக இருக்கிறார்கள். இவ்வளவு தாமதம் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்.

இன்ன வீட்டில் ஒரு இளம் பெண் இருப்பதையும், பெற்றோர் அவளுடைய திருமணத்தைத் தாமதப் படுத்துவதையும் நம் பெரியவர்கள் அறிந்தால், அவர்கள்

அந்த வீட்டுக் கிணற்றிலிருந்து கூட தண்ணீர் குடிக்க மாட்டார்கள். ஒரு பெண்ணுக்குத் தாமதமாகத் திருமணம் நடந்தால், திருமணத்திற்குப் பிறகு குழந்தை பிறப்பதில் பலவகையான சிரமங்கள் ஏற்படலாம் என்பது இதனால் விளையும் மிக முக்கியமான தீங்குளில் ஒன்றாகும்.

ஒரு பையனுக்குத் திருமணம் தாமதமானால், அவன் பெரும்பாலும் பாலியல் நோய்களுக்கு ஆளாகிறான். ஏனெனில் அவன் தன்னுடைய காமத் தாகத்தை ஏதேனும் ஒரு வழியில் தணித்துக் கொண்டே இருப்பான். பிறகு அவனுக்குத் திருமணம் ஆகும்போது, அவன் தன் மனைவியுடன் உடலுறவு கொள்ளத் தகுதியற்றவனாக இருப்பான் என்பது தெரியவரும்.

ஒரு பையன் பதினைந்து வயதில் பருவத்தை அடைந்தால், ஏறத்தாழ முப்பது வயது வரை கற்புடன் இருப்பது இயலாத காரியம் என்று சொல்லாவிட்டாலும் மிகவும் சிரமமானது என்று சொல்லலாம். அவன் தன் பெற்றோருக்குத் தெரியாமல், ஏதேனும் ஒரு பெண்ணுடன் இரகசியமாக முறையற்ற உறவு வைத்திருப்பான்.

அதேபோல், ஒரு பெண்ணுக்கு இருபத்தைந்து வயதானால், அவளும் தன் பெற்றோருக்குத் தெரியாமல் ஏதேனும் அந்நிய ஆடவருடன் இரகசியமாகப் பழக முயற்சிப்பாள். இறுதியாக தன் பெற்றோருக்குப் பெருத்த அவமானத்தையும், தலைகுனிவையும் தேடித்தருவாள். அதிலும் குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களின் திருமணம் பெரும்பாலும் நீண்ட காலம் தாமதப்படுத்தப்படுகிறது, இதுவும் மிக ஆபத்தானதாகும்.

சில கிராமங்களில், நிலபுலன்கள் மேலும் சொத்துக்களைப் பிரிக்க வேண்டிய நிலை உருவாகக் கூடாது என்பதற்காகப்

பெண்களுக்குத் திருமணமே செய்து வைப்பதில்லை. சில அறிவீனர்கள் தம் பெண் பிள்ளைகளை குர்ஆனுடன் திருமணம் செய்து வைத்து விடுகிறார்கள். (அதாவது குர்ஆன் ஓதுவதே முழு நேர ஈடுபாடாக ஆகி திருமணத்தை மறந்து விட வேண்டும்). இது எவ்வளவு அபத்தமானது.

## மானிடர்க்கு ஆகாப் பால் மாக்களுக்கே உணவாகும்.

ஒரு குறிப்பிட்ட வீட்டில் ஒரு பெண் இருப்பதாகவும், அவளுடைய பெற்றோர் அவளின் திருமணத்தைத் தாமதப்படுத்துவதாகவும் சையத் அதாவுல்லாஹ் ஷாஹ் புகாரி ﵀ அறிந்தார்கள். அவர்கள் அப்பெண்ணின் தாயிடம் அவளுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்குமாறு கூறினார்கள். அதற்கு அந்தத் தாய், “அவளுக்கு இப்போது என்ன பெரிய வயதாகிவிட்டது? அவள் இன்னும் மழலைப் பருவத்தைக் கூட முழுமையாகக் கடக்காத இளங்குழந்தையாகவே உள்ளாள் என்று கூறினாள்.

அதற்கு ஹஜ்ரத் ஷாஹ் சாஹிப் அவர்கள், அம்மையே! மானிடர்க்கு ஆகாப் பால் மாக்களுக்கே உணவாகும். அதாவது பால் கெட்டுப்போனால், துர்நாற்றம் வீசும். அதனால் அந்தப் பால் மனிதர்களுக்குப் பதிலாக நாய்களுக்கே பயன்படும் என்றும் கூறினார்கள்.

## மாண்பானவர்களும் மனிதர்கள் தானே!

ஒரு நகரத்தில் நபி ﷺ அவர்களின் வழித்தோன்றல்களில் வந்த ஒரு பெண் மிகவும் நல்லவராக, பய பக்தியுள்ளவராக வாழ்ந்து வந்தாள். அவள் திருமணம் ஆகாதவளாக இருந்தாள். அவள் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவு முழுவதும் நஃபில் தொழுகையில் கழிப்பாள். அப்பகுதிப் பெண்கள் அவளை மிகவும் புகழ்பவர்களாக இருந்தனர்.

அவர்கள் அவளிடம் துஆவிற்கு கோரிக்கை வைப்பவர்களாக, அவளுக்கு மனமுவந்து அன்பளிப்பு வழங்குபவர்களாக இருந்தனர். ஒருமுறை, அவளுக்கு உடல்நிலை மிகவும் மோசமடைந்து கவலைக்கிடமானது. அக்கம்பக்கத்து இளம் பெண்கள் அவளுக்குப் பணிவிடை செய்வதற்காக அவளுடைய வீட்டில் ஒன்று கூடினர்.

அவர்களுக்கிடையே பேச்சு நடந்துகொண்டிருந்தபோது, "எங்கள் வாழ்நாள் முழுவதற்கும் பயன்படும் ஒரு வஸிய்யத்தை எங்களுக்கு கூறுங்கள்" என்று ஒரு பெண் கூறினாள். "ஆம், நான் உங்களுக்குத் தேவையான வாழ்வின் சிறந்த உபதேசத்தைக் கூறுகிறேன்.

அதாவது, உங்களுக்குப் பொருத்தமான வரன் கிடைத்து விட்டால் திருமணம் செய்துகொள்வதில் ஒருபோதும் தாமதிக்க வேண்டாம். இதைக் கேட்டதும், அந்தப் பெண்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களில் ஒருவள், "நீங்களே இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை, ஆனால் எங்களை விரைவாகத் திருமணம் செய்து கொள்ளும்படி அறிவுரை கூறுகிறீர்களே" என்று கேட்டாள்.

"நான் என் மனதிலுள்ளவற்றை எப்படி உங்களிடம் வெளிப்படுத்துவேன் என்று தெரியவில்லை. எனக்கு திருமணம் தாமதமானதால் எனக்குள் காம ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று என் ஆன்மா அவ்வப்போது என்னைத் தூண்டிக் கொண்டிருந்து". என் உள்ளம் தொழுகையிலோ அல்லது ஓதுவதிலோ லைத்திருக்காது. நான் பகலில் நோன்பு நோற்று, இரவில் விழித்திருப்பேன், ஆனாலும், காமத்தின் காரணமாக என் நிலை மிக மோசமடைந்திருக்கும்.

நான் இரவில் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும் போது, தெருவில் ஒரு வயதான காவலாளி கத்திக்கொண்டே கடந்து சென்றால், அந்த முதியவரை என்னிடம் அழைத்து என் காம ஆசையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று என் உள்ளம் விரும்பும்.

நான் பலமுறை எழுந்து கதவைத் திறக்க முயல்வேன். ஆனால் என் வாழ்நாள் முழுவதும் நான் கட்டியெழுப்பிய மரியாதை அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அவமானத்தையும், இவள் நபி ﷺ அவர்களின் வழித்தோன்றல்களில் வந்தவளாக இருந்தும் எப்படி இப்படி ஒரு காரியத்தைச் செய்தாள் என்று மக்கள் பேசுவதையும் நான் பயப்பட்டு பின்வாங்கி விடுவேன்.

இதனால் எந்த நிம்மதியும் கிடைக்காமல், வேதனையிலேயே இரவைக் கழிப்பேன். நான் இந்தத் துன்பத்தை அனுபவித்திருக்கிறேன். எனவே நீங்கள் இந்தத் துன்பத்தையும் அனுபவிக்கக் கூடாது என்று விரும்புகிறேன்.

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் சத்தியத்தைக் கூறியுள்ளார்கள்: ஒரு பெண்ணுக்குத் தகுந்த துணை அமைந்துவிட்டால் உடனடியாக அவளுக்குத் திருமணம் செய்து வைத்துவிடுங்கள். மஹரைப் பொறுத்தவரை, அது ஒரு சடங்கான வழக்கமே தவிர வேறில்லை.

அல்லாஹ் நம்மை அனைத்து மானக்கேடான காரியங்களை விட்டும் பாதுகாப்பை வழங்குவானாக. ஆமீன்.

## குறிப்புகள்: